# METHODIST GIRLS' COLLEGE
## TRINCOMALEE

# AWARDING CEREMONY




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# METHODIST GIRLS' COLLEGE

# TRINCOMALEE

# AWARDING CEREMONY
## 2007 - 2008

## 11-07-2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MOTTO

***'UTMOST FOR THE HIGHEST'***

**மகுடவாசகம்**

"உச்ச உயர்வை அடைய முழு முயற்சி"

## VISION

***'A COMMUNITY WITH SKILLS, VALUES, KNOWLEDGE AND TOTAL PERSONALITY'***

**தூரநோக்கு**

**"அறிவு, திறன், மேம்பாடுகளுடன் பூரண ஆளுமையும் கொண்ட சமுதாயம்"**

## MISSION

***Providing learning facilities guidance and training to students to face the challenges of the 21st century to go out as citizens with values and skills together with a total personality for the development of their community***

**பணிக்கூற்று**

21ம் நூற்றாண்டிற்கான சவால்களை எதிர்கொள்ளும் வகையில் மாணவர்களுக்கு கற்றல் வசதிகளையும், வழிகாட்டல்களையும், பயிற்சிகளையும் . அளித்தல் மூலம் பெறுமதிமிக்க, திறன்கள் நிறைந்த, பூரண ஆளுமையுடையவர்களாக வெளியேற்றி தமது சமூகத்தின் அபிவிருத்திக்கு உழைப்பவராக்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

METHODIST GIRLS' COLLEGE
TRINCOMALEE

# SCHOOL HYMN

We build our School on Thee oh Lord,
To thee we bring our Common need,
The Loving heart the helpful word
The tender thought the kindly deed
With these we pray
Thy Sprit May,
Enrich and bless our School always.
We work together in Thy Sight,
We live together in Thy Love,
Guide thou faltering steps a – right,
And lift our thoughts to Heaven above,
Dear Lord we pray
Thy sprit May
Be Present in our School always.
Hold thou each hand to keep it just
Touch Thou our lips and make them pure
If thou art with us Lord we must
Be faithful friends and comrades sure
Dear Lord we pray
Thy sprit May
Be Present in our School always.
We change, but thou art Still the same
The same good master, Teacher, Friend,
We change but Lord we bear Thy name
To journey with it to the end
And so we pray
Thy sprit May
Be Present in our School always.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| SCHOOL | :- | **T/METHODIST GIRLS' COLLEGE**<br>D.S.D School |
| Address | :- | Dockyard Road, Trincomalee |
| E_mail Address | :- | trincomgc@yahoo.com |
| District | :- | Trincomalee |
| Education Zone | :- | Trincomalee |
| School Grade | :- | 1 AB |
| Telephone No / Fax No | :- | 026-2222437 |
| School ID No | :- | 29102 |
| School Census No | :- | 16066 |
| G.S Division | :- | Villundy (244E) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்ப்பதும் வளர்ச்சியின் அளவினைக் காணவிழைவதும், வழிநடத்திய இறைவனுடைய வழிகளைக் கண்டு கொள்வதும் என்று சொன்னால் மிகையாகாது. திருக்கோணமலை மெதடிஸ்த கல்லூரியின் வரலாற்றைத் திரும்பிப் பார்க்கும் போது இப்பாடசாலையை ஸ்தாபித்த பிரித்தானிய மெதடிஸ்த மிஷனரிமாரை அவர்களின் இந்நாட்டுப் பெண்களுக்குக் கல்வியூட்ட வேண்டும் என்ற அவாவினால் சீதோஷ்ணநிலை உணவு, மொழி, கலாச்சாரம் போன்றவற்றால் வேறுபட்ட நிலையிலும் போக்குவரத்து சீரற்ற சூழ்நிலையிலும் இலங்கை முழுவதிலும் பணியாற்றினர். இவ்வரிசையிலே இப்பாடசாலையும் 1819ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

பலவருட வளர்ச்சியில் இன்று வானளாவி நிற்கும் பாடசாலையின் வளர்ச்சிக்காக முன்னின்று உழைத்த அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், திருச்சபைத் தலைவர்கள், பணியாளர்களுக்காக கடவுளுக்கு நன்றி செலுத்துவோம்.

கல்வியிலும் நல்லொழுக்கத்திலும் மாணவிகள் முன்னேற வேண்டும் என்பதற்காக அயராது உழைக்கும், அதிபர், ஆசிரியர்கள் பணி பாராட்டத்தக்கது. அவ்வப்போது ஆலோசனையும் வழிகாட்டலும் ஒத்துழைப்பும் தரும் பெற்றோர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், நலன்விரும்பிகளை வாழ்த்துகிறேன். கல்லூரியின் வளர்ச்சி, உயர்ச்சியில் முன்னின்று உழைக்கும் பிள்ளைகள், சிற்றூழியர்களின் பங்கும் குறிப்பிடத்தக்கது.

இனிவரும் காலங்களில் இக்கல்லூரி விழா பிள்ளைகளிடையே கல்வியில் இன்னும் உயரவேண்டும் என்ற அவாவினைத் தோற்றுவிக்கவும், கற்றுக்கொள்பவற்றை செவ்வனே செயற்படுத்தவும் எனது ஆசியினை வழங்குகின்றேன்.

**இறையாசிகளுடன்**

**அருட்செல்வி. ஜோதினி சீனித்தம்பி,**
முகாமைக் குரு,
மெதடிஸ்த திரு அவை
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

திருக்கோணமலை மாவட்டத்தில் பழமையும் பெருமையும் மிக்க இக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவையொட்டி ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

திருக்கோணமலை மாவட்டத்தின் தமிழ் மாணவர்களுக்கு குறிப்பாக கிராமத்துப் பிள்ளைகளுக்கு இக்கல்லூரி ஆற்றிய, ஆற்றி வருகின்ற சேவை அளப்பரியது.

இக்கல்லூரியில் பயின்ற பல மாணவர்கள் இன்று சகல துறைகளிலும் பணி புரிந்து கொண்டிருப்பதை யாவரும் அறிவர்.

கல்விச் செயற்பாடுகளில் மட்டுமன்றி கல்வி சாரா செயற்பாடுகளிலும் இக்கல்லூரி நாடளாவிய ரீதியில் தனி முத்திரை பதித்துள்ளது.

தற்பொழுது திருமதி.உ.ஜோதிநாதன் அதிபரின் நிர்வாகத்தில் இக்கல்லூரி தனக்கெனத் தனியிடம் பெற்றுத் திகழ்கின்றது. இக்கல்லூரி மேலும் மேலும் சகல துறைகளிலும் வளர்ச்சி பெற இறைவனை இறைஞ்சுகிறேன்.

**வண J. ஞானப்பிரகாசம்**
**கிறேஸ் ஆலயம்,**
**முகாமைக்குரு,**
**3ம் கட்டை,**
**உப்புவெளி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message
# from
# Chief Secretary,
# Eastern Province

I am proud to send a felicitation message to the Awarding Ceremony of Methodist Girls' College, one of the leading schools in Trincomalee.

A good school is a pillar of strength to society and as such I am privileged to have been able to watch with great interest the growth of this school. Their achievements not only in the academic field, mainly in producing noteworthy examination results, but also in extra curricular activities are highly appreciable.

I wish Methodist Girls' College would continue to flourish and prove to be a model school in the province. Let me also take this opportunity to congratulate the principal and staff on their dedication in moulding the students in their capable hands.

**V.P. Balasingham**
**Chief Secretary,**
**Eastern Province.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

திருக்கோணமலை மெதடிஸ்த மகளிர் கல்லூரி பரிசளிப்பு விழாவையொட்டி மலருகின்ற சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தியை அளிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். திருக்கோணமலை மாவட்டத்தின் கல்வியை முன்னெடுத்துச் செல்லும் பாடசாலைகளில் தி/ மெதடிஸ்த மகளிர் பாடசாலையும் ஒன்றாகும் இக்கல்லூரி ஒன்றரை நூற்றாண்டுகளுக்குமதிகமான வரலாற்றைக் கொண்டதாகும்.

'மனிதனுள் மறைந்திருக்கும் பூரணத்துவத்தை வெளிக்கொணர்வதே கல்வி' என்ற சுவாமி விவேகானந்தர் அவர்களின் கூற்றுக்கமைய கல்வியின் பிறிதொரு முக்கிய பண்பாடான இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை ஊக்குவிப்பதோடு இச்சஞ்சிகையின் வெளியீடும் இப்பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்கு மேலும் மெருகூட்டுவதாக அமைந்துள்ளது. அத்தோடு பரிசளிப்பு விழாவையொட்டிய இச்சஞ்சிகை ஆக்கம் கல்லூரி மாணவிகள் தம்முள் மறைந்துள்ள திறமைகளை வெளிக்கொணர்வதற்கும் நவீன உலகின் மாற்றங்களுக்கேற்பத் தம்மைத்தயார் செய்து கொள்வதற்கும் ஒரு முன் மாதிரியான பயிற்சிக் களமாக அமைந்துள்ளது.

இச்சஞ்சிகை கல்லூரியின் வளர்ச்சியோடு சம்பந்தப்பட்ட வரலாற்றுப் பதிவுகளையும், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வியியலாளர்கள் ஆகியோரின் ஆக்கங்களையும் பதிவு செய்வதற்கு வழி அமைத்துக் கொடுக்கும் ஒரு மலராகவும் அமைவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

இக்கல்வி நிறுவனம் ஒரு வளர்ச்சியடைந்து வரும் நிறுவனமாகத் தனது பணிகளை ஆற்றிக் கொண்டிருப்பதை நான் அறிவேன். மாவட்ட மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் சாதனைகளை ஆற்றி வளர்ச்சி அடைந்து வரும் கல்விக் கூடமாக விளங்குவது எம் அனைவருக்கும் பெருமை தருவதாகும்.

இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், நலன் விரும்பிகள் யாவரையும் பாராட்டுவதோடு எதிர்காலத்தில் இவர்களின் பணி சிறப்பாக மிளிர எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு.எஸ்.தண்டாயுதபாணி,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
மாகாணக் கல்வித் திணைக்களம்,
கிழக்கு மாகாணம்,
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலயக் கல்விப்பணிப்பாளர் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

திருக்கோணமலை மாவட்டத்தில் ஏறக்குறைய ஒன்றரை நூற்றாண்டுகால வரலாற்றினைக் கொண்டதும் முதலாவது 1AB பாடசாலை என்ற பெயரையுடையதும் தி/மெதடிஸ்த பெண்கள் கல்லூரி ஆகும். 2007 -2008 ஆம் ஆண்டுக்குரிய பரிசளிப்பு விழாவின் போது இச் சஞ்சிகையொன்றினை வெளியிடுவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்

கலைத்திட்டத்தை மாணவரது அனுபவங்களாக மாற்றுவதே கற்றற்செயன் முறையாகும். கல்வித்தொகுதியுள் அதாவது கல்விமுறைமையுள் காணப்படும் ஒவ்வொரு பாடசாலையையும் பயன்தரும் பாடசாலையாகக் கட்டியெழுப்புவதிலேயே ஒவ்வொரு நாட்டினதும் கல்வி முகாமைத்துவச் செயற்பாடு கவனம் செலுத்துகின்றது. கலைத்திட்டச் செயற்பாடுகளுடன் பிள்ளைகளை எதிர்காலத்திற்கான சிறந்த மனிதர்களாக உருவாக்கும் நோக்குடன் அதற்கான வேலைத்திட்டங்களையும், ஒழுங்கமைப்புக்களையும் கொண்டியங்கும் போதுதான் ஒரு பாடசாலை சமூகத்தில் வெற்றி பெற முடியும். பரிசளிப்புவிழாவுடன் இந்தச் சஞ்சிகை வெளியீடும் பாடசாலையின் இணைப்பாடவிதானச் செயற்பாட்டில் இப்பாடசாலைக்கு மெருகூட்டுவதாக உள்ளது. இந்த வகையில் தி/மெதடிஸ்த பெண்கள் கல்லூரி சமூகத்தில் சிறந்த வகையில் தனது பணிகளை ஆற்றிக் கொண்டிருப்பதை நான் அறிவேன்.

இப்பாடசாலை மாவட்டமட்டத்திலும் தேசிய மட்டத்திலும் முன்னணி வகித்துக்கொண்டு வருகின்ற ஒரு பாடசாலை என்பதில் நாம் பெருமை கொள்ளத்தான் வேண்டும். இதற்கு அர்ப்பணிப்புடன் கூடிய அதிபர்,ஆசிரியப் பெருந்தகைகளின் சேவையும் , ஊக்கமுடன் கற்கும் மாணவச் செல்வங்களின் பங்களிப்பும் , இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வருவதையிட்டுப் பெருமை அடைகிறேன்.

மாணவர்களின் வெற்றிகளையும், ஆக்கங்களையும், உணர்வுகளையும், பாடசாலை நிகழ்வுகளையும் வெளிக்கொணர வைக்கும் ஒரு சந்தர்ப்பமாகவும் சிறந்த பாடசாலை வரலாற்று ஆவணமாகவும் அமையும் இச் சஞ்சிகையை வெளியிடுவது வினைத்திறன் மிக்க இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு அவசியமானதுடன் வரவேற்கக் கூடியதுமாகும். இப்பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் மாணவர்களின் புகழ் எங்கும் வளர வேண்டுமென மனமார வாழ்த்துகிறேன்.

நன்றி

திரு.அ.விஜயானந்தமூர்த்தி
வலயக்கல்விப் பணிப்பாளர்
வலயக்கல்வி அலுவலகம்
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message
# from
# Member of Parliament,
# Trincomalee District

I have great pleasure in extending my felicitations of the Methodist Girls' College, Trincomalee on the occasion of the 2007 and 2008 Prize Giving.

Methodist Girl's College, Trincomalee is one of Trincomalee's oldest educational institutions and has over the decades rendered valuable service in the field of Education. The existence of the hostel facilities also enables the school to impart education to children from rural areas. Methodist Girls' College is a school that provides educational facilities to children from all walks of life and is therefore deserving of maximum encouragement.

The school has won several awards at the District and National level.

The school continues to make progress, and I extend to the school my best wishes for the future.

I extend my warm congraulations to the Principal, the staff and the students of the school, for their achievements up to now, and I am confident that the school will continue to progress and render valuable service in the field of education.

R. Sampanthan

**R. Sampanthan**
**Member of Parliament**
**Trincomalee District**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்ற உறுப்பினர் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

## மனமார வாழ்த்துகின்றேன்

திருகோணமலை நகரில் மிகவும் பழமை வாய்ந்த தி/மெதடிஸ்த மகளிர் கல்லூரி தனது 2007/2008 ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழாவினை எதிர்வரும் ஜூலை மாதம் 11 ஆந் திகதி சிறப்பாக நடத்தவிருப்பதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். இவ்விழா இக்கல்லூரியின் கடந்த காலச் சாதனைகளைப் படம் போடுவதோடு வருங்கால சாதனைகளுக்கு உத்வேகமாக அமையுமென்பதில் எவ்வித ஐயமுமில்லை.

கல்வி இணைபபாடவிதான முயற்சிகளில் தனக்கெனத் தனிச் சிறப்பிடத்தைப் பெற்று வளர்ந்து வரும் இக் கல்லூரி கல்விப் பொதுத்தராதர உயர்தர, சாதாரணதர, ஐந்தாந்தரப் புலமைப் பரிசில் பரீட்சை ஆகிய பொதுப்பரீட்சைகளிலும் சிறந்த பேறுகளைத் தொடர்ச்சியாகப் பெற்று வருகின்றது. அத்துடன் மாவட்ட, மாகாண, தேசிய மட்டப் போட்டிகளிலும் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கு கொண்டு சாதனைகள் படைத்து வருவதும் பாராட்டுக்குரியது. கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் காத்திரமாகத் தொடர்வதற்குரிய அகப்புறக் கவின்நிலையை எப்பொழுதும் இக்கல்லூரி கவனமாகப் பேணி வருவதும் தனிச்சிறப்பாகும்.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள கிராமப்புற பெண்பிள்ளைகள் பலர் தமது கல்வியைத் தொடர ஆரம்பக்காலத்திலிருந்து இக்கல்லூரி கைகொடுத்து உதவிய வரலாற்றுப் பெருமையினைப் பெற்றுக்கொண்டது.

இக்கல்லூரியின் வளர்ச்சிக்காகத் தனது குடும்பத்துடன் தம்மை அர்ப்பணித்து பணிபுரியும் அதிபர் திருமதி.உரோகினி ஜோதிநாதன் அவர்களையும், பொறுப்புமிக்க ஆசிரிய பெருந்தகைகளையும், பல வழிகளிலும் இக்கல்லூரிக்குப் பெருமை சேர்க்கும் மாணவச் செல்வங்களையும், கல்லூரியின் வளர்ச்சிக்கு என்றுமே துணை யிருக்கும் பெற்றோர்கள், நலன்விரும்பிகளையும், பழைய மாணவர்களையும் மிக்க நன்றியுடன் பாராட்டுவதில் அளவு கடந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

அத்துடன் இக்கல்லூரியின் உயர்வுக்காக அயராது பாடுபட்ட முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விச் சமூகத்தினரையும் இவ்வேளையில் நன்றியுடன் நினைவு கூர்ந்து அவர்களின் ஆசிகளையும் பெற்றுக் கொள்வது நமது கடமையாகும் எனக் கருதுகின்றேன்.

இக்கல்லூரி மென்மேலும் வளர்ந்து சிறந்த கல்விச் சேவையாற்ற வேண்டுமென மனமார வாழ்த்துகின்றேன்.

க.துரைரெட்ணசிங்கம்.
பாராளுமன்ற உறுப்பினர்,
திருக்கோணமலை மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி முகாமைத்துவ விரிவுரையாளர் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

தி/ மெதடிஸ்த பெண்கள் கல்லூரியினது பரிசளிப்பு விழாவிற்கு இவ் ஆசிச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். பரிசளிப்பு விழாக்கள் பல்துறைகளிலும் திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்களுக்கு பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கும் வைபவமாக பாடசாலைகளில் நடாத்தப்பட்டு வருகின்றது. இதற்கான தெரிவு முறை பெரும்பாலும் நியமம் சார்ந்த மதிப்பீட்டின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகின்றது. சிறந்த மாணாக்கர்களது தெரிவு பெரும்பாலும் ஒப்பீடு சார்ந்த எண் பரிமாண அளவிடல் முறையிலேயே இடம் பெறுகின்றது. இம்முறையானது மாணவர்களை வேறுபடுத்திக் காட்டுவதாகவும் சில கல்வியியலாளர்கள் கருதுகின்றார்கள். எனினும் மாணவர்களை ஊக்கப் படுத்துவதற்குப் பரிசளிப்பு விழா உந்துசக்தியாக இருக்கின்றது என்பதனை யாராலும் மறுக்க முடியாது.

இன்று பல்வேறு துறைகளில் திறமைகளை வெளிப்படுத்தி பரிசில்களைப் பெறுகின்ற மாணவர்களுக்கு எனது வாழ்த்துக்கள். இவர்களை வளர்த்தெடுத்தவர்கள் ஆசிரியர்கள் ஆவர். இம் மாணவர்களை வளப்படுத்திய ஆசிரியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எல்லாவற்றிற்கும் மேலாக மதிநுட்பமும், ஆற்றலும் மிக்க அதிபரது செயற்பாடுகள் இப்பாடசாலையின் துரித வளர்ச்சிக்குப் பிரதான காரணமாகும். அவரது முகாமைத்துவமும், அணுகுமுறைகளும் கருமங்களை வென்றெடுக்கும் வீரியம் வாய்ந்தவை. இப்பாடசாலை பல்வேறு துறைகளிலும் மென்மேலும் வளர்ச்சி பெற்று கிழக்கு மாகாணத்தின் முன்னிலைப் பாடசாலைகளில் ஒன்றாக மிளிர எனது வாழ்த்துக்கள்.

**K. Sambasivam**
**B.A., P.G.D.E , P.G.D.E.M**
**M.Sc (Testing & Evaluation)**
**S.L.P.S.1**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வுநிலை சிரேஷ்ட உதவிச் செயலாளர்

# வாழ்த்துச் செய்தி

பழம்பெரும் பெருமைமிக்க இக்கல்லூரியின் விழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். மெதடிஸ்த மிஷன் ஆங்கிலப் பாடசாலையாக ஆரம்பத்தில் உருப்பெற்ற இப்பாடசாலை கிராமப்புற மாணவிகளுக்கு ஒரு கலங்கரை விளக்கமாக விளங்கியது. அந்நாளில் வேம்படி மகளிர் கல்லூரி என்றும் இது அழைக்கப்பட்டது. மாணவிகள் தங்கியிருந்து கல்வி கற்கக் கூடிய விடுதி வசதியும் இப்பாடசாலையில் இருந்த படியால் தான் கிராமப்புற மாணவிகளின் முன்னேற்றத்திற்கு முக்கிய காரணமாய் அமைந்தது. சட்டம், ஒழுங்கு, கட்டுப்பாடு என்பன இக்கல்லூரியின் கல்வி வளர்ச்சியைத் தாங்கி நிற்கின்ற தூண்களாகும்.

இக்கல்லூரி ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரண பரீட்சை, க.பொ.த உயர்தரப் பரீட்சை ஆகியவற்றில் படிப்படியாக நல்ல பெறுபேற்றைப் பெற்று வருவது பாராட்டுக்குரியதாகும். அது போன்று பல்கலைக்கழகத்திற்கும் பல்வேறு துறைகளில் மாணவர்கள் தெரிவாவதும் இப்பாடசாலையின் ஏற்றமிகு வெளிப்பாடாகும். கடந்த வருடத்தில் இருந்து ஆங்கில மொழி மூலமாக கல்வி கற்பிக்கப்படுகின்றது. காலத்திற்கேற்ற ஒரு சிறந்த நடவடிக்கையாக இதனைப் பாராட்டுகின்றேன்.

கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் இவ்வாறு சிறப்புற அமைந்திருப்பதோடு இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை மாணவர்களின் திறமையை ஊக்குவிப்பதற்கான பரிசளிப்பு விழாக்கள், தமிழ்தின விழாக்கள், Leo club, சென்ஜோன்ஸ் சேவை போன்ற இன்னோரன்ன செயற்பாடுகளிலும் பங்குபற்றி பல முதல் பரிசில்களையும், பாராட்டுக்களையும் பெற்றுள்ளமையும் இப்பாடசாலையின் வளர்ச்சியை வெளிப்படுத்தி நிற்கும் சுட்டிகளாகும்.

இப்பாடசாலை கலங்கரை விளக்கமாக இருந்து 12 பாடசாலைகளில் ஆங்கில மொழி அபிவிருத்திக்கு வழிகாட்டுவதும் மெச்சத்தக்கதொரு செயற்பாடாகும். மொழியினூடு சமாதானம், கலாச்சாரத்தினூடு சமாதானம் போன்ற நிகழ்வுகளும் இப்பாடசாலையின் பரந்த உளப்பாங்கினை வெளிப்படுத்தும் நடவடிக்கைகளாகும்.

இத்தனை சிறப்புக்களையும் படிப்படியாக வளர்த்தெடுத்துச் செல்வதில் தனது அயராத சேவையை அர்ப்பணித்து வரும் அதிபர் திருமதி.உ.ஜோதிநாதன் என்றென்றும் எனது மதிப்பிற்கும் பாராட்டுக்கும் உரியவராவார். அவருக்குத் தோளோடு தோள் நின்று ஒத்துழைப்பு நல்கிவரும் ஆசிரிய குழாத்தினர், பழைய மாணவிகள், பெற்றோரும் இவ்விடத்தில் பாராட்டப்பட வேண்டியவர்களாவார். இக்கல்லூரி மென்மேலும் வளர்ச்சி பெற்று சமூகத்திற்கு சிறந்த பிரஜைகளை உருவாக்கம் செய்ய வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**திரு.கு.திலகரட்ணம்,**
**ஓய்வு நிலை சிரேஷ்ட உதவிச் செயலாளர்,**
**கல்வி அமைச்சு,**
**கிழக்கு மாகாணம்**
**திருக்கோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message from Emeritus Principal

Trincomalee is blessed with a natural harbour, balmy beaches, rocks hills and valleys which enhance its scenic beauty. Historically too it bolds a prominent place. In that many great traditional events were enacted on its platform. All it needed was schools to impart knowledge to the children, and build and mould their character.

One hundred and eighty five years ago, band of Methodist missionaries arrived from England to fulfill this dream. The ground breaking work was truly hard and painful, but they did it successfully, God being their helper, and Methodist Girls' English School blossomed as the first, educational institution, in the town of Trincomalee. From that day onwards, one missionary after another worked and watched with pride as it grew from strength to strength. Also the school takes pride in the fact, that this was the only school in the East, which provided boarding facilities, and opened the doors to students from the neighbouring villages.

The five local Principals, starting from Mrs. M. Arumainayagam, have in their own way taken great efforts, to keep the school-flag flying high. During my term of office, from the performance of the students at the G.C.E O/L Results, while there were only one or two from the other town schools. One was even picked to represent the Trincomalee schools and deliver a speech at the final ceremony of the B.M.I.C.H Colombo. This is just one of the many great achievements that the school has made during the past years.

I need not stress the fact that education does not stop with reading, writing, studying and being successful in examinations. It is a multifaceted programme by which students are coached and helped to become good citizens of the country and the world at large.

I keep a close contact with the present Principal, Mrs. U. Jothinathan and I have watched with pride and admiration the steps that she is taking for the further advancement of the school in all aspects. I, along with my family send our felicitations and pray that the school will achieve its dream.

**Mrs. E.R. Gunaratnam**
**Canada**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message
# from
# Veahavta Volunteer

I am pleased to have the opportunity to write a message of support and appreciation to the Trincomalee Methodist Girls' College, an outstanding school for women that was established in 1819. in my long career as an educator from the United States, I have been a teacher at a university, a teacher of children, an administrator, therefore, it is with conviction, that I can attest to the fine leadership and the high quality of the education offered to all the girls at the Methodist Girls' College.

Not only are high expectations clearly stated, the means to reach these goals are offered. Girls are provided with the foundation needed to become women ready to contribute to their family, community and country. It is a formidable task and the school is succeeding.

I have known Mrs.Jothinathan for 5 years now. I met Mrs.Jothinathan because of my involvement with the Grace Girls' Home. The Methodist Girls' College community and staff, students and administration, willingly provided care, direction and a sound education to our girls since they entered the school in 2003, I have visited many times over the course of the years.

I must admit that I am inspired by the opportunities available at the school – fine teaching, extra classes, and preparations for exams. Through the leadership and dedication of the principal and the staff, it is clear that all students are inspired to learn and to excel.

Grace Girls' Home was established in 2002 by Mr.Eric Parkinson, President of VeAhavta, an American based foundation working in partnership with Revd.Dr.Jeyanesan, now Bishop of the Church of the American Ceylon Mission, to provide a safe haven and stimulating environment for displaced girls. Our close association with the Trincomalee Methodist Girls' College has aided in reaching that goal.

I am proud to have made the acquaintance of the Methodist Girls' and look forward to our continued work together on behalf of the Girls' from Grace Girls' Home and all of the children at Methodist Girls' College.

Best wishes for your continued outstanding work. You are a model of robust education for the future.

**With warm wishes,**

**Dr.Bonnie Nuzum**
**Veahavta Volunteer at Grace Girls' Home**
**New York, USA**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமு/இராமகிருஷ்ண மிஷன்
மகா வித்தியாலய அதிபர் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

திருக்கோணமலை மெதடிஸ்த மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்கக் கிடைத்த சந்தர்ப்பத்தை எண்ணி இறைவனுக்கு நன்றி செலுத்துவதோடு மிக்க மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

மாணவர்களின் கல்விச் செயற்பாட்டில் ஊக்குவிப்பு என்பது முக்கியத்துவம் பெறுகின்றது. தட்டிக் கொடுத்தல் அன்போடு பேசுதல், பாராட்டுதல், பரிசு வழங்குதல் என்பனவெல்லாம் ஊக்குவிப்பினுள் அடங்குவன. இச் செயற்பாட்டினால் பரிசுபெறும் மாணவர் மட்டுமன்றி ஏனைய மாணவர்களும் ஊக்குவிக்கப்படுகின்றனர். எல்லோரது முன்னேற்றத்துக்கும் இந் நிகழ்வுகள் மிகமிக அவசியமாகும்.

சாதனைகள் மதிக்கப்படாத சமூகத்தைச் சரித்திரம் என்றும் நினைவில் வைத்திருப்பதில்லை. மாணவர்களின் விடாமுயற்சியும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையும் உள உறுதிமிக்க அதிபர்களின் திறனும் பாடசாலையின் உயர்ச்சிக்கான பலம்மிக்க அத்திவாரம் என்பதைப் பறைசாற்றும் விழா இது.

கல்வி முறைமை சமயம் மற்றும் கலாச்சார நீதி நெறிகள், நல்லொழுக்கம், உடல்-உள வளர்ச்சி கருத்துக்களின் அடிப்படையில் உறுதியாக அமையுமாயின் மென்மேலும் முன்னேற்றம் காணப்படும். எதிர்காலத்தின் புதிய உலகுக்குப் பொருத்தமான தேர்ச்சிகளுடன் கூடிய சந்ததியை இக்கல்லூரி உருவாக்க வேண்டுமென மிகவும் வாழ்த்துகின்றேன்.

இக்கல்லூரியின் திறமைமிக்க ஆசிரியர்கள் அனைவரும் தமது பாரிய பொறுப்புக்களை உணர்ந்து பயனுள்ள, சிறந்த சமுதாயத்தை உருவாக்குவதில் முன்னணியில் திகழ வேண்டுமென ஆசிக்கின்றேன்.

வெற்றியாளர்களை உருவாக்கும் கனவுகளுடன் பாரிய இப்பணியில் தனது பங்களிப்பை முழுமையாகக் காட்டிக்கொண்டியங்கும் கல்லூரி அதிபர், அவர்களின் சேவை தொடர மனதார ஆசி கூறுகின்றேன்.

கல்லூரியின் எல்லை தாண்டிச் சாதனை நிகழ்த்திக் கொண்டிருக்கும் விழா நாயகர்களான ஒவ்வொரு மாணவருக்கும் பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றேன்.

"உள்ளுவதெல்லாம் உயர்வே"

**MRS. A. PERINPARAJAH**
**B,A (Hons) Dip in Edu.,**
**SLPS-I**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/ புனித ஜேம்ஸ் பெண்கள் கல்லூரி அதிபர்

அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

வரலாற்றுச் சிறப்புமிக்க திருநாடாம் திருக்கோணமலையின் பல மலர்களில், மணம் வீசும் மலராகத் திகழும் மெதடிஸ்த பெண்கள் பாடசாலை வெளியிடும் இம்மலருக்கு இனிய வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

காலத்தின் தேவைக்கேற்ப கல்வியின் அருமை பெருமைகளை அறிந்து எதிர்காலச் சந்ததியினர் கல்வியறிவொழுக்கத்திற் சிறந்து விளங்க இக்கல்லூரித் தாயானாவள் வானுறவோங்கி வளம்பல சேர்த்து வழிகாட்டி நிற்கின்றாள்.

தற்போது அதிபர் பதவியை அலங்கரித்துக் கொண்டிருக்கும் திருமதி. றோகினி ஜோதிநாதன் அவர்கள் கறங்குபோல் சுழன்று தன் அர்ப்பணிப்புள்ள சேவையால் பாடசாலையின் கல்வி அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு உழைத்து வருவதனால் பாடசாலையின் கல்வித்தரம் பலபடி உயர்ந்துள்ளமையும் அதிபரின் ஆளுமையும் வளர்ந்துள்ளமையும் பாராட்டிற்கும் பெருமைக்கு முரியதாகும்.

அதிபரின் பணிக்கு தோளோடு தோள் கொடுத்து உழைக்கும் ஆசிரிய குழாத்தின் அரும்பெரும் சேவையாலும் மாணவரின் அயரா உழைப்பாலும் வருடாவருடம் பற்பல பட்டதாரிகளையும், கல்வியியலாளர்களையும் உருவாக்கி வருவதுடன் தேசிய மட்டத்திலான வெற்றிகளையும் ஈட்டி நிற்பது மனமகிழ் வளிக்கின்றது.

இப்பாடசாலைத் தாயானவள் இம்மலர் வெளியீட்டின் மூலம் மென்மேலும் பல வளங்களைப் பெற்று பொலிவுடன் வாழ இறையருள் வேண்டி ஆசி கூறுவதில் பேருவகை கொள்கின்றேன்.

வாழ்க நீ எம்மான் பல்லாண்டு
- பல்லாண்டு
பல்லாயிரத்தாண்டு புகழோடு
வளர்க உன் பணி
வாழ்க நீ நீடுழி

**திருமதி. L. மகேஸ்வரன்**
**S.L.P.S - I BA.Dip in Edu**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

திருக்கோணமலையில் கல்வியை முன்னெடுத்துச் செல்லும் பாடசாலைகளில் தி/மெதடிஸ்த பெண்கள் கல்லூரியும் ஒன்றாகும். இக்கல்லூரியின் அதிபரின் அயராத உழைப்பினாலும் ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்கள், பழைய மாணவர்கள் நலன் விரும்பிகளின் ஒத்துழைப்பினாலும் இப்பாடசாலை வளர்ச்சியடைந்து வருவதை நான் காணக்கூடியதாக உள்ளது.

பாடசாலையினுள் கல்விச் செயற்பாட்டினால் மட்டும் ஒரு பாடசாலை வளர்ச்சியடைய முடியாது. இணைப்பாடவிதானச் செயற்பாடுகளும் சேர்ந்தே மாணவர்கள் கற்கும் கல்வியை முழுமையடையச் செய்ய முடியும். அந்த வகையில் இப்பரிசளிப்பு விழாவும் சஞ்சிகை வெளியீடும் மாணவர்களை எதிர்கால வாழ்க்கைக்குத் தயார்ப்படுத்தும் ஒரு நிகழ்வாக அமைகிறது. மாணவர்களை உற்சாகப்படுத்தும் ஒரு வழியாகவும் அமைகிறது. இச்சஞ்சிகைக்கு ஆக்கங்களைத் திரட்டுகின்ற பொழுது மாணவன் தாமாகவே அறிவைத்தேடுகின்ற முயற்சியாகவும் இச்சஞ்சிகை வெளியீடும் அமைகிறது.

இம்முயற்சியை முன்னெடுத்துச் செல்லும் இக்கல்லூரியின் அதிபர் ஆசிரிய ஆசிரியர்கள் ஆகியோரைப் பாராட்டுவதோடு எதிர்காலத்தில் இவர்களின் பணி சிறப்பாக மிளிர எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் வே.விக்னராசா**
**செயலாளர்,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,**
**மெதடிஸ்த மகளிர் கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியரின் இதய நாதம்

ஒன்றரை நூற்றாண்டுக்கும் அதிகமான வரலாற்றைக் கொண்டது எமது தி/மெதடிஸ்த மகளிர் கல்லூரி ஆகும். இது 1AB பாடசாலை என்பதோடு நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து வரும் பாடசாலையாகும்.

இவ் வளர்ச்சிக்கும் இப் பாடசாலையின் கலை கலாச்சார மேம்பாட்டை மெருகுபடுத்தவும் இப் பாடசாலையின் சஞ்சிகை வெளியீடு இன்றியமையாத ஒன்றாக அமைந்துள்ளது. இப் பாடசாலையின் மூன்றாவது மலராக இது பரிணமிக்கின்றது என்று கூறுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

மரபு பேணப்பட வேண்டியதொன்றாகும். ஆனால் மரபு காலத்திற்கு காலம் புது மெருகு பெறுவதும் தவிர்க்க முடியாததொன்றே. அந்த வகையில் மீண்டும் எமது வருடாந்த பரிசளிப்பு விழாவையொட்டி வெளியிடப்படும் விசேட சிறப்பு மலரானது பல திசைகளிலும் மணம் பரப்புவதில் நாம் புழகாங்கிதம் அடைவதோடு குறுகிய காலத்தில் இம் மலர் தன் இனிய நறு மணத்தைப் பரப்ப உதவி ஆக்கமும் ஊக்கமும் தந்த பெரியார்கள், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் நலன்விரும்பிகள் அனைவருக்கும் மலர்க்குழு சார்பில் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**த. றொஷான்முரளி**
**உதவி அதிபர்**
**மெதடிஸ்த மகளிர் கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு

**ஆலோசகர்கள்:-**

திருமதி.உ.ஜோதிநாதன் - அதிபர்
திருமதி.த.றொஷான் முரளி
(உதவி அதிபர்)

**ஒப்பு நோக்கல்:-**

திருமதி.ப.ஆறுமுகஜோதி
செல்வி.சி.ஜீவரத்தினம்
திரு.அ.வா.முஹ்சீன்

**குழு உறுப்பினர்கள்:-**

செல்வி.பு.மகாலிங்கம்
செல்வி.யோ.சிவதாசன்
திருமதி.கி.அ.பெஞ்சமின்
திருமதி.ஜெ.சந்திரன்
திருமதி.ரே.சதாசிவம்
செல்வி.ஸ்ரீ.சித்திரவேல்
திரு.யா.கி.பிறேமகாந்தன்

**கணினி அச்சுப்பதிப்பு:-**

செல்வி.இ.மதுமிகா

**அச்சுப் பதிப்பு:-**

அஸ்ரா பிரின்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்
இல. 43, திருஞானசம்பந்தர் வீதி,
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our Principal



**Mrs. U.Jothinathan**
**Principal**
**S.L.P.S.-1**
**Dip.in.Sch. Management (Merit)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VICE PRINCIPAL



Mrs. T. Roshan Muraly

## SECTIONAL HEADS



Mrs. S. Vilvanathan
Grade: 01 - 05



Mrs. G.A. Benjamin
Grade: 06 - 09



Miss. P. Mahalingam
Grade: 10 - 11



Miss. Y. Sivathasan
G.C.E. A/L

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## SCHOOL MANAGEMENT COMMITTEE MEMBERS



Seated : Miss. P.Mahalingam, Mrs. G.A.Benjamin, Mrs. U.Jothinathan (Principal), Mrs. T.Roshanmuraly (Vice Princiapal), Mrs. J.Chandran, Miss. Y.Sivathasan

Standing : Mr. T.Puvendran, Miss. J.Sivatharshini, Mrs. P.Sriskantha, Mrs. P.Arumugajothy, Mr. N.Nimaleswaran

## SCHOOL DEVELOPMENT SOCIETY COMMITTEE MEMBERS



Seated : Mrs. T.Roshanmuraly, Mr. Kanagamahendra, Dr.V.Vignaraja (Secretary), Mrs. U.Jothinathan (President), Rev.S.Jothini, Mr. G.Kailainathan, Rev. J.Gnanapragasam Mrs. T. Jeyaluxmy

Standing : Mrs. T.Ravindraraja, Mr. N. Nimaleswaran, Mr. T.Puvanendran (Treasurer), Mrs. V.Natgunam, Mrs. J.Chandran, Mrs. P.Arumugajothy, Mr.S.Murugavel

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் அறிக்கை

திருமதி. உ. ஜோதிநாதன்
(அதிபர்)

வானளாவ உயர்ந்த நீதிமன்றக் கட்டடமும், புதிதாக அமைக்கப்பெற்ற ஏகாம்பரம் விளையாட்டரங்கும் எதிரெதிரே காட்சியளிக்க, அருகே மெதடிஸ்த தேவாலயமும் அழகுபடுத்த மிகவும் எடுப்பாகத் தோன்றும் தி/மெதடிஸ்த மகளிர் கல்லூரி **"கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்தக"** என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க மாணவர்களுக்குக் கல்விச் செல்வத்தை நித்தமும் குறைவின்றி ஊட்டி வருகின்ற ஒரு கல்விக் கூடமாக விளங்குகின்றது. வருடா வருடம் பல்கலைக்கழகத்திற்கும், கல்வியியல் கல்லூரிக்கும், தொழில்நுட்பக் கல்லூரிக்கும் மற்றும் பல்வேறு கல்வி நிறுவனங்களுக்கும் தொழிற்சந்தைக்கும் எமது கல்லூரியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மாணவர்களை வழங்கிக் கொண்டிருக்கும் இக்கல்லூரிக்குப் பெருமை சேர்ப்பவர்களாக ஆசிரியர்களும் மாணவர்களும் பெரும்பங்கு வகிக்கின்றனர். இந்த வகையில் 2007 – 2008ம் ஆண்டிற்கான சஞ்சிகை வெளியீடும் பரிசளிப்பு விழாவும் இணைந்து நடைபெறும் இச்சந்தர்ப்பத்தில் இவ்வறிக்கையூடாக அதிபர் என்ற வகையில் இத்தகவல்களைத் தங்களனைவருடனும் பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

எமது பாடசாலையின் உயரிய நோக்கான **Utmost For The Highest** என்ற மகுடவாசகத்தைக் கொண்டு கற்றல் கற்பித்தல் மற்றும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் வளர்ச்சிகண்டு வரும் எமது பாடசாலை 1819ம் ஆண்டு அமெரிக்க மிசனரிமாரால் ஆரம்பிக்கப்பட்டதாகும். அன்று முதல் தொடர்ந்து பல வருடங்களாக ஆங்கிலப் பெண்மணிகளே அதிபர்களாக இப்பாடசாலையை நிர்வகித்து வந்துள்ளனர். 1949ன் பின்னர் இலங்கை அரசினால் பொறுப்பேற்கப்பட்டதைத் தொடர்ந்து சுதேச அதிபர்களினால் இப்பாடசாலை நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. திருகோணமலை மாவட்டத்தில் முதலாவது விடுதி கொண்ட 1AB பாடசாலை என்ற பெருமையும் இப்பாடசாலைக்கே உரியதாகும். எமது பாடசாலையின் உயரிய நோக்கத்திற்கேற்ப மனித நேய செயற்பாடுகளிலும் ஏனைய கல்விசார் நடவடிக்கைகளிலும் தனித்திறமையுடன் இப்பாடசாலை துரித வளர்ச்சி கண்டு வருகின்றது என்பது இங்கு குறிப்பிடக்கூடிய விடயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்லூரி உருவாக்கமும் வளர்ச்சியும்

1814ஆம் ஆண்டில் மெதடிஸ்த திருச்சபையினர் இலங்கையின் வெலிகம கரையோரத்திற்கு வந்திறங்கியமை, மெதடிஸ்த திருச்சபையின் கல்வி வரலாற்றில் ஒரு மைல்கல்லாக விளங்கியது எனலாம். இவர்களின் முக்கியமான நோக்கு (Vision) இலங்கையின் கல்வித் தேவையை மேம்படச் செய்வதாகும். இதற்காக நாட்டின் பல பாகங்களில் இத்திருச்சபையினர் பாடசாலைகளை அமைத்தனர். அதனடிப்படையில் 1819 இல் திருகோணமலையிலும் மெதடிஸ்த திருச்சபை அமைக்கப்பட்டு மெதடிஸ்த உயர்தரப் பாடசாலையும் (Methodist High School) நிறுவப்பட்டது. 1912ல் மேலும் பல வசதிகளுடன் இப்பாடசாலை நிர்வகிக்கபட்டு வந்தது. 1821 – 1823 காலத்தில் மேலும் மூன்று பாடசாலைகள் றொபேர்ட் ஹாபர் தலைமையில் அமைக்கப்பட்டது. 1856ம் ஆண்டு ஜோன் வோட்டன் தலைமையில் திருச்சபைக்கு அருகில் தனியான கட்டடத்துடன் இடம் மாற்றப்பட்டதே எமது தி/மெதடிஸ்த மகளிர் கல்லூரியாகும். இது ஆரம்ப காலத்தில் வேம்படிப் பாடசாலை எனவும் அழைக்கப்பட்டது. 1859 ல் மேலதிகமாகக் கட்டடங்கள் கட்டப்பட்டு மெதடிஸ்த பெண்கள் கல்லூரி என்ற பெயருடன் விடுதி வசதியும் கொண்ட ஒரு பாடசாலையாக விளங்கியது. 1902 ம் ஆண்டளவில் மாணவர் தொகையின் அதிகரிப்பிற்கேற்ப பௌதிக வளங்களும் அதிகரிக்கப்பட்டு திருக்கோணமலை மாவட்டத்தில் உயர் வளர்ச்சியடைந்த பாடசாலையாகத் திகழ்ந்தது. 1930 இல் செல்வி எவரெட்டும் அதன் பின்னர் செல்வி கார்டினரும் இத்திருச்சபையின் நிர்வாகத்தைப் பொறுப்பேற்று நடத்தினர். 1938 இல் கிறீன்வூட் இப்பாடசாலையின் அதிபர் பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டார். 1942 – 1945 இல் இரண்டாம் உலகப்போர் நடைபெற்ற பொழுது மாணவர்களை இடம் மாற்ற வேண்டியேற்றப்பட்டதால் பாடசாலை நிர்வாகத்தில் பின்னடைவு ஏற்பட்டது. 1949 இல் இப்பாடசாலையின் பழைய மாணவியும் ஆசிரியராகவுமிருந்த செல்வி அருமைநாயகம் மங்கையர்கரசி முதலாவது இலங்கையின் அதிபராக இப்பாடசாலையில் பொறுப்பேற்றார்.

இவரது காலத்தில் பாடக்கல்வி அபிவிருத்தியும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளும் மீண்டும் அபிவிருத்தியடைந்தன. இத்தகவல்கள் 'இலங்கை மெதடிஸ்த தேவாலய வரலாறு என்பதிலிருந்து பெறப்பட்ட தகவல்களிலிருந்து கிடைத்தவையாகும்.

இப்பாடசாலையை நிர்வகித்த அதிபர்களின் தலைமைத்துவம் பின்வரும் ஆண்டுகளில் அமைந்திருந்தது.

| | |
|---|---|
| 1949 – 1975 | திருமதி.எம்.அருமைநாயகம் |
| 01.02.1975 – 08.10.1985 | திருமதி.இ.ஆர்.குணரட்ணம் |
| 09.10.1985 – 08.06.1986 | திரு.என்.சந்திரகாந்தன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09.06.1986 – 31.12.1990 திருமதி.எம்.சோமசுந்தரம்

01.01.1991 - 23.08.2001 செல்வி.கே.பொன்னம்பலம்

இவ்வேளை, இவர்களின் சிறப்பான கல்விப் பணியை நினைவுகூர்ந்து பெருமைப் படுவதோடு, எமது பணிகளை அவர்களின் நல்லாசியுடன் தொடர்கின்றோம்.

## நோக்கமும் பணியும்

எமது கல்லூரியின் அறிவு, திறன், மேம்பாடுகளுடன் பூரண ஆளுமையும் கொண்ட சமுதாயம் ஒன்றை உருவாக்குதல் என்ற தூர நோக்கிற்கு ஏற்றவாறு மாணவர்களை வளப்படுத்துவதற்கும் அவர்கள் உச்ச உயர்வை அடைவதற்கும் முழு முயற்சி செய்யும் ஒரு ஸ்தாபனமாக இக்கல்லூரி விளங்குகிறது. அத்துடன் 21ம் நூற்றாண்டிற்கான சவால்களை எதிர்கொள்ளும் வகையில் மாணவர்களுக்குக் கற்றல் வசதிகளையும், வழிகாட்டல்களையும் பயிற்சிகளையும் அளித்தல் மூலம் பெறுமதிமிக்க, திறன்கள் நிறைந்த பூரண ஆளுமை யுடையவர்களாக வெளியேற்றித் தமது சமூகத்தின் அபிவிருத்திக்கு அவர்களை உழைப்பவராக ஆக்குவதும் எமது கல்லூரியின் பணியாகும்.

இப்பாடசாலையில் மாணவர்களின் கல்விச் செயற்பாட்டினை மேம்படுத்துவதற்காகக் கல்லூரி மட்டத்தில் பல்வேறு ஒன்றியங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாணவத்தலைவிகள் குழு, தமிழ் ஆங்கில கலை இலக்கிய மன்றம், இந்து மாணவர் மன்றம், கணித விஞ்ஞான மன்றம், சென்ஜோன்ஸ் படையணி, இன்றறக்ற் கிளப், பெண்கள் சாரணியம் போன்றவைகள் ஒவ்வொரு அமைப்புக்களுக்குமுரிய பொறுப்பாசிரியர்களின் வழிகாட்டல்களின் அடிப்படையில் வழிநடத்தப்பட்டு மாணவர்களின் திறன்களை வெளிக்கொணருவதில் சிறந்த பங்களிக்கின்றன.

கல்லூரி மட்டத்தில் அனைவரும் பங்குகொள்ள வாய்ப்பளிக்கும் வகையில் கல்லூரியின் வருடாந்த செயற்பாடுகள் திட்டமிடப்பட்டு விளையாட்டுப் போட்டிகள், ஆக்கத்திறன் போட்டிகள், கல்விக் கண்காட்சிகள், சமய அறிவுப்போட்டிகள், மொழித்திறன் போட்டிகள், கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டிகள் என்பன நடாத்தப்பட்டு இதில் முதன்மை நிலை பெறுவோர் வலயம், மாவட்டம், தேசிய மட்டம் என அடுத்தடுத்த மட்டங்களில் தங்கள் திறமையை வெளிப்படுத்த வாய்ப்பினைப் பெறுவதோடு குறிப்பிட்ட மட்டங்களில் வெற்றியும் பெற்றுள்ளனர்.

2007ம் ஆண்டில் நடைபெற்ற தமிழ்மொழித்தினப் போட்டியில் இப்பாடசாலைக்கு வலயமட்டத்தில் 7 இடங்கள் கிடைத்தன. இதில் மூன்று மாணவிகள் முதலாமிடத்தைப் பெற்றதோடு 2008ம் ஆண்டில் ஒரு மாணவிக்கு மாவட்ட மட்டத்திலும் தேசியமட்ட தமிழ்தினப் போட்டியில் முதலாமிடமும் கிடைத்தது. இதனை விட 2007ம், 2008ம் ஆண்டுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய போட்டிகளில் 16 முதலாமிடமும் 11 இரண்டாம் இடங்களும் கிடைத்தமை குறிப்பிடத்தக்கதாகும். இவை வர்த்தக விஞ்ஞான கட்டுரைப் போட்டிகள், சித்திரப் போட்டி, இரண்டாம் மொழி சிங்களம் - எழுத்துப் பரீட்சை, சர்வதேச பெண்கள் தினம் - விவாதப்போட்டி, மனித உரிமைகள் தினம் - கவிதைப் போட்டி, சமூக விஞ்ஞான வினாவிடைப்போட்டி, முதியோர்தினம் - கவிதைப்போட்டி, கட்டுரைப் போட்டி, தேசிய வாசிப்பு மாதம் - சித்திரப் போட்டி, கட்டுரைப் போட்டி என அமைந்தமையும் இப்பாடசாலையின் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின் முன்னேற்றத்தை எடுத்துக் காட்டுகின்றன.

## சிறப்பித்துக் கூறக்கூடியவை

வருடாந்த இணைப்பாடவிதானச் செயற்திட்டத்தை அமுல்படுத்துமுகமாக இடம் பெற்ற சமாதான முன்னெடுப்புகளில் சிறப்பாகக் குறிப்பிடக் கூடியவையாக, இரண்டு சிங்கள மொழி மூல பாடசாலைகளுடன் இணைந்து வெவ்வேறான தொனிப்பொருளில் இடம் பெற்ற கலை நிகழ்வுகளும் ஒன்று கூடலுமாகும். 2007 ம் ஆண்டு தி/ திஸ்ஸமகா வித்தியாலயத்துடனான **"கலாச்சார மூலம் சமாதானம்"** என்ற நிகழ்வும் 2008ம் ஆண்டில் தி/அபயபுர சிங்கள மகா வித்தியாலயத்துடனான **"மொழிமூலம் சமாதானம்"** என்ற. சமாதான நிகழ்வுமாகும். மேலும் திருக்கோணமலை வலயத்தில், கல்வி அமைச்சின் அனுமதியுடன் தெரிவு செய்யப்பட்டுள்ள இப்பாடசாலையில் Light House Project மாணவர்களின் ஆங்கில அறிவை வளர்க்கக் கூடியவகையிலும் அதேவேளை ஏனைய ஒரு சில 1C பாடசாலைகளுடனான ஆங்கிலச் செயற்பாடுகளை ஒன்றிணைப்பதுமாக விளங்குகின்றது.

இது தவிர பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவிகளில் பொருளாதார வசதி குறைந்த மாணவி ஒருவர் 2001ம் ஆண்டிலிருந்து நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்டு, முன்னாள் அதிபரின் நினைவாக "மங்கையர்க்கரசி அருமைநாயகம்" நிதியத்திலிருந்து புலமைப்பரிசிலைப் பெற்று வருகிறார், என்பது குறிப்பிடத்தக்கது. இது அவர்களின் ஆரம்ப பல்கலைக்கழகக் கல்விக்கு பெரிதும் உதவுவதாக அமைந்துள்ளது.

அத்தோடு எமது பாடசாலை ஒரு நவோதயா பாடசாலையாக இருப்பதால் அதனை மையமாகக் கொண்டு கல்வியமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக பல்வேறு தொனிப்பொருளில் **"நவோதயா வாரம்"** கொண்டாடப்படுவதோடு அந்நிகழ்விற்கு கல்வியதிகாரிகளையும், இளைப்பாறிய ஆசிரியர்களையும் அதிதிகளாக அழைத்து கௌரவிக்கும் வழக்கம் இப் பாடசாலைக்கு உண்டு. மேலும் 2004ம் ஆண்டில் சுனாமியால் உயிரிழந்த மாணவியின் நினைவு கூரும் வைபவம் அவரின் பெற்றோரால் பாடசாலையில் அமைக்கப்பட்ட சிறுவர் பூங்காவில் நிகழ்வதும் வருடாந்த நிகழ்வுகளில் ஒன்றாக விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரிதினம், புலமைப்பரிசில், பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் ஆசிரியர்களையும் கௌரவித்தல், மாணவ தலைவியரின் சின்னம் அணிவிப்பு, ஔிவிழா, நவராத்திரி ஆன்மீகச் சொற்பொழிவுகள் என்பன வருடாவருடம் இடம் பெறுகின்றன. இந்த இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் மாணவர்களின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை முழுமையடையச் செய்வதுடன் எதிர்காலத்திலும் அவர்கள் வாழும் சமூகத்திலும் உதவுவனவாக உள்ளன.

அரசாங்க பொதுப்பரீட்சைகளுக்கான க.பொ.த(உயர்தரம்), க.பொ.த(சாதாரணம்), தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 2007ம், 2008ம் ஆண்டுகளில் மாணவர்கள் சித்தியெய்திய வீதம் எல்லாத்துறைகளையும் பிரதிபலிக்கக் கூடிய வகையில் சித்தியெய்தும் மாணவர்களின் எண்ணிக்கை பல்கலைக்கழக அனுமதியில் முன்னைய வருடத்தை விட அதிகரித்து வருகிறது. இது வளர்ந்து வரும் பெறுபேறாக அமைந்திருப்பது இக்கல்லூரிக்குப் பெருமை சேர்ப்பதாக உள்ளது. பகுதித்தலைவரினதும் ஆசிரியர்களினதும் வினைத்திறனான செயற்பாட்டின் விளைவிற்கு இப்பெறுபேறுகள் இக்கல்லூரிக்குக் கிடைத்துள்ளன என்பதில் நான் பெருமையடைகிறேன்.

## சேவையைப் பாராட்டுகின்றோம்

மாணவர்களின் கல்வி எழுச்சிக்கு பெறுமதி மிக்க மகத்தான சேவையை ஆற்றிய 2007ன் திருமதி.எஸ்.யுவராஜா, திரு.எம்.மகேந்திரராசா, திரு.கே.சிறீதர், திருமதி.கே.சரவணபவன், செல்வி.வீ.அபிராமி ஆகியவர்களையும் 2008ன் திருமதி.எஸ்.வேல்நாயகம், திரு.கே.விமலகாந்தன், திருமதி.எஸ்.டயன்குமார் இவர்களை பாராட்டும் அதேவேளை வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம்.

2008ம் ஆண்டில் திருமதி.எஸ்.கனகசிங்கமும் இப்பாடசாலையில் கடமையேற்றுள்ள ஆசிரியர்களாவார்கள். இவர்கள் இப்பாடசாலையின் கற்றல் கற்பித்தலை மேலும் மெருகூட்டுபவர்களாக விளங்குகிறார்கள் என்று கூறினால் மிகையாகாது.

2007ம் ஆண்டில் இப்பாடசாலையிலிருந்து பதவி உயர்வு பெற்றுச் சென்ற செல்வி.வினோதா விஜயராசா ஆசிரிய ஆலோசகர் (உடற்கல்வி) , 2008ம் ஆண்டில் பதவி உயர்வு பெற்றுச் சென்ற திருமதி.பத்மசிறி ஜெயகாந்தன் ஆசிரிய ஆலோசகர் (ஆரம்பப்பிரிவு) இவர்களும் இப்பாடசாலையின் பெருமைக்கு மெருகூட்டியவர்களே.

இவர்களை விட இப்பாடசாலையிலிருந்து 2007ம், 2008ம் ஆண்டுகளில் ஓய்வு பெற்றுச் சென்ற ஆசிரியர்களையும் இக்கல்லூரி பாராட்டுகின்றது. அவர்களது சேவைக் காலம் இக் கல்லூரியில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2007ம் ஆண்டில் திருமதி.கமலாதேவி சிவகடாட்சம், சங்கீத ஆசிரியை, திருமதி.புஸ்பமலர் கீர்த்திதாஸ், ஆரம்பப்பிரிவு பகுதித்தலைவர், 2008ம் ஆண்டில் திருமதி.புஸ்பராணி சுந்தரலிங்கம் பயிற்றப்பட்ட மனையியல் ஆசிரியை ஆகியோரே இப்பாடசாலையிலிருந்து ஓய்வு பெற்றுச் சென்றவர்களாவார்கள்.

இவர்களை விட 2007ம் ஆண்டில் திரு.ஆர்.எல். சிறீதரன் பயிற்றப்பட்ட கணித ஆசிரியர், திருமதி.எல்.சீ.திருக்குமாரநாதன் பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியை 2008ம் ஆண்டில் திருமதி.பீ.லிங்கநாதன் பட்டதாரி ஆசிரியை ஆகியோர் ஏனைய பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர். இவர்களின் சேவையும் இப்பாடசாலையின் முன்னேற்றத்தில் பெரும்பங்கு கொண்டுள்ளது.

## சமூக உறவு

இச்சந்தர்ப்பத்தில் உங்கள் கைகளில் தவழும் இந்த பரிசளிப்பு விழா மலர் மலர்வதற்கு காரணகர்த்தாக்களாகிய பழைய மாணவர்களின் ஒத்துழைப்பையும் நிதியுதவியையும் எமது பாடசாலை சமூகம் என்றென்றும் நன்றி கூறிக்கொள்வதில் பெருமையடைகின்றது. அதேவேளை பாடசாலையின் வளர்ச்சிக்குப் பூரண ஒத்துழைப்பும் சிறந்த ஆலோசனைகளையும் வழங்கும் பாடசாலை அபிவிருத்தி சங்கம் எமது பாடசாலையின் ஒவ்வொரு வெற்றியிலும் பங்குதாரர்களாக உள்ளனர் என்ற வகையில் நன்றி கூறிக் கொள்வதோடு எதிர்காலத்திலும் அவர்களின் ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றோம். மேலும் திருக்கோணமலை மெதடிஸ்த மிஷனுடனான பெறுமதிமிக்க உறவுகள் என்றென்றும் எம் வளர்ச்சிக்கு பக்கபலமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இறுதியாக கல்லூரியின் வளர்ச்சிக்கு அயராது உழைத்த முன்னாள் அதிபர்கள், இந்நாள் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழையமாணவர்கள், நலன் விரும்பிகள், கல்வித்திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் அனைவருக்கும் தி/மெதடிஸ்த மகளிர் கல்லூரி தனது நன்றியினை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறது. தொடர்ந்தும் கல்லூரி தனது வளர்ச்சிப் பாதையில் வீறு நடை போடத் தங்கள் அனைவரதும் ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றது.

திருமதி. **உ.ஜோதிநாதன்**
(அதிபர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ACADEMIC STAFF - 2008



**Seated:-** Mrs.K.Lingaratnam, Mrs.R.Sathasivam, Mrs.M.Kailayanathan, Miss.P.Mahalingam, Mrs.J.Chandran, Mrs.U.Jothinathan(Principal), Mrs.T.RoshanMuraly (Vice Principal), Mrs.P.Arumugajothy, Miss.Y.Sivathasan, Mrs.P.Srikantha.

**Standing:- (1st Row)** : Mrs.R.Muralitharan, Mrs.H.M.Marzook, Mrs.J.Ganeshraj, Mrs.S.Vimalakanthan, Mrs.V.Natkunam, Mrs.P.Kalaivarathan, Mrs.A.Rajanikanth, Mrs.K.Krishnarajah, Mrs.P.Gnanavel, Mrs.N.Varatharajah, Mrs.A.Rajeendran, Miss.J.Sivatharshini, Mrs.V.Raveendran, Mrs.K.Paranitharan.

**(2nd Row):-** Mrs.M.Nadesalingam, Mrs.S.Raveendran, Mrs.Y.Tharmalingam, Miss.S.Srithamayanthi, Mrs.S.Kohilan, Mrs.Ajanthan, Mrs.S.Geethanjali, Mrs.U.S.M.Safeek, Mrs.R.A.Neville, Miss .S.Sritheepa, Mrs.S.Nithiyananthan, Mrs.K.Shariskumar, Miss.Dinushika, Miss.Linda John.

**(3rd Row) :-** Mr.N.Nimaleshwaran, Mr.V.Sivananthabalan, Mr.T.Puvanenthiran, Mr.Y.G.Piremakanthan, Mr.S.B.Thivaharan, Mr.S.Saththivinayaham, Mr.A.W.Muhseen.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ACADEMIC STAFF – 2007



**Seated**:- Mrs.G.A.Benjamin, Mrs.K.Sarishkumar, Miss.Y.Sivathasan, Miss.P.Mahalingam, Mrs.J.Chandran, Mrs.T.RoshanMuraly(Vice Principal), Mrs.U.Jothinathan(Principal), Mrs.R.Sathasivam, Mrs.P.Arumugajothy, Mrs.S.Vilvanathan, Mrs.K.Lingaratnam, Mrs.S.Raveendran, Mrs.F.Rakeeb.

**Standing: (1st Row)** Mrs.V.Natkunam, Mrs.S.Yuvarajah, Mrs.K.Paranitharan, Mrs.N.H.M.Marzook, Mrs.S.N.S.Arulneesan, Mrs.K.Saravanabavan, Mrs.C.Kailasathasan, Miss.T.Sasikala, Mrs.P.Ganeshwaran, Miss.Linda John, Miss.S.Srithamayanthi, Mrs.M.Nadesalingam, Miss.J.Sivatharshini, Mrs.R.Muralitharan.

**(2nd Row)** - Mrs.M.Kailayanathan, Mrs.P.Ganeshwaran, Mrs.S.Pushparajah, Mrs.S.Vimalakanthan, Mrs.N.Varatharajah, Mrs.M.Sivakumar, Mrs.K.Kirishnarajah, Mrs.P.Gnanavel, Mrs.P.Srikantha, Miss.S.Sivadevi.

**(3rd Row)** – Mr.K.Vimalakanthan, Mr.S.Sakthivinayaham, Mr.V.Sivananthapalan, Mr.Y.G.Premakanthan, Mr.M.Mahendrarajah, Mr.T.Puvanendran, Mr.N.Nimaleshwaran.

**Absentees :-** Mrs.P.Jeyakanthan, Mrs.P.Suntharalingam, Mrs.S.Kohilan, Mrs.J.Ganeshrajah, Mrs.V.Raveedran, Mrs.P.Kalaivarathan, Mrs.V.Linganathan, Mrs.A.Rajeendran.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய விமரிசனமும் இலக்கியம் கற்பித்தலும்

## இலக்கிய விமரிசனத்தின் சமகாலப் போக்குப் பற்றிய ஒரு சிறுகுறிப்பு

**Karthigesu Sivathamby**
**M.A. (SriL.) Ph.D. (Birm), D.Litt (Honoris Causa) Jfn.**
**Professor Emeritus,**
**University of Jaffna.**

நமது இலக்கியம் கற்பித்தலில், இலக்கியத்தை அதன் நிறைகுறையுடன் பார்க்கும் அணுகுமுறை பாடசாலை மட்டத்தில் போதிக்கப்படுவதில்லை. குறைகள் இல்லையென்றும் நிறைகளே உள்ளனவென்றும் கொள்ளும் ஒரு எடுகோள் இலக்கியப் பாடங்களைப் (literary texts) படிப்பிக்கும் பொழுது காணப்படுகின்றது. விமரிசனம் என்ற சொல்லைத் தமிழ்ப்படுத்திக் கூறும் பொழுது பயன்படுத்தப்படும் 'திறனாய்வு' எனும் தொடர் இதற்கு ஒரு மனோவியல் வலுவைக் கொடுத்துவிடுகின்றது. இவை காரணமாகப் பல்கலைக்கழகத்துக்கு முந்திய வகுப்பு நிலைகளில் தமிழிலக்கியம் கற்பித்தல் மிகுந்த இடர்பாடுகளுக்கு ஆளாகியுள்ளது.

இந்த நிலைமையை ஆசிரிய கல்லூரி மட்டத்தில் மாற்றுவதற்கு எடுத்த கற்கைநெறி நிலைமாற்றங்கள் தோல்வியையே கண்டுள்ளன. தேசிய கல்வி நிறுவக மட்டத்தில் இவ்விடயம் தமிழிலக்கியம் சம்பந்தமாகக் கவனிக்கப்படுவதாகச் சொல்லிவிட முடியாது.

இவையெல்லாவற்றுக்கும் சில காரணங்கள் உள்ளன.
முதலாவது, ஆரம்ப, இரண்டாம் நிலைகளில் நாம் அறிமுகஞ் செய்து வைக்கும் பாடல்களிற் பெரும்பாலானவை உண்மையில் கவிதைகளே அல்ல. அவை வெறும் 'செய்யுள்' களே(Verses) .அவை பிள்ளைகளிடத்தே அறநெறியைப் போதிக்க வேண்டுமென்ற ஒரு கருத்தினடியாகப் பயிற்றுவிக்கப்பட்டவை. பிள்ளையிடத்து அழகியல் உணர்வை வளர்க்க வேண்டும். அதன் ரசனைத் திறனை வளர்க்க வேண்டுமென்ற அடிப்படையிலே இந்த விடயம் அணுகப்படுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது நாம் அந்தத் தொடக்க வகுப்புக்களிற் பயன்படுத்துபவை பெரும்பாலும் நவீனகாலத்துக்கு முற்பட்ட பாடங்களாகும் (pre modern texts). இந்தப் பாடங்களின் (texts) மொழி பிள்ளைகளின் அநுபவ வட்டத்தினுள் வருவனவல்ல. சொற் பிரயோகங்களும் அவர்களின் பரிச்சய வட்டத்துக்கு அப்பாற்பட்டவை. இதனால் , நாம் பதவுரை , பொழிப்புரை எனும் முறையைக் கையாளவேண்டியுள்ளது. மாணவர்கள் இந்த முறையை இலக்கியம் கற்றலுக்கான 'தர'மான (standard) முறையென்று நம்புகின்றோம். இதனால் அழகியல் ஈடுபாடு தடைப்படுகின்றது.

க.பொ.த உயர்மட்டப் பரீட்சையிற் பார்க்கும் பொழுது நமது இலக்கியக் கற்பிப்பின் ஒரு முக்கிய எடுகோள் புலனாகின்றது. அதாவது இலக்கியப் பாடம் என்பது முழுக்க முழுக்க ஆக்கியோனை மையமாகக் கொண்டது என்பதாகும். (இன்னும் தான் நாம் அவரைக் கவிஞர் என்பதில்லை. தொடர்ந்தும் புலவர் என்ற பதத்தையே பயன்படுத்துகிறோம். கவிஞர்கள் புலவர்களாக இருக்கலாம்; எல்லாப் புலவர்களும் கவிஞர்களல்லர்)

க.பொ.த உயர்மட்டப் பரீட்சை வினாக்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் பொழுது இலக்கியம் பற்றி நாம் கொள்ளும் சில எடுகோள்கள் பட்டவர்த்தனமாகத் தெரிய வருகின்றன.

அவையாவன:

அ. ஒரு படைப்பினைப் பொறுத்தவரையில் அதனை ஆக்கியோனே முக்கியமானவன்.

ஆ. அவன் எடுத்துச் சொல்வனவே அந்தப்படைப்பில் இடம்பெறும்

இ. அதில் (எடுத்துச் சொல்வதிற்) பல 'சிறப்புக்கள்' உள்ளன.

ஈ. அந்தச் சிறப்புக்களைக் 'கண்டறி'வதே வாசகரின் கடமை

இலக்கியம் பற்றிய இந்த எடுகோள்களின் அடிப்படையிலேயே நாம் இலக்கியத்தை நோக்கப் பழக்குகின்றோம். 'புலவர் எதனைக் கூறுகின்றார், எப்படிக் கூறுகின்றார் , அதிலுள்ள சிறப்புக்கள் யாவை' என்ற வாய்பாடு இதன் காரணமாகவே தோன்றுகின்றது.

உலக இலக்கிய விமரிசனத்துறையில் இப்பொழுது இந்த எடுகோள்கள் கேள்விக்குரியனவாக ஆக்கப்பட்டுள்ளன. இந்த எடுகோள்கள் எப்.ஆர்.லீவிஸ் போன்றோர் பிரசித்தப்படுத்திய விமரிசனக் கொள்கைகளின் அடியாகவே வலுப்பெற்றன.

மேனாட்டில் 1970களில் இலக்கிய விமரிசன முறையில் மிக முக்கியமான மாற்றங்கள் ஏற்பட்டன. அமைவியல்வாதம் (பலர் அமைப்பியல்வாதம் என்பர்) (structuralism - ஸ்ரக்சறலிசம்) அமைவியலின் பின்வந்த வாதங்கள் (post-structuralism) எனப்பல இலக்கியக் கொள்கைகள் முன்வைக்கப்பட்டு, இப்பொழுது இலக்கியம் நோக்கப்படும் முறைமையில் அடிப்படையான மாற்றங்கள் பல வந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுபதுகளில் ஏற்பட்ட இலக்கியக் கொள்கைகளைத் தெளிவுபட எடுத்துக் கூற முனைவோர், இலக்கிய விமரிசனத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் காரணமாகத் தற்பொழுது நான்கு முக்கிய இலக்கியச் செல்நெறிகள் மேற்கிளம்பியுள்ளன என்பர்.

**அவையாவன**

1. பாடத்தை (text) அடிப்படையாக் கொண்ட விமரிசன முறைமை
2. வாசகரை மையமாகக் கொண்ட (reader – oriented) விமரிசனக்கொள்கை
3. பாடத்தை மாத்திரமல்லாது, படைப்பின் சூழமை வினையும் (context) முக்கியப்படுத்தும் மார்க்ஸீய முறைமை
4. பெண்நிலைவாத விமரிசனமுறைமை (feminist approach)

இந்நான்கும் மேனாடுகளிற் காணப்படுவது போன்று தமிழிலும் பயில்நிலையில் உண்டென்று கருதுவது பொருத்தமானதன்று. உதாரணமாக, இன்னும் தான் நம்மிடையே பெண்நிலைவாதக் கொள்கைகள், கண்ணோட்டங்கள் இலக்கியத்தில் முக்கியப்படுத்தப் படவில்லை. பெண்நிலை எழுத்துக்கள் கூட இன்னும் பரந்துபட எழுதப்படவில்லை. இந்த நிலையில் பெண்நிலைவாத விமரிசனம் என்பது இன்னும் இங்கு தொழிற்படாத ஒன்றாகவே எடுக்கப்படல் வேண்டும்.

பெண்கள் எழுதுவது என்பது பெண்நிலைவாதமாகாது. பெண் நிலைவாதம் என்பது பெண்களை ஆண்களுக்கு எவ்விதத்திலும் குறைந்தவர்களாகக் கருதுவதில்லை என்பதுடன் பால்நிலை வேறுபாடுகளையும், பால்நிலை வேறுபாடுகள் காரணமாகக் கற்பிக்கப்படும் சமவீனங்கள் யாவற்றையும் கண்டிப்பது, தமிழ்நிலையிற் பெண்நிலைவாதம் இப்பொழுதுதான் படிப்படியாக மேனிலைப்படுகின்றது. இதன் வெளிப்பாடான சில முயற்சிகள் உண்டு. எனினும், பெண் நிலைவாத விமரிசனமுறைமை என்று முன் வைக்கத்தக்க அளவுக்கு இன்னும் நம்மிடையே ஓர் இலக்கியத் தொகுதி வளரவில்லையென்றே கூறவேண்டும். ஆனால், பெண்ணிலைவாதத்தின் அடிப்படையில் நமது இன்றைய கடந்தகால இலக்கியங்களை விமரிசிக்கலாம். பால் வேறுபாடு காரணமாக நாம் கற்பிக்கும் ஆண் மேன்மையும் பெண் தாழ்ச்சியும் நமது தமிழிலக்கியத்தில் நன்கு காணலாம். இந்தக் கருத்துநிலை நமது பண்பாட்டில் வன்மையாக ஊறியுள்ளது.

அடுத்து மார்க்ஸீயவாத இலக்கிய விமரிசன முறைமையை எடுத்து நோக்கும் பொழுதும் நம்மிடையே இந்த விமரிசனமுறைமை இன்னும் பூரணமாக வளரவில்லை யென்றே கூறவேண்டும். இலக்கியத்தின் சமூகத் தோற்றம் பற்றியும், இலக்கியம் தோன்றும் சமூகப் பின்புலத்தின் முக்கியத்துவம் பற்றியும் மார்க்ஸீயவாதம் வற்புறுத்தும். முற்போக்கு இலக்கியவாதம் என்பது இத்தகைய இலக்கிய நோக்குக்கான முதற்படியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தின் பின்புலமாகவிருக்கும் கருத்துநிலை (ideology) என்பது மிக முக்கியமானதாகும். இது வெறுமனே கருத்துக்களின் தொகுதியல்ல.

**கருத்துநிலை பற்றிய பின்வரும் வரைவிலக்கணத்தை இங்கு தரலாம்**

சமூக ஊட்டம் (அதாவது சமூகத்தினுள் ஏற்படும் உறவுப்பரிமாறல்கள்) வளரத் தொடங்க, அந்தச் சமூகத்தில் வாழும் மனிதர்கள் உலகம் பற்றியும், தங்களது சொந்தச் சமூக வாழ்க்கை பற்றியும் தெய்வம், சொத்து, அறம், நீதி ஆகியன பற்றியும் எண்ணக்கருத்துக்களையும் நோக்குகளையும் உருவாக்கிக் கொள்கின்றனர். இவற்றினடியாக சமூகம் பற்றியும், அரசியல், சட்டம், கலை, தத்துவநோக்குப் பற்றியும் கருத்துருவமான சில பொதுவான எண்ண அமைப்பு வளரத் தொடங்குகின்றது. அந்த எண்ண அமைப்புத்தான் 'கருத்துநிலை' என்று குறிப்பிடப்படுவதாகும். மனிதர்கள் தம் முன்னேயும் புறத்தேயும் இருக்கும் சூழலோடு உறவுகளாலேயே இந்த நோக்குகளும் எண்ண அமைப்புக்களும் ஏற்படுகின்றன.

குறிப்பிட்ட சமூக, பொருளாதாரச் சூழல் எத்தகைய கருத்து நிலைகளை ஏற்படுத்துகின்றன என்பதும், மனித இன்னல்கள், தொல்லைகள் தோன்றுவதற்கும், தொடர்வதற்கும் எவை இடமளிக்கின்றன என்பதும் , எத்தகைய சமூக மாற்றங்களால் மனித இன்னல்கள் , தொல்லைகள் மாறுமென்பதும் இந்தக் கருத்துநிலை விமரிசனத்துள் வரும்.

இத்தகைய ஒரு விமரிசனமுறைமை இன்னும் வளரவில்லையெனினும், பெண்நிலைவாத விமரிசனம் பற்றிக் குறிப்பிடும் பொழுது கூறப்பட்டது போன்று, இந்தக் கண்ணோட்டத்தில், நம்மிடையேயுள்ள இலக்கியங்கள் முழுவதையும் நாம் விமரிசிக்கலாம்.

பெண் நிலைவாத விமரிசனமும், மார்க்ஸீய விமரிசன முறைமையும் இலக்கிய அறிமுக மட்டத்தில் பெரிய முதன்மையைப் பெறமுடியாது. அந்த நிலையில் முக்கியத்துவம் பெறுவன, பாடத்தை (text) அடிப்படையாகக் கொண்ட விமரிசன முறைமையும் வாசகரை மையமாகக் கொண்ட விமரிசனக் கொள்கையுமேயாகும்.

**இவை இரண்டையும் மிகச் சுருக்கமாக நோக்குவோம்.**

**நாம் இலக்கியம் எனக் கொள்வது ஒரு குறிப்பிட்ட பாட அமைவையேயாகும். இந்தப் பாடஅமைவு சில குறிப்பிட்ட நியமங்களுக்கேற்பச் சொற்களை, தொடர்களை அடுக்கிச் செல்லும் பொழுது வருவதாகும். அவ்வாறு 'பாடத்தை' அமைப்பதினாலேயே ஒரு பாடம் (text) இலக்கியப் பாடமாக (literary text) அமைகின்றது. அவ்வாறு அமைந்ததன் பின்னர் இது தனித்துவமான சீவியத்தை (இருப்பைப்) பெறுகின்றது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடத்தினைப் புரிதல் என்பது, அதன் அமைவைப் புரிந்து கொள்ளலேயாகும். அவ்வாறு புரிந்து கொள்வதற்கு அது எவ்வாறு கட்டப்பெற்றுள்ளதென்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். பாடத்தை கட்டவிழ்ப்புச் செய்கின்ற பொழுது தான் (deconstruct) அது எவ்வாறு 'கட்டப்பெற்று' உள்ளது. (construct – கட்டமை / உண்டு பண்ணு) என்பது தெரியவரும்.

இந்தக் கட்டமைவில் ஆக்கியோனின் பங்கு வரையறுக்கப்பட்டதே. பாடத்தினைத் தோற்றுவிப்பதில் அவனுக்கு முக்கியத்துவம் உண்டு. பாடத்தின் தொடர்ச்சியான பேணுகையில் அவன் மாத்திரம் முக்கியப்படுபவன் அல்லன் என்பது அமைவுவாதத்தின் ஓர் எடுகோளாகும். பாடத்தின் தொடர்ச்சியான பேணுகைக்கு அவனுக்கு அப்பாலான சக்திகளே தொழிற்படுகின்றன என்பர்.

எனவே , விமரிசனத்தின் நோக்கு இந்த 'அமைவு' எவ்வாறு நிகழ்ந்துள்ளது என்பதை அறிவதே. அந்தக் கட்டமைவை அவிழ்த்து நோக்கும் பொழுது இது புலனாகும் என்பதே இப்பொழுது சிலரால் வற்புறுத்தப்படுகின்றது.

பாடத்தின் (text) அமைவுமுறைமை அதற்கு 'இலக்கிய'த் தன்மையை வழங்குகின்றது. இதனை விளங்கிக் கொள்பவர் வாசகரே. இலக்கியத்தில் புரிவுநிலையில் அல்லது விளக்க நிலையிலேயே அதன் இலக்கியத் தன்மை புலப்படும். எனவே இந்தப் புரிவு/ விளக்கநடை முறையில் வாசகர் முக்கியமாகின்றார். 'பொருள் கொள்ளுதல்' என்னும் நடைமுறையில் அவருக்கு ஒரு முக்கிய பங்குண்டு. அவருடைய அனுபவம், அவருடைய வாசிப்புப் பின்புலம் என்பன முக்கியமானவை. அவர் மட்டத்திலேயே இலக்கியம் இலக்கியமாக வாழ்கிறது. எனவே, இலக்கியத்தைப் புரிந்துகொள்வதில் நாம் வாசகரின் பதிற்குறிக்கு (response) முக்கிய இடம் கொடுக்கவேண்டுமென இந்த வாதம் சொல்லும்.

இந்த வாதங்கள் மிக நுண்ணியவை. இவற்றை விளக்குவதே சிரமம். முன்னர் கூறியது போன்று, இந்த நோக்குகள் வாழ்க்கை பற்றி நாம் கொண்டுள்ள அடிப்படையான தத்துவ (மெய்யியல்) நோக்கினடியாக மேற்கிளம்புபவை.

இவற்றையெல்லாம் இலக்கியம் பற்றிய கருத்துணர்வுடன் பயிற்றுதல் இடைநிலை வகுப்புகளில் எவ்வாறு பயன்படுத்தப்படுமென்பது பிரச்சினைக்குரிய விடயமே.

படைப்பாளியின் வெளிப்பாடுதான் இலக்கியப் படைப்பு என்ற கருதுகோளைக் கொண்ட தமிழ் பயிற்றற் சூழலில் இந்தப் புதிய கருத்துக்களை வகுப்பறைக்குள் கொண்டுசெல்வது என்பது மிகமிகச் சிரமமான கருமமே.

எனவே, முதல் நிலையாக ஆசிரியர்கள் மட்டத்தில், இலக்கிய விமரிசனத் துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை எடுத்து விளக்கல் வேண்டும். இலக்கியம் பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்த ஆர்வத்தையும், இலக்கிய விளக்கத்தின் அத்தியாவசியத்தையும் விளக்கல் வேண்டும். அத்தகைய ஒரு பரிச்சயநிலையின் மேல் இலக்கிய பாடத்தின் கட்டமைவினை விளங்கும் / விளக்கும் திறனை வளர்த்துக் கொள்ளவேண்டும். இங்கு பாடம் என்பது 'படிப்பிக்கப்படும் பகுதி' (lesson) எனும் கருத்தில் எடுக்கப்பெறாது 'text' (பாடம்) எனும் கருத்தில் எடுக்கப்பெற வேண்டும்.

இக்கட்டத்தில் 'பாடம்' (text) என்னும் சொல்லின் பொருளையும் அறிந்து கொள்ளல் நல்லது. Text என்பதன் மூலக்கருத்து 'இழைக்கப்பெற்றது' என்பதாகும். ஒரு குறிப்பிட்ட இழைப்புத் திறனிலே தான் 'பாடம்' (பாடம் பாடமாக ஒரு பொருளை வைத்தல் என்ற கருத்தினையும் நோக்குக) தோன்றுகின்றது. அதனுள் ஒரு 'அடுக்கு' உள்ளது.

இந்த அமைவு பற்றிய பிரக்ஞையை மாணவரிடத்திலே ஏற்படுத்தவேண்டும். இது ஓர் 'அழகியலுணர்வுச் சூழலிலே' மேற்கொள்ளப்பட வேண்டும். பிள்ளைகளுக்கு 'அழகு' பற்றிய அறிமுகம் வேண்டும்.

இவை கல்வியாளரின் பணிகள். அவர்களின் வழிகாட்டல் இவ்விடங்களில் மிக அவசியம். நாம் ஒன்றை மட்டும் உணர்ந்து கொள்ளல் வேண்டும். இலக்கியத்தின் படைப்பு, ரசனை பற்றிய பல எடுகோள்கள் இப்பொழுது மாறியுள்ளன. அந்த மாற்றங்களின் பின்புலத்தில் தமிழிலக்கியத்தைப் பார்க்கத் தவறுவது, நாம் வருங்காலத் தமிழ்ச் சந்ததியினருக்கு இழைக்கும் தவறாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *PAST STUDENTS' ASSOCIATION COMMITTEE MEMBERS -2008*



Seated :- Mrs.M.Kailayanathan, Mrs.V.Gowritharan, Mrs.U.Jothinathan(Principal), Mrs.K.Ganeshan (Secretary), Miss.S.Vimala, Miss.P.Mahalingam.
Standing:- Miss.M.Misriya, Miss.S.Sritheepa, Miss.Linda John, Miss.R.Mathumigha (Treasurer)

## *NON – ACADEMIC STAFF*



**Seated**:- Mrs.R.Nagamma, Mrs.M.Baby Singo, Mrs.U.Jothinathan(Principal), Mrs.T.RoshanMuraly(Vice Principal), Miss.G.Sangeetha, Mrs.S.Thavamanidevi.
**Standing**:- Mr.A.Parameswaran, Mr.J.K.Bathlet, Mr.K.Manoranjan.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IMPORTANCE OF THE HOME ENVIRONMENT IN CHILD'S EDUCATION

**K. Sambasivam**
B.A., P.G.D.E. P.G.D.E.M
M.Sc (Testing & Evaluation)
S.L.P.S.I

All the education we receive, we learn one-fourth from our teachers, one fourth from books, one fourth from our challenges and one fourth from our environment, Education in a wide sense takes place from the womb to the tomb. Home environment plays a vital role in child's education. many parents perception implies that school is a social institution set up by the society to play a major role in moulding the ideas, habits and attitudes of the children with a view to producing well balanced personalities, physically strong mentally alert, emotionally stable, culturally sound and socially efficient. But informal agencies of education such as the church and the home also have an important role in building up these important features.

The family or the home is an important agency of education and has been exercising an everlasting conduct and personality of its members. The education of the child is not the exclusive responsibility of the school. Parents can and should play an important role in shaping and building the corner of their children, originally the family was the all inclusive social institution and all human relationship were comprehended by this social institution mostly in rural areas the young child may be almost entirely dependent upon his family for his early education in human relationships. As a result the influence upon him of home conditions and family attitudes is more powerful than for the child whose home appears to be in an urban area.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Child development writers indicate the importance of the family in early childhood development. It is the only institution which is an essential agency for child rearing, socialization and for introducing the child to form the character and performing the child's personality. Therefore we can say a child's education begins in his home. The famous Italian patriot Joseph Mazzine said that the child comes to have the first lesson of citizenship on mothers knee and fathers knee. Thus home gives the child the experience of affection and of small community in which he is important. He experiences the relation with people of both sexes and different ages and for the multifarious aspects of adults life.

There are exemplary example where great people were influenced by their home environment. Mahathma Gandhi was greatly influenced by his mother. It was jija Bai who had imbued Shivaji with the Virtues of value. The great scientist Jagdish Chandra Bose got an insight into his scientific ingenuity from his mother's conversation during childhood. From these examples we can say it is the home more than the school that determines the quality and direction of any child's life. In the classroom situation the teacher soon knows the influence of the home environment and the attitudes of the parents from student's behaviour. Sometimes the teacher faces the challenge of the bad home influences and finally the teacher is the one who wins the battle. The innate goodness of the child eventually overcomes shortcomings of its home.

The family is expected to perform some important role in their children's total development. When a child gets the formal, informal learnings in all three taxonomy aspects only we can call it as total development. Otherwise it comes under the category of partial development or lopsided development. Therefore a child needs the following developments where family/ home plays an important role.

1. Proper physical development - games, sports and athletics directly contribute to physical development of students. These activities provide a useful channel for the growth and development of the




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

body. For proper physical development of the child, the home should provide for good healthy surroundings and rest.

2. Proper moral environment – since morality cannot be taught, it can only be learned. Long practical experience is important for the development of good conduct and is concerned with persons activities. Goodness must be practiced at all time.

**Level of moral / ethical development.**




There is a definite social background to moral life. Moral development and social development are closely related.

3. Opportunities for participation in house hold responsibilities, children should be associated with management of the household affairs. Participating in such activities children learn to subordinate their interest for the sake of the family.

4. Development of intellectual aesthetic and practical interest of the child - it is very important that the parents should try to findout the interests of the children and take necessary steps for their development.

5. Understanding of the child's nature-the intelligent parent would seize of every opportunity to gain knowledge of child psychology. They should consider a child to be an adult in miniature.

6. Understanding the importance of play in the education of the child - it is a wrong notion on the part of the parents to think that play is



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

a waste of time and therefore, not allowing them to play. They should provide ample opportunities for play.

7. Opportunities for self – expression – Parents should encourage their children to participate in various recreational and constructive activities. They should provide them with newspapers, magazines and short stories.

8. Special responsibility for religious education – right type of religious education should be provided by the home.

9. Realization of the limitations of the school – the parents should realize the importance of the work of the school, its limitations and co operation with the school authorities in furthering the progress of their children.

Some factors have greatly effected the role of the home, in child's life. Industrialization and urbanization are the main two factors which have more effects on these fields.

a. providing moral education b. providing religious education


c. providing social contact d. providing vocational guidance

We can conclude that the home, where children are regarded as a sacred trust by the guardians, where there is the proper climate for the child to develop good ideas, habits ,modes of thinking and behaviours, where the relationships between members are smooth and harmonious, make the task of the school easy and ensure good education for children. An educationist has observed "A wise father is more than a hundred school masters. The mother's face is the child's first lesson book. Home makes to the man"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ANNUAL PROGRAMME



Teacher's Day



G.C.E. A/L Get together



S.D.S.- A.G.M



Saraswathi Pooja



Navothaya week



Ready for X ' Mas

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


College Day


Exhibition


Sportsmeet


Parent's Day


Educational Tour


Prefect's Oath Ceremony

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sustainable Energy Options for Sri Lanka


**Prof. R. Shanthini**
Dept. of Chemical process Engineering
University of peredeniya
(Past students of T/Methofist Girls' College


In 2007, 88% of the world's energy requirement is met oil, coal and natural gas, which are known as fossil fuels. Such dependence on fossil fuel has two major problems. One is that the fossil fuel reserves have taken millions of years to form and cannot be replaced at the rate at which we consume them. It is therefore fossil fuels are expected to be depleted in the next 50 to 100 years. The other is burning of fossil fuels generate very large quantities of carbon dioxide ($CO_2$). This greenhouse gas is primarily responsible for the unprecedented rate of increase in the earth's temperature. This phenomenon, known as global warming, has been causing significant climatc changes leading to disruption of the ecosystems on which our survival depends. It is therefore that the world is now seriously looking for alternative sources of energy.

Fossil fuel-based energy supply in Sri Lanka in 2005 was 4172 kTOE (kilo tones of oil equivalent). It was 43% of the total energy consumption in Sri Lanka in 2005. The remaining energy requirement in 2005 was met by burning of biomass (4626 kTOE), by hydroelectric power resources (828 kTOE) and by other renewable resources such as solar and wind (4kTOE). A considerable part of the fossil fuel – based energy was used by transport sector for fuelling motor vehicles, buses, lorries, trains and others. The remaining was in the form of electricity produced at the thermal power stations.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## Biomass – based Energy

Unlike the energy generation from fossil fuels, energy generation by burning of biomass, such as wood and crop residues, is considered sustainable since we could replace the biomass within our lifetime by growing it. Also, as we know, growing plants takes in $CO_2$ from the atmosphere for photosynthesis, which is a process that converts $CO_2$ and water to carbohydrates with the help of energy from the sun. Since the $CO_2$ that is released from burning of biomass is utilized in growing the biomass burning does not contribute towards global warming and climate change. Moreover, unlike the fossil fuels that we have to buy from other countries, biomass could be produced within SriLanka itself.

In Sri Lanka , biomass – based energy was used mainly for cooking in rural households, hotels and bakeries. An efficient stove named ' Lanka Shakthi Wood Stove' was developed for urban households as an alternative for LPG stoves by the National Engineering Research and Development (NERD) Centre of Sri Lanka. This stove had won a Gold Medal in 24th International exhibition of invention of new techniques and product, Geneva 2002. This household stove operates on fuel wood pieces with very little smoke, and it makes efficient use of firewood.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Biomass, such as wood and crop wasters, can also be burned to produce steam for making electricity. Sugar factories in Sri Lanka, for example , make their own electricity by burning bagasse, the fibrous residue which is left over from crushing sugar cane. Electricity is produced from paddy husk in Polonnaruwa. Producing electricity from wood sources such as gliricidia plant is known as Dendro Power. Electricity is produced from dendro power in Dehiattakandiya, Buttala and several other locations in Sri Lanka. The dendro power plant at Walapane contributes 1.2 M.W power to the national grid of electricity supply. Sri Lanka hopes to produce 300 MW of electricity by dendro power in the future.

Municipal solid waste is yet another from of biomass that could be burned directly to produce steam that can be used to generate electricity. Biomass such as vegetable garbage and animal dung could be naturally biodegraded to produce biogas which is a mixture of approximately 60% Methane and 40% $CO_2$. No smoke is formed when burning biogas and could be used for cooking food.

Biomass such as sugar cane and corn can be fermented to produce ethanol, which could be blended with petrol made from fossil fuels in the vehicles and thereby reduce our dependence on fossil fuels to travel from one place to another. Ethanol is a renewable fuel because it is made from plants. Many cars in Brazil, the country with the world's largest ethanol production, operate on ethanol made from sugar cane. Biodiesel, another transportation fuel, can be produced from left-over food products like vegetables, oils and animal fats. Most biodiesel today is made from soyabean oil. Biodiesel is most often blended with petroleum diesel, but could also be used in regular diesel vehicles without making any changes to the engines.

The major disadvantage in the large-scale use of biomass-based energy is that it requires land and fresh water to produce biomass and therefore competes with the limited resources of land and fresh water that should be used to grow food to feed people and animals.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Solar Energy**

Solar energy that could be converted to heat and electricity is a very promising renewable energy source for Sri Lanka since we are situated close to the equator. Solar radiation over most part of the flat dry zone, which accounts for about two-thirds of the land area , varies from 4.0 -5.5 $kWh/m^2/day$. Significant amount of solar energy is utilized in Sri Lanka for drying applications.

Solar energy can be converted directly into electricity by the use of photovoltaic (PV) cells. PV cells are made of semi-conducting materials similar to those used in computer chips. When these materials absorb sunlight, the solar energy knocks electrons loose from their atoms, enabling the electrons to flow through the material to produce electricity. An array of 10 to 20 modules can provide enough power for a household. Over 50,000 PV systems have been installed in Sri Lanka for the purpose of household lighting in remote locations that are not connected to the electric grid. PV systems can be installed quickly and in size required and using solar energy produces no air or water pollution. However, manufacturing the PV cells consumes silicon and produces some waste products.

Solar hot water systems, that are widespread in the commercial and domestic sectors of Sri Lanka, are simple systems that are fastened to the roof of a building. It consists of a collector, which could be made of a simple glass topped insulated box with a flat solar absorber made of sheet metal attached to copper pipes and painted black, or a set of metal tubes surrounded by an evacuated (near vacuum) glass cylinder. The water from the collector can reach very high temperatures in good sunshine.

**Wind Energy**

According to the wind Energy Resource Atlas of Sri Lanka, there are nearly 5000 $km^2$ of windy areas with good-to-excellent wind resources potential in Sri Lanka. About 4100 $km^2$ of the total windy area is land and about 700$km^2$ is lagoon. The windy land represents



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

about more than 6% of the total land area (65,600 $km^2$) of Sri Lanka. Using a conservative assumption of 5 MW per $km^2$ this windy land could support almost 20,000 MW of potential installed capacity. If the windy lagoons are included, the total wind potential increases to approximately 24,000 MW.

About 25 off-grid wind power plants are there in Sri Lanka for residential use. A few dozen plants are also there in Sri Lanka to pump water for agricultural use. A pilot wind power plant located closer to Hambantota town provides about 3 MW electricity to the national grid. This project consists of 5 wind generators of 600kW each. Wind is a clean fuel; wind farms produce no air or water pollution because no fuel is burned. One of the negative features of the wind machines is that the wild bird populations flying through a wind machine get killed.

Wind is caused by the uneven heating of the earth's surface by the sun, and therefore wind will blow as long as the sun shines. Wind machines use blades to collect the wind's kinetic energy. The problem however is, when the wind is not blowing, we need to have other types of power plants to make electricity.

**Sri Lanka's energy plan for the future**


To meet the rapidly growing energy need, especially in the for, of electrification, Sri Lanka has planned to invest in coal power as shown clearly by the figure below. Coal energy is, however, the worst choice because coal is a fossil fuel that burns with a thick black smoke that is released into the atmosphere. The smoke causes problems ranging from emphysema (a lung disease) to acid rain. These polluting effects of coal are caused by impurities such as sulphar and nitrogen found within the coal itself. Burning of coal emits sulfur dioxide and nitrogen which can bind with water in the atmosphere and create sulphuric and nitric acid or acid rain . Acid rain can kill wildlife and pollute bodies of water. The large amounts of carbon dioxide released from the burning of coal would accelerate the reality of a global warming disaster. Moreover, since Sri Lanka has no coal reserves,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

coal has to be purchased from other countries which will deplete Sri Lanka's foreign exchange. It is therefore very important that Sri Lanka invests in the abovementioned sustainable and indigenous forms of energy to meet the future energy demand of Sri Lanka.

**Electrical Energy supplied to the Grid as a Share of the Total (in%)**




சங்கீதச் சொற்களில், சங்கீதமாய் சாயியின் குரலைக் கேட்போம்
மதங்களை இணைக்கும் பதம் - இதயங்களை இணைக்கும் ரிதம்
ஸ்வரங்கள் சேர்ந்தால் ராகங்கள் - கரங்கள் சேர்ந்தால் தாளங்கள்
இருக்கலாம் பலப்பல கிருதி - இருக்கவே வேண்டுமோர் சுருதி
அனைவர்க்கும் சிவப்பே குருதி - இசைப்போம் ஆனந்தம் பருகி
வாழ்க்கையே தனி ஆவர்த்தனம் - வளமை சேர்க்கும் சங்கீர்த்தனம்
இன்பம் ஏற ஆரோகணம் - துன்பம் இறங்க அவரோகணம்
இன்ப துன்பச் சங்கதிகள் - இணையும் வாழ்வே சங்கீதம்
ஆத்ம இசையே தரும் நாதம் - இவற்றால் உண்டு மனோலயம்
இறைக்காய் இசைப்பதே உன் தர்மம் - உண்டு வாழ்வில் நல் வர்ணம்
ஏழை என்பவன் கீழ்ஸ்தாயி - இருப்பவனோமத் திமஸ்தாயி
சேவை இசைந்தால் மேல்ஸ்தாயினி சேர்வார் உன்னுள் ஸ்ரீ சாயி

*(சாயி மார்க்கம்)*

*இளைஞர்களின் விசேட மலர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SCHOOL BASED CO-CURRICULAR ACTIVITIES



Girl Guide's 'Be Prepared'



St. John's Ambulance



Environmental Club



Religious Club



Net ball Team

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளைதிறனுள்ள ஆசிரியர்கள்

கலாநிதி மா.கருணாநிதி
கல்விப் பீடம்,
கொழும்புப் பல்கலைக்கழகம்

கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் இப்பொழுது கூடுதலான அளவில் பொதுமக்களின் பார்வைக்கு உட்பட்டுள்ளமை பற்றிப் பாடசாலை முகாமைத்துவமும் ஆசிரியர்களும் நன்கு அறிந்துகொள்ள வேண்டிய தேவையுள்ளது. பாடசாலைகளில் நாளாந்தம் என்ன நடைபெறுகின்றது என்பதை அறிந்து கொள்வதற்கும் அவ்விடயங்கள் பற்றிய விளக்கங்களை அறிந்து கொள்வதற்கும் செய்தித்தாள்கள், தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகள் விவாதங்கள் பெரிதும் உதவுகின்றன. கல்வி பற்றிய மனப்பாங்குகளும் பெற்றோரின் அபிலாசைகளும் மாற்றம் பெற்றுவரும் வேளையில் கல்வியில் இடம்பெறும் மாற்றங்களையும் அவை தொடர்பான செயல்முறைகளையும் அறிந்துகொள்வதற்கான முனைப்புகளும் பெற்றோர் மத்தியில் அதிகரித்துவருகின்றன.

பாடசாலைச் செயற்பாடுகளில் உண்டாகும் சிறந்த தன்மையானது விளைதிறன் மிகுந்த பாடசாலைகள் மற்றும் விளைதிறனுள்ள கற்பித்தல் என்ற விடயங்களிலும் செறிவுத்தன்மை ஏற்படுவதனை எதிர்பார்க்கிறது. பாடசாலையின் விளைதிறனுள்ள செயற்பாடுகளைத் தீர்மானிப்பதில் பாடசாலை மட்டுமன்றி பெற்றோர், பழைய மாணவர், நலன்விரும்பிகள் முதலானோரும் கூடுதலான பங்கினை ஏற்க விரும்புகின்றனர். இவர்களுடைய ஆர்வத்தினை மதிக்க வேண்டுமென்பதில் ஆசிரியர்களும் உடன்பாடான கருத்துக்களுடன் இருப்பதுடன் வகுப்பறைக் கதவுகளை மூடாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இன்று கலைத்திட்டமானது தேசிய மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. கலைத்திட்டத்தில் ஏற்படுகின்ற மாற்றங்களும் புத்தாக்கங்களும், அவற்றோடு இணைந்த கற்பித்தல் முறைகள், மதிப்பீட்டு முறைகள் போன்றவை கலைத்திட்டத்துக்குப் பொறுப்பான நிறுவனங்களால் வெளியிடப்படுகின்றன. இத்தகைய மாற்றங்களை அறிந்துகொள்ள வேண்டும் என்னும் ஆர்வமேலீட்டினால் பெற்றோர்கள் மேலும் மேலும் ஆசிரியர்களை அல்லது வகுப்பறையில் இடம்பெறும் விடயங்களை அறிவதற்காகப் பாடசாலைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகின்றனர். இவை கல்விசார் உயர்தொழில்சார்ந்தோர் மத்தியில் வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தி வருவதுடன் புதிய ஆராய்ச்சி முயற்சிகளுக்கும் வழிகோலுகின்றன.

மேற்கூறிய செயல்நெறிகளைக் கருத்தூன்றிப் பார்க்கும் பொழுது, பாடசாலையிலும் வகுப்பறையிலும் ஆசிரியர்களின் செயலாற்றல்கள் பற்றிப் பெற்றோர் அறியவேண்டிய நிலை தூண்டப்படுகிறது. பாடசாலைகளில் ஆசிரியர் பற்றிய மதிப்பீடுகள் வழமையானதொரு செயற்பாடாக இருத்தல் வேண்டும் என்பது படிப்படியாக உணர்ந்து கொள்ளப்பட்டாலும் இவ்விடயத்தில் பல முரண்பாடுகள் தோன்றுவதற்கு இடமுண்டு என்பதால் அத்தகைய முரண்பாடுகளைத் தவிர்த்துக் கொள்ளக்கூடிய விதத்தில் மதிப்பீடுகள் நிகழ்வதற்கான வழிமுறைகள் பற்றி முகாமைத்துவம் சிந்தித்தல் வேண்டும். இது பற்றிப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயம் என்னவெனில் 'வகுப்பறையில் ஆசிரியர் கற்பிப்பதனை அவதானிப்பதாகும்'.

வகுப்பறையில் அவதானங்களை மேற்கொள்வதன் மூலம் 'கற்பித்தலிலுள்ள சிறந்த நடைமுறைகள்' எவையென அறிந்து கொள்ள முடியுமாயினும் இதனிலும் சில படிகள் மேலே சென்று விளைதிறனுடன் கூடிய கற்பித்தலில் இடம்பெறவேண்டிய விடயங்களை ஒவ்வொரு ஆசிரியரும் ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு யதார்த்தபூர்வமாக அமைத்துக் கொண்டு வகுப்பறையில் இடம்பெறும் கற்றல் - கற்பித்தலை அவதானித்தல் அவசியமானது. இவ்விடத்திலும் நல்லவை எவை, அல்லாதவை எவை என்ற விடயத்தில் முரண்பாடுகள் எழுவதற்கு இடமுண்டு.

வகுப்பறையில் கற்றல் - கற்பித்தல் தொடர்பான விடயங்கள் சிக்கலானவை. ஆயினும் என்ன விடயத்தை என்ன முறையில் கற்பிக்க வேண்டுமென எடுத்துக் காட்டப்பட்டுள்ள போதிலும் பாடங்களைக் கற்பிக்க வேண்டிய பாங்கு (teaching style) மற்றும் கலைத்திட்டத்தினை வழங்கும் செயல்முறை பற்றிய விபரங்களைப் (process necessary to deliver the curriculum) பற்றித் தெளிவுபடுத்தப்படுவதில்லை. இலங்கையில் கலைத்திட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்படும் பல்வேறு விடயங்கள் பற்றிய தெளிவின்மை ஆசிரியர் மத்தியில் நிலவுவதன் காரணமாக கலைத்திட்ட அமுலாக்கத்தில் தேசியமட்டத்தில் வேறுபாடுகள் உள்ளன. முரண்பாடுகள் தோன்றுகின்றன. மாணவர்கள் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். எல்லாவற்றிலும் மேலாக, கற்றல் கற்பித்தல் என்பது ஓர் ஆக்கத்திறன் வாய்ந்த செயற்பாடு, புத்தாக்கத்துக்கான விடயம், ஆசிரியரின் கற்பனை வளத்துக்கு இடமளிக்கும் செயல் என்னும் கா்ரணங்களினாலே விளைதிறன்மிக்க கற்பித்தல் என்னும் விடயத்தினை மிகக் கவனமாக வரையறை செய்ய வேண்டியுள்ளது.

**விளைதிறன்மிக்க வகுப்பறை**

விளைதிறன்மிக்க வகுப்பறையில் கற்றல் - கற்பித்தல் தொடர்பாக இடம்பெற வேண்டியவையாவையென இங்கு காணலாம். இங்கு குறிப்பிடப்படும் விடயங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவற்றுடனும் ஆசிரியர்கள் உடன்படுவார்களா எனவும் அவதானித்தல் சிறந்தது. விளைதிறன்மிக்க வகுப்பறையில் மாணவர்கள் தமது பணிகளில் ஈடுபடுவார்கள். இப்பணிகள் மாணவர்களுடன் கூட்டாகச் சேர்ந்து ஆசிரியரால் திட்டமிடப்பட்டவையாக இருக்கும். குறிப்பிட்ட பாடவிடயம் தொடர்பாக பிள்ளைகள் விரும்பும் செயற்பாடுகளை அறிந்து அவற்றினை வகுப்பறையில் இடம்பெறச் செய்வதற்கான ஏற்பாடுகளில் ஆசிரியர்கள் கவனமெடுத்தல் முக்கியமானது. இவற்றுக்கு மத்தியில் பிரச்சினை தீர்ப்பதற்கான வாய்ப்புக்களும் உள்ளனவா எனப் பார்த்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு பிள்ளையும் தான்வாழும் உலகின் யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளும் வகையில் அனுபவங்கள் பரிமாறப்படும் பிள்ளைகள் சினேகபூர்வமான முறையில் புரிந்துணர்வுடன் குழுக்களாகச் செயற்பாடுகளில் ஈடுபட ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருக்கும். குறிப்பிட்ட விடயத்தினைக் கற்பிப்பதனால் அடையப்பட வேண்டிய இலக்குகளையும் அதன்மூலம் உண்டாகும் விளைவுகளையும் ஆசிரியர் தெளிவாக இனங்கண்டிருப்பார். இலக்குகள் நெகிழ்ச்சியானவையாக இருந்தால் பிள்ளைகள் யதார்த்தபூர்வமாக அனுபவங்களைப் பெற்றுக் கொள்வார்கள்.

விளைதிறன் மிகுந்த வகுப்பறையில் ஆசிரியரின் வகிபாகமானது கற்றலுக்கு வசதியளிப்பதாக இருக்குமேயொழிய எந்நேரமும் மேற்பார்வை செய்தலாக இருக்கக்கூடாது. வகுப்பிலுள்ள ஒவ்வொரு பிள்ளையும் பாடவேளையின் போது வரையறுக்கப்பட்ட நேரத்தில் உரிய செயற்பாடுகளில் ஈடுபட்டு எதிர்பார்க்கப்படும் இறுதி விளைவினை அடைந்துகொள்வர். இத்தகைய வகுப்பறைகளிலே ஆசிரியர்களால் பேணப்படும் பதிவுகள், அறிக்கைகள் யதார்த்தபூர்வமானவையாக இருக்கும். நம்பகமானதாக இருக்கும். கலைத்திட்டத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் திட்டமிட்ட முறையில் குறித்த காலப்பகுதியில் நிறைவேற்றப்படும்.

மேலே கூறப்பட்டுள்ள விடயங்கள் விளைதிறன்மிக்க வகுப்பறை முகாமைத்துவத்தினைக் குறிப்பனவாக உள்ளன. ஆயினும் அவற்றினை மேற்கொள்ளும் நடைமுறைகளில் ஆசிரியர் மத்தியில் வேறுபாடுகள் காணப்படலாம். இச்செயற்பாடுகள் யாவும் சிறந்த முறையில் இடம்பெற வேண்டுமானால் ஆசிரியரின் பண்புசார் விருத்தியில் மாற்றங்கள் உண்டாதல் வேண்டும்.

**ஒரு சிறந்த ஆசிரியர் எனப்படுபவர் பின்வரும் பண்புகளைக் கொண்டவராகக் காணப்படுவார்.**

- வகுப்பறையில் மாணவரின் மத்தியில் காணப்படும் பதட்டங்களைத் தணிக்க முற்படுவார்
- மாணவர்கள் தம்மைப் பற்றிய சாதகமான உணர்வுகளை உருவாக்க உதவிசெய்வார்
- வேலைச்சூழல் வேலையொழுங்கு போன்ற விடயங்களில் கவனம் செலுத்துதல் மாணவரின் பணிசார் நடத்தைகளில் அக்கறையும் ஈடுபாடும் காட்டுதல் மற்றும் எதிர்மறை அழுத்தங்களைக் கொடுக்காமலும் இருத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மாணவரும் பெற்றோரும் வழங்கும் கருத்துக்களையும் அபிப்பிராயங்களையும் உடன்பாடான முறையில் ஏற்றுக்கொண்டு வகுப்பறைச் செயற்பாடுகளில் அவர்களையும் பங்குதாரராகச் சேர்த்துக் கொள்வார்.

- கற்றல் நிகழ்ச்சிகளை வியப்பூட்டும் வகையில் ஒழுங்கு செய்யும் ஆற்றலுடையவராகக் காணப்படுவதுடன் தண்டனைகள் இன்றியே வகுப்பறையில் கட்டுப்பாடுகளைப் பேணுவர்.

- மாணவர்களை விமர்சிப்பதற்குப் பதிலாக, உரிய நேரத்தில் உரிய கணிப்பினை வழங்குவதில் கவனம் செலுத்துவர்

- மாணவர்களின் உத்வேகம், ஆற்றல், தனித்தன்மை ஆகியவற்றை விளங்கிக்கொண்டு அவற்றினைக் கற்றல் - கற்பித்தல் மேம்பாட்டுக்கும் பயன்படுத்துவர்.

- மாணவர் நிலையறிந்து பொருத்தமான வெவ்வேறு கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்துவர்

- மாணவரின் ஆர்வம், ஆக்கத்திறன் என்பவற்றுக்கேற்ப அனுபவங்களைப் பரிமாறுவர்.

- வகுப்பறையிலும் பாடசாலையிலும் சாதகமான மாற்றங்கள் உண்டாவதை எதிர்பார்ப்பதுடன் மாற்றங்களைக் கண்டு மகிழ்பவராகவும் இருப்பர்.

மேற்கூறியவாறு செயற்படுகின்ற ஓர் ஆசிரியரின் வகுப்பறை எப்பொழுதும் உயிரோட்டமுள்ளதாகவும், மகிழ்ச்சியுடையதாகவும் தராதரம் வாய்ந்ததாகவும் காணப்படும். ஆசிரியர் மற்றும் மாணவர் மத்தியில் பதட்டங்கள், மனவழுத்தங்கள் குறைவாகக் காணப்படும். ஆசிரியரும் தமது மாணவர் பற்றிய உயர் எதிர்பார்ப்புக்களை விருத்திசெய்து கொண்டு அதற்கேற்ப நடந்துகொள்ளும் சூழ்நிலை உண்டாகும். பரஸ்பரம் நம்பிக்கையின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட சுயகட்டுப்பாடு ஏற்படும். மாணவரிடத்தில் உண்டாகும் மனப்பாங்குகள் உயர்ந்தவையாக,மதிக்கப்படுபவையாக இருக்கும்.

**இவ்விடத்தில் தகுதியற்ற ஆசிரியர் யார் என்பதனை அறிந்து கொள்ளுதலும் பயனுடையது.**

- கண்டபடி அனைவரையும் அச்சுறுத்துபவர்

- யதார்த்தமில்லாத இலக்குகளின் அடிப்படையில் செயற்பட்டு தேவையற்ற அழுத்தங்களை உருவாக்கிக் கொண்டிருப்பார்.

- மாணவருக்கும் பெற்றோருக்கும் அச்சுறுத்தல் விடுபவராக இருப்பதுடன் அவர்கள் வழங்கும் கருத்துக்களை எதிர்மறையாக நோக்குவார்.

- தண்டனையை வழங்குவதன் மூலம் தமக்கும் மகிழ்ச்சியற்ற சூழ்நிலையை உருவாக்குவர். தாமே பதட்டப்படுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- விரிவான கலைத்திட்ட ஏற்பாடுகள் பாடசாலையினால் வழங்கப்பட்டிருந்தாலும் அவற்றினைக் குறுகிய நோக்கில் பார்த்து, விமர்சிப்பதுடன் மாணவரின் திறன் விருத்தி பற்றிய நோக்கில் அதனைப் பயன்படுத்தமாட்டார்.

- வழமையான வரையறுக்கப்பட்ட பணிகளில் மட்டும் ஈடுபடுவராயினும் விளைவுகளில் எவ்வித அக்கறையும் செலுத்தமாட்டார்

- ஆதிக்கத்தன்மை கொண்ட கற்பித்தல் பாங்குடன் மாணவர் காட்டும் பிரதிபலிப்புகளை விரும்பாதவராக இருப்பார்.

- மாணவரை அவமதிப்பதில் இன்பம் காண்பர்.

ஒரு பாடசாலையின் தொலைநோக்கும் இலக்குகளும் எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் நிறைவேறுவது தனியே பாடசாலை முகாமைத்துவத்தில் மட்டும் தங்கியிருக்கவில்லை. பாடசாலையிலுள்ள சகல ஆசிரியர்களும் தமது தனிப்பட்ட உயர்வுகளில் கவனம் செலுத்துவதில் காட்டுகின்ற அக்கறை போன்று பாடசாலைச் சமூகத்தின் கருத்துக்கள், உணர்வுகள் மற்றும் விருப்பங்களை அறிந்து அவர்களையும் விழிப்புறச் செய்து கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடும் பொழுது பாடசாலையானது சகலரதும் கவனத்தை ஈர்க்கின்ற தராதரம் கொண்ட விளைதிறன் மிகுந்த பாடசாலையாக விளங்கும்.

**நாவினால் உண்டாகும் நான்கு பாவங்கள்**

1. பொய் சொல்லுதல்
2. மற்றவர்களை குறை கூறுவது
3. மற்றவர்களை கேலி செய்வது
4. மித மிஞ்சிக் கதைப்பது

(சாயிபாபா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் அபிவிருத்தி

க. பேர்ணாட்
பீடாதிபதி
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி

## அறிமுகம்

தரமான கல்வி பற்றி சிந்திக்க தலைப்படும் ஒவ்வொரு சந்தாப்பத்திலும் கூடவே தரமான ஆசிரியர்கள் பற்றியும் சிந்திக்கப்படுகின்றது. அண்மைக்காலங்களில் "தரமான கல்விக்கு தரமான ஆசிரியர்கள்" என்ற எண்ணக்கரு முன்வைக்கப்பட்டு அதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றது. ஐக்கிய அமெரிக்காவின் கல்வி முன்னேற்றத்திற்கான தேசிய நிறுவகம் (U. S. A, 1996) "மாற்றமுற்றுக்கொண்டிருக்கும் உலகம் பாடசாலைகள், ஆசிரியர்களும் மாணவர்களும் கற்கும் நிறுவனங்களாக உருவாக வேண்டும் என குறிப்பிடுகின்றது." இங்கு பாடசாலைகள், ஆசிரியர்கள் கற்கும் நிறுவனங்களாக மாறுகின்ற போதே அவை மாணவர்கள் கற்கும் நிறுவனங்களாக அமைய முடியும் என்பதையும் வெளிப்படுத்தி நிற்கின்றது. அதேபோல் பூகோள மயமாகுதலாலும் கல்வியின் பயனாளிகளாலும் ஆசிரியர் அபிவிருத்தி பற்றி அதிகமாகவே எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் ஆசிரியர் அபிவிருத்தி உலகளவிலான போக்காகக் காணப்படுகின்றது. இவ்வாறான போக்கு இலங்கையிலும் காணப்படுகின்றது என்பதற்கு அண்மைக்கால ஆசிரியர் அபிவிருத்தி தொடர்பான முயற்சிகள் சான்றுகளாக அமைகின்றன. இவற்றில் ஆசிரியர் கல்வி தேசிய அதிகார சபை (NATE), தேசிய கல்வி நிறுவகம் (NIEs), தேசிய கல்வியியற் கல்லூரிகள் (NCOE), ஆசிரியர் மத்திய நிலையங்கள் (TCS) ஆகியவற்றினூடாக ஆசிரியர் அபிவிருத்தி தொடர்பாக எடுக்கப்பட்ட, எடுக்கப்பட்டு வருகின்ற முயற்சிகள் குறிப்பிடக்கூடியவையாகும். இங்கு தொடருறு ஆசிரியர் கல்வியினூடாக எதிர்பார்க்கப்படும் ஆசிரியர் முயற்சிகள் தொடர்ந்து காணப்படுகின்றன. எல்லா நிலைகளிலும் ஆசிரியர் அபிவிருத்தி அதிகம் சிந்திக்கப்படுகின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் அபிவிருத்தி

தொழில்சார் வல்லுநர்கள் என்ற வகையில் ஆசிரியர்கள் பாடசாலை அபிவிருத்தி குறித்து சிறப்பான பொறுப்புகளை கொண்டுள்ளனர். (Birkvad, 1998) எனவே ஆசிரியர்கள் தமது தொழில் காலம் முழுவதற்கும் தம்மை அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டியவர்களாக கருதப்படுகின்றனர். அதுமட்டுமன்றி கல்வி தொடர்பாக பெற்றோர்கள் உட்பட சமூகத்தின் அக்கறை எதிர்பார்க்கைகள் வேகமாகவும் பிரமாண்டமாகவும் வளர்ச்சியடைந்து வருகின்றன. இங்கு கல்வியினதும் அதனுடன் இணைந்த ஏனைய பணிகளினதும் இறுதி இலக்கு மாண்வர் அபிவிருத்தியாகும். மாணவர் அபிவிருத்தியின் வெற்றி தங்கியிருப்பது ஆசிரியர் அபிவிருத்தியின் அடிப்படையிலாகும். பெற்றோர், சமூக எதிர்பார்ப்புகளும் கலைத்திட்ட, கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளும் காலத்திற்கு காலம் மாற்றமடைந்துள்ள வண்ணம் உள்ளன. இதனால் ஆசிரியர் அபிவிருத்தி ஒரு காலத்திற்கு மட்டும் உள்ளடக்கப்படாது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டும் ஆசிரியர் அபிவிருத்திச் செயற்பாடு சமகால மாற்றங்களுக்கும் உட்பட்டு நவீனமயமாக்கப்பட வேண்டும் (கல்வி அமைச்சு, 2006) அத்தோடு ஆசிரியர் அபிவிருத்தி சுயமாக ஏற்படுத்தப்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது. இங்கு கூறப்பட்ட நியாயங்கள் ஆசிரியர் அபிவிருத்தித் தேவைகள் பற்றி எடுத்துக்காட்டப்படுகின்றன. முன்னதாக Hammond (1998) என்பவர் ஆசிரியர் அபிவிருத்தித் தேவைகள் பற்றி பின்வரும் விடயங்களை அடையாளம் காட்டுகின்றார்.

- ஆசிரியர்கள் தமது பாட விடயங்களை ஆழமாகவும் நெகிழ்வுத்தன்மையுடனும் விளங்க வேண்டிய தேவை.
- கற்றல் களத்திற்கும் நாளாந்த வாழ்க்கைக்கும் இடையிலான தொடர்புகள் பற்றி திட்டங்களை அறிய வேண்டிய தேவை.
- மாணவர்களுடைய வேலைகளை உணர்வுபூர்வமாகவும், கவனமாகவும் சிந்தனைப் போக்குடனும் கவனித்துக்கொள்ள வேண்டிய தேவை.
- வெவ்வேறு வகைப்பட்ட அறிவுகளைத் தேடிக்கற்றுக்கொள்ள வேண்டிய தேவை.
- வேறுபட்ட நோக்கங்களை இணைத்துக்கொண்டு வெவ்வேறுபட்ட கற்றல் கற்பித்தல் நுட்பங்களை கையாள வேண்டிய தேவை.
- மாணவர்களது கற்றல் அணுகுமுறைகளை மதிப்பீடு செய்ய வேண்டிய தேவை.
- கலைத்திட்ட வளங்களையும் தொழில்நுட்பங்களையும் மாணவர்களது தகவல் அறிவுத்தேடல்களுடன் இணைத்துக்கொள்ள வேண்டிய தேவை.
- மாணவர்கள் தேடல்களுக்கும் தகவல் தொடர்புகளுக்கும், பிரச்சினைகளை விடுவிப்பதற்குமான வழிமுறைகளை அறிந்து கொள்ள வேண்டிய தேவை.
- இணைந்து அல்லது கூட்டுக்கற்றல் பற்றி அறிந்து கொள்ள வேண்டிய தேவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆசிரியர்கள் தமது கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மதிப்பீடு செய்வதற்கும் அவற்றை மீளமைத்து முன்னேற்றிக்கொள்வதற்கும் சுயவிமர்சனம், சுயபிரதிபலிப்பு முறைகளை பயன்படுத்தி தம்மை விருத்தி செய்து கொள்ள வேண்டிய தேவை.

கல்வியியல் ஆய்வாளர் Hammond என்பவரால் முன்வைக்கப்பட்ட இத்தேவைகளுடன் வேறுபல கல்வியியலாளர்களும் ஆசிரியர் அவிருத்தி உலக ரீதியான ஓர் அத்தியாவசிய தேவையாகக் கருதி அவ்வப்போது வெவ்வேறு அம்சங்களை அடையாளம் கண்டு வெளிப்படுத்தியுள்ளனர்.

அடிக்கடியும், அல்லது தினமும் விரைவாக மாறிக்கொண்டிருக்கும் அறிவு, தொழினுட்பம், வாழ்க்கை முறையின் தேவைகளும் ஏனைய பூகோள மயமாற்றங்களும் மாணவர்களுடைய கல்வித்தேவைகளை நாளுக்கு நாள் மாற்றிக்கொண்டிருக்கின்றது. அதே போல் பாடசாலைகளும் அதன் ஆசிரியர்களும் தரமான வெளியீடுகளாகவும் நாட்டிற்கும் சமூகத்திற்கும் பொருத்தமான நல்ல குடிமக்களாகவும் எதிர்காலத்திற்கு பொருத்தமான வினைத்திறன் மிக்க தொழில் படையாகவோ, மனித வளங்களாவோ மாணவர்கள் உருவாக்கப்பட வேண்டும் என சமூகமும் அதன் நிறுவனங்களும் அரசுகளும் எதிர்பார்க்கின்றன. எனவே இவ்வாறான நியாயமான தேவைகளை அல்லது எதிர்பார்க்கைகளை சிந்தித்து நிறைவேற்ற வேண்டிய நிலையில் இன்றைய பாடசாலைகளும் அதன் ஆசிரியர்களும் காணப்படுகின்றனர். இதற்கமைவாக ஆசிரியர்கள் தம்மை தயார்படுத்திக்கொள்வதற்கும் தமது தொழில் வாண்மையை விருத்தி செய்து கொள்ளவும் வேண்டும் என எதிர்பார்க்கப் படுகின்றனர். இதற்கான சந்தர்ப்பங்கள் பாடசாலைகளால் ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றன. ஆசிரியர்கள் தம்மை உற்பத்தித்திறன் மிக்கவர்களாக, விருத்தி செய்து கொள்பவர்களாக ஆக்கிக்கொள்வதற்கு பாடசாலைகள் ஆதரவளிக்க வேண்டும் இந்த எண்ணங்களினூடாகவே ஆசிரியர் சேவைக்கால பயிற்சி, தொடருறு ஆசிரியர்கல்வி ஆகிய ஆசிரியர் அபிவிருத்தி முறைகள் தோற்றம் பெற்று வளர்ச்சி பெற்று வருகின்றன. இதில் தொடருறு ஆசிரியர் கல்விக்கான தேவைகளும் முக்கியத்துவமும் என்று அதிகரித்து வந்திருப்பதுடன் அதற்கான முயற்சிகளும் அதிகமாக காணப்படுகின்றன.

## தொடருறு ஆசிரியர் கல்வி

தொடருறு ஆசிரியர் கல்வி பற்றிய சிந்தனைகளும் முயற்சிகளும் அண்மைய ஆண்டுகளில் இலங்கையிலும் அதிகமாகக் காணப்படுகின்றன. முன்கூறப்பட்ட தேவைகள் கல்விக்கான எதிர்பார்க்கைகள் காரணமாக தொடருறு ஆசிரியர் கல்வி பற்றிய உலகரீதியான போக்கு இலங்கையிலும் செல்வாக்கு பெற்றிருக்கின்றமை அடையாளம் காணப்படக் கூடியவையாகும். தொடருறு ஆசிரியர் கல்விக்கான தேவையை வலியுறுத்தும் அதிகளவான ஆதாரங்கள் உலகரீதியாக காட்டப்பட்டு வருகின்றன. ஆசிரியர்களின் தொழில் தொடக்கத்தில் வழங்கப்படும் ஆரம்பப்பயிற்சி (Initial Teacher Education)

மாற்றமுறும் தேவைகளிலிருந்தும் ஆசிரியர்களுக்குரிய நடிபங்கிலிருந்தும் வெகுதூரமாக உள்ளது (Birkvad, 1997) என சுட்டிக்காட்டப்படுகின்றது. இதனாலும் ஆசிரியர்கள் தொடர்ச்சியாக ஆசிரியர் கல்விக்கு உட்படுத்தப்பட வேண்டியவர்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றனர். எவ்வாறாயினும் சேவைக்கால ஆசிரியர் கல்வி, தொடருறு ஆசிரியர் கல்விக்கான வெவ்வேறு முயற்சிகளிலும் முழுமையான ஆசிரியர் அபிவிருத்தியை அடைவதற்கு பல தடைகள் சவால்களை எதிர்நோக்கவேண்டியும் உள்ளது.

அண்மைய ஆண்டுகளில் இலங்கையிலும் ஆசிரியர் அபிவிருத்தி பற்றி அதிக கவனமும் ஈடுபாடும் காட்டப்படுகின்றன. அதேவேளை ஆசிரியர் அபிவிருத்தி தொடர்பான பல சவால்களுக்கும், தடைகளுக்கும் முகம்கொடுத்த அனுபவங்கள் காரணமாக "பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி " என்ற சிந்தனைப்போக்கு உலகரீதியாக காணப்படுகின்றது.

**பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி**

ஆசிரியர் அபிவிருத்தி தொடர்பாக செலுத்தப்பட்டு வந்திருக்கின்ற அதிகரித்த கவனமானது ஆசிரியர் தொடர்பு கல்வி பற்றியும் ஆசிரியர் தர மேம்பாடு பற்றியும் அதிகம் நீண்ட காலமாக வலியுறுத்தப்பட்டு வரப்படுகின்றது. அண்மைய ஆண்டுகளில் தொடருறு ஆசிரிய அப்பிவிருத்தி, ஆசிரியர் தர மேம்பாடு பற்றிய புதிய ஆலோசனைக்ள் முன்வைக்கப் படுகின்றன. அவற்றில் Movant (1981) என்பவரால் முன்வைக்கப்பட்ட மூன்று வகையான செயற்பாடுகளை இங்கு குறிப்பிடுவது முக்கியமானதாகும்.

(அ) பாடசாலைகள் ஆசிரியர் அபிவிருத்திக்கான அடித்தளங்களாகும்.
(ஆ) பாடசாலைகளை அடிப்படையாகக்கொண்ட ஆசிரியர் அபிவிருத்தி அணுகுமுறை.
(இ) பாடசாலைகளால் வழிப்படுத்தப்படும் ஆசிரியர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களாகும்.

இவ்வாறு குறிப்பிட்டுள்ள முறைகள் யாவும் வெளியிலிருந்து வரக்கூடிய ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பற்றியன்றி பாடசாலைகளுக்குள் நடாத்தப்படக்கூடிய வேலைத்திட்டங்களையே வலியுறுத்தி நிற்கின்றன. இதன் முக்கியத்துவம் உணரப்பட்டதினால் இலங்கையிலும் அண்மைக்காலங்களாக "பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் அபிவிருத்தி பற்றிய முனைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டு வரப்படுகின்றது."

பண்புசார் கல்வி விருத்தியை நோக்காகக் கொண்டு கல்வி அமைச்சினால் 2005ம் ஆண்டு தொடக்கம் அமுல்படுத்தப்படும் கல்வித்துறையின் முழுமையான பாடசாலையின் அபிவிருத்தியை பாடசாலை மூலமாக மேற்கொள்ள செயற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதுடன் இதற்காக தேவைப்படும் ஒதுக்கீடுகள் பண்புசார் உள்ளீட்டின் கீழ் வழங்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில் பாடசாலையை கட்டியெழுப்பும் வேலைத்திட்டம் (PSI) மற்றும் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் அபிவிருத்தி (S.B.T.D.) ஆகியன மேற்கூறப்பட்ட நோக்கத்திற்காக பாடசாலைகளில் செயற்படுத்துவதற்கான சிறப்பானதும் பொருத்தமானதுமான இரண்டு செயற்றிட்டங்களாகும். (செயலாளர், கல்வியமைச்சு 2006)

இவ்வாறு கூறப்பட்டுள்ள கல்வியமைச்சின் செயலாளரின் கூற்றிலிருந்து பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் அபிவிருத்தியின் நோக்கம் குறித்து அறியக்கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் அபிவிருத்தியை மேலும் விளங்கிக்கொள்வதற்காக கல்வியமைச்சின் ஆசிரியர் கல்விப்பிரிவு வெளியிட்ட "பாடசாலைக்கு உதவுதல்" என்னும் பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சுருக்கமான விளக்கத்தை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாகும். பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் அபிவிருத்தி எனப்படுவது, மாணவர்களது கற்றல் செயற்பாடுகளை விருத்திசெய்வதற்காக பாடசாலைகளுக்குரியவாறு இனம்காணப்பட்ட ஆசிரியர் அபிவிருத்தி தேவைகளுக்காக பாடசாலைகளினால் திட்டமிட்டு அமுல்படுத்தப்படும் கூட்டு சூழலிலுள்ள தொடர்ச்சியான ஆசிரியர் அபிவிருத்தி செயற்பாடாகும்.

இவ்வாறான கருத்துக்களிலிருந்து இதுவரை மேற்கொள்ளப்பட்டு வந்த பாடசாலைக்கு வெளியிலிருந்தான ஆசிரியர் அபிவிருத்தி செயற்பாடுகளை விட பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் அபிவிருத்தி செயற்பாடுகள் அதிக விளைவுகளை தரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறான எதிர்பார்க்கைகளுக்கு இதுவரை மேற்கொள்ளப்பட்டு வந்த பாடசாலைக்கு வெளியிலிருந்தான ஆசிரியர் அபிவிருத்தி செயற்பாடுகளில் இனம்காணப்பட்ட பலவீனங்களை காரணமாகக் கொள்ளமுடியும்.

பாடசாலைக்கு வெளியிலிருந்தான ஆசிரியர் அபிவிருத்தி செயற்பாட்டின் பிரச்சினைகள்.

பாடசாலைக்கு வெளியிலிருந்தான ஆசிரியர் அபிவிருத்திச் செயற்பாடுகளை இதுவரை மேற்கொண்ட நிறுவனங்களாக பின்வருவனவற்றை பிரதானமாகச் குறிப்பிட முடியும்.

1. தேசிய கல்வி நிறுவகம்
2. கல்வியமைச்சு (தேசிய / மாகாண)
3. வலயக்கல்விப்பணிமனை
4. அரசசார்பற்ற நிறுவனங்கள்
5. விஷேட வேலைத்திட்டங்கள் மூலம் வேறு நிறுவனங்கள்.

இவ்வாறான நிறுவனங்கள் பல ஆசிரியர் அபிவிருத்திச் செயற்றிட்டங்களை கவனமாக திட்டமிட்டு செயற்படுத்தியிருந்த போதும் அவற்றின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட ஆசிரியர் அபிவிருத்தி முழுமையாக அடையப்பட முடியாமைக்கு அவற்றில் இனம்காணப்பட்ட பலவீனங்கள் காரணமாகச் சுட்டிக்காட்டப்படுகின்றன. அவ்வாறானவை பின்வரும் வினாக்கள் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றன.

1. பாடசாலைக் கல்விமுறையிலுள்ள எல்லா ஆசிரியர்களுக்கும் சந்தர்ப்பம் கிடைக்கின்றனவா?
2. அவ்வாறான சந்தர்ப்பங்கள் கிடைத்த ஆசிரியர்கள் பெற்ற அறிவு ஏனைய ஆசிரியர்களுக்கும் பகிரப்படுகின்றதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. சேவையிலுள்ள ஆசிரியர்களுடைய தேவைகள் அறிந்து அத்தேவைக்கு ஏற்ப ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றதா?

4. பாடசாலைகளுக்கு வெளியே பாடசாலைகளுக்கு புறம்பான இடத்தில் இடம்பெறும் வேலைத்திட்டங்கள் மூலம் ஏற்படுகின்ற சிரமங்கள் எவை?

5. பாடசாலைகளுக்கு வெளியேயான வேலைத்திட்டங்கள் மூலம் பெறப்படும் அறிவு, ஆற்றல் வகுப்பறைக் கற்றல் கற்பித்தலில் முழுமையாக பயன்படுத்தப்படுகின்றதா?

6. அவ்வாறான வெளியிலிருந்தான ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மூலம் பெறப்படுகின்ற அறிவும், ஆற்றலும் பாடசாலை அதிபர்களினால் உணரப்படுகின்றதா?

7. முன்னைய ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மூலம் பெற்ற அறிவு, ஆற்றல் மாணவர்களது அடைவுமட்டத்தில் மாற்றங்கள் ஏற்படுத்தியமைக்கான ஆதாரங்கள் பாடசாலை அதிபர்களினால் தேடி அறியப்படுகின்றதா?

இவ்வாறான வினாக்களுக்கு விடைகாண முற்படுகின்ற போது இதுவரை மேற்கொள்ளப்பட்டு வந்த பாடசலைகளுக்கு வெளியேயான ஆசிரியர் அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் வேலைத்திட்டங்கள் மூலம் ஏற்படுத்த எதிர்பார்க்கப்பட்ட ஆசிரியர் அபிவிருத்தி அதன் மூலமாக கல்வியின் பண்புசார் விருத்தி தொடர்பாக திருப்தியடைய முடியாத நிலையிலேயே பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் அபிவிருத்தி தொடர்பான வேலைத்திட்டங்களின் தேவை பற்றி உணரப்படுகின்றது.

**அதிபரின் பொறுப்புக்கள்.**

பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி தொடர்பாக சிந்திக்க தலைப்படுகின்ற போது இது தொடர்பாக அதிபர்களின் பங்கு பற்றியும் குறிப்பிட வேண்டியுள்ளது. பாடசாலையின் பிரதான முகாமையாளர் அதிபர் என்ற வகையில் பாடசாலையின் வளங்களின் உச்சப் பயன்பாட்டை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு அவரிடமே காணப்படுகின்றது. அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், கல்விசாரா பணியாளர்கள், நலன்விரும்பிகள் ஆகியோர் பாடசாலைமட்டத்தில் காணப்படும் மனித வளங்களாகும். இவ்வளங்களில் மிகமுக்கியமாக விருத்தி செய்யப்பட வேண்டிய வளம் ஆசிரியர் வளமாகும். ஆசிரியர் வளம் விருத்தி செய்யப்படுவதினால் ஏனைய வளங்கள் ஒருங்கிணைந்து பயன்பாட்டிற்கு உட்படுத்தப்படும். அதன் மூலமே கல்வியின் பண்புசார் விருத்தி ஏற்படுத்தப்படும்.

பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி தொடர்பான கல்வியமைச்சின் கையேட்டில் அதிபரின் பொறுப்புக்கள் பின்வருமாறு பட்டியல் படுத்தப்படுகின்றது.

1. மாணவர்களை இலக்காகக் கொண்ட ஆசிரியர் அபிவிருத்தித் தேவைகளை இனம்காணல்.
2. திட்டமிடலில் பங்கேற்றல்
3. பாடசாலையில் மாணவர் ஆசிரியர் மற்றும் வேறு பதவிகளிலுள்ள சகலருக்குமிடையே ஒத்துழைப்பினை விருத்தி செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பெற்றோர்களின் ஒத்துழைப்பினை பெற்றுக்கொள்ளல்.

5. ஆசிரிய அபிவிருத்திப்பணிகளுக்கு உதவுபவர்களின் ஒத்துழைப்புகளை பெற்றுக் கொள்ளலும் அவர்களுடன் இணைந்து செயற்படலும்.

6. பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு தடை ஏற்படாதவாறு சகல பணிகளையும் ஒழுங்கு செய்தல்.

7. ஆசிரியர்களின் தேவைக்கு ஏற்றவாறு வெளிநபர்களின் அல்லது கல்வியியலாளர்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல்.

8. ஆசிரியர் கூட்டங்களில் ஆசிரியர் அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட கலந்துரையாடல்களை ஒழுங்கு செய்தல்.

9. ஆக்கத்திற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தல்.

10. பண்புசார் உள்ளீடுகளை ஆசிரியர் அபிவிருத்திப் பணிகளுக்காக பயன்படுத்தல்.

11. பாடசாலையில் கற்றல் சூழலை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுத்தல்.

12. சரியான தலைமைத்துவப் பண்புகளை இனம்கண்டு அவற்றை விருத்தி செய்தல்.

13. பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் அபிவிருத்திக்கான கலாச்சாரத்தை பாடசாலையில் ஏற்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

14. பல்வேறுபட்ட கல்வி நிறுவனங்களுக்கிடையே ஒத்துழைப்புகளை கட்டியெழுப்பல்.

15. முன்னோடி மற்றும் மேற்பார்வை மூலம் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் அபிவிருத்தி திட்டங்களை தொடர்ச்சியாக மேற்கொள்ளல்.

16. பின்னூட்டல் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

17. ஒத்துழைப்பு மிக்க சூழலில் சகல தரங்களினதும் அங்கத்தவர்களது மதிப்பீடு மற்றும் பெறுபேறுகளை வழங்கல்.

பாடசாலையை அடிப்படையாகக்கொண்ட ஆசிரியர் அபிவிருத்திச் செயற்பாட்டில் அதிபரின் பொறுப்புக்களை அவதானிக்கும் போது அவ்வாறான செயற்பாடுகளுக்கான நுட்பங்களுக்கு அவை அடிப்படையாகின்றன. எனவே பாடசாலை மட்டத்தில் ஆசிரியர் விருத்திக்கான நுட்பங்கள் இனம் காணப்பட வேண்டியுள்ளன.

**பாடசாலை மட்டத்தில் ஆசிரியர் அபிவிருத்திக்கான நுட்பங்கள்.**

இவ்வாறான நுட்பங்களை இலங்கை பாடசாலைகளுக்கு பொருத்தமாக இனம்காண்பதற்கு அடிப்படையாக வெவ்வேறு ஆய்வுகள் மூலம் முன்வைக்கப்பட்டுள்ள ஆலோசனைகளை குறிப்பிடுவது அவசியமானதும் அடிப்படையானதுமாகும். அவை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. Peer based Teacher development (Gingiss 1992)
   சகபாடி மட்ட ஆசிரியர் அபவிருத்தி

2. School Based Teacher Training (Birkvad, 1997)
   பாடசாலை மட்ட ஆசிரியர் பயிற்சி

3. Teacher to Teacher Base Teacher Training (Pennell & et al, 1998)
   ஆசிரியருக்கு ஆசிரியர் அடிப்படையான பயிற்சி

4. Teacher helping teachers Training (Stedman & Stroot, 1998)
   ஆசிரியருக்கு உதவும் ஆசிரியர் பயிற்சி

5. Professional development school system (Hummand, 1994)
   தொழில்வாண்மை விருத்தி பாடசாலை முறைமை.

6. Self directed professional development (Queensland Board of Teacher registration, 1997)
   சுயவழிப்படுத்தப்பட்ட தொழில்வாண்மை அபிவிருத்தி

7. Vocational Teacher Education (Finch, 1998)
   தொழில்முறையான ஆசிரியர் கல்வி.

8. Non Traditional Teacher Education ( Metcale & Kahlich, 1998)
   மரபு ரீதியான ஆசிரியர் கல்வி

9. Internet Based / wed based Training (Pritchard, 1998)
   வலைப்பின்னல் அல்லது வெப்தளம் அடிப்படையிலான ஆசிரியர் பயிற்சி

10. Self Instructions Learning (Rowntree, 1990)
    சுய அறிவுறுத்தல் கற்றல்.

இவ்வாலோசனைகள் இலங்கை பாடசாலைகளில் பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்திக்கான நுட்பங்களை அடையாளம் காண உதவியாக அமைகின்றன. அவ்வாறான நுட்பங்களுக்கு உதாரணமாக பின்வரும் நுட்பங்களைக் கொள்ளலாம்.

1. குறித்த பாடசாலை ஆசிரியர்களுக்கிடையில் தெரிவு செய்யப்பட்ட விடயம் தொடர்பான <u>கலந்துரையாடல்கள்.</u>

2. இனங்காணப்பட்ட தேவைகளுக்காக <u>திட்டமிடப்பட்ட செயலமர்வுகள்</u>.

3. ஆசிரியர்கள் தமக்கிடையில் பயன்படுத்தக்கூடிய <u>சுய மதிப்பீடுகள்.</u>



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஆசிரியர்கள் தமது அன்றாட செயற்பாட்டு அனுபவங்கள் தொடர்பான பிரதிபலிப்பு குறிப்பு எழுதுதல்.

5. தமது கற்றல் கற்பித்தல் அதனுடன் இணைந்த செயற்பாடுகள் தொடர்பாக சகபாடி மதிப்பீடு செய்தல்.

6. பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கிடையிலான தரவட்டங்கள் (Quality Circle) நடத்துதல்.

7. பாடசாலைகளுக்கு தேவையான இனங்காணப்பட்ட திறன் விருத்தி செயலமர்வுகள்.

8. பொதுவாக ஏற்பாடு செய்யப்பட்ட கண்காணிப்பு பாடங்கள் நடாத்துதல்.

9. ஆசிரியர் சங்க கூட்டங்களின் போதோ தனியாகவோ நடத்தப்படக்கூடிய வாண்மைத்துவ உரைகள்.

10. விரும்பி அழைக்கப்பட்ட உள்ளக மேற்பார்வை நுட்பங்கள்.

11. திட்டமிடப்பட்ட இணைப்பாட விதான செயற்பாடுகள்.

12. ஆசிரியர்களுக்கிடையிலான கற்றல் வட்டங்கள். (Study Circle)

13. நிபுணத்துவ ஆலோசனைகள் பெறல்.

14. மாதிரிப்பாடங்களை நடாத்துதல். (Model Lesson)

15. இலக்குகளை தீர்மானித்து செயற்படல்.

16. பெறுபேற்று பகுப்பாய்வு ஒப்பீடு, காரணங்களை கண்டாய்தல்.

17. ஆசிரியர்களுக்கிடையில் கூட்டுறவு கற்றல் முறைகளை ஏற்படுத்தல்.

18. ஆசிரியர் கூட்டங்களில் வாண்மைவிருத்தி நிகழ்ச்சிகளை இணைத்துக்கொள்ளல்.

19. பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட நாளாந்த அபிவிருத்தித் திட்டங்களை ஒழுங்குபடுத்தல்.

20. சகல தரங்களுக்குமிடையிலான ஆசிரியர் நல்லுறவுகளை பேணுதல்.

21. கற்றல் உபகரணங்களை தயாரித்தல், வேலையமர்வுகளை நடாத்துதல், கண்காட்சியை ஏற்படுத்தி விளக்கமளித்தல் விமர்சித்தல்.

22. அயலிலுள்ள அல்லது தெரிவு செய்யப்பட்ட வேறு பாடசாலை பணிகளை மேற்பார்வையிடல்.

23. ஆசிரியர்களிடத்தில் பின்னூட்டல் படிவங்களைப் பேணல், பயன்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. பாடசாலை மாணவர்களின் பெற்றோர் தொடர்புகளை கிரமமாக வெவ்வேறு வழிகளில் பயன்படுத்தல்.

25. தேசிய கல்வியியற் கல்லூரிகளின், ஆசிரியர் மத்திய நிலையங்களின் அல்லது வேறு ஆசிரியர் கல்வி நிறுவனங்களின் ஆசிரியர் கல்வியியலாளர்களை பயன்படுத்துதல்.

26. ஆசிரியர் விருத்திக்கு, செயலாற்றுகை தர விருத்திக்காக செயற்றிட்டங்கள் செயற்றொடர் ஆய்வுகளை மேற்கொள்ள வைத்தல்.

27. அதிபர் - மற்றும் ஆசிரியர்களுக்கிடையில் நல்லுறவை ஏற்படுத்தக்கூடிய நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்படுத்தல்.

இவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்களை பாடசாலைகளில் ஏற்பாடு செய்வதன் மூலம் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் அபிவிருத்திக்கு இட்டுச் செல்ல முடியும்.

இன்றைய பாடசாலைகள் சர்வதேச ரீதியாக வகுக்கப்பட்ட உயர்ந்த கல்வி இலக்குகள் பலவற்றை நிறைவேற்ற வேண்டும் எனவும் அவை இத்தகைய கல்வியின் உயர்ந்த கல்வி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு உரிய கட்டமைப்பையும் தகுதிகளையும் கொண்டதாகவும் இருக்க வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

எனவே தரமான கல்விக்கு தரமான ஆசிரியர்களை உருவாக்கி இற்றைப்படுத்தி கல்வியின் தர மேம்பாட்டை உறுதிப்படுத்துகின்ற பணியும் பாடசாலைகளிடமும் அவற்றின் முகாமையாளரான அதிபரிடமும் முகாமைத்துவக் குழுவிடமும் விடப்பட்டுள்ளது. இது ஒரு நல்ல வினைத்திறன் மிக்க சந்தர்ப்பமும் ஆகும். கல்வியின் பண்புசார் விருத்தியினூடாக மாணவர் அபிவிருத்தியை ஏற்படுத்தி எதிர்கால சமூகத்திற்கும் உலகத்திற்கும் பொருத்தமான மாணவர்களை உருவாக்குவதற்கும் சகல ஆசிரியர் அபிவிருத்தி பணிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். எதிர்காலங்களில் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களையும் பண்புசார் வளங்களையும் பயன்படுத்தி ஆசிரியர் அபிவிருத்தியை பாடசாலையை அடிப்படையாகக் கொண்டு செயற்படுத்த சகல அதிபர்களும் முன்வருவது அவசியமானதாகும்.

## REFERENCE:


1. Birkvad, B. (1996) Teacher Professional Department in Denmark. In Phi Delta Kappan V. 78,n8 P. 611 (4)

2. Hammon, L. D. (1998) Teacher Learning that support student Learning, In Educational Leadership, V.55n5P6 (6)

3. Morant, R. W. (1981) In Service Education with in school George Allen & Union, London & Australia.

4. ஆசிரியர் கல்விப்பிரிவு, கல்வியமைச்சு (2006) பாடசாலைகளுக்கு உதவுதல். பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்திக் கையேடு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் எப்படியோ அப்படியே......

நல்ல மனமுடையவரே நல்ல எண்ணமுடையவர்.
**பகவத்கீதை 6 :9**

**M.K.M. Mansoor**
B.Sc. PGDE. M.Ed (Canada)
SLEAS - 11

நாம் நல்லவர்கள் எனில் ஏனையோரில் நல்லதைக் காண்கின்றோம். நாம் திருடர் எனில் ஏனையோரைத் திருடராகப் பார்க்கின்றோம். இது ஒரு நிறுவனக் கணக்காளர் இந்நிறுவன ஊழியரைப் பார்ப்பது தொடக்கம் ஒரு ஆசிரியர் தனது மாணவனை நோக்குவது வரை சரியானதாகும். நாம் யாரை எப்படிப் பார்க்கின்றோமோ அவர்கள் அவ்வாறே நமக்குத் தெரிவார்கள்.

நாம் எப்படி இருக்க ஆசைப்படுகின்றோமோ அப்படியே இருக்கின்றோம். நல்லதை நினைக்காதவர் நல்லதை அடையமுடியாது. மகிழ்ச்சியாக இருக்க நினைக்காதவர், தானும் மகிழ்ச்சியாக இருப்பதில்லை. தனது நிறுவனத்தில் ஏனையோரையும் மகிழ்ச்சியாக இருக்க அனுமதிப்பதில்லை. அவர்கள் தங்கள் மகிழ்ச்சியை பெரும்பாலும் பொறாமையினூடாக அழித்து ஏனையோரின் மகிழ்ச்சியை அவதூறுகளினூடாக அழிப்பார்கள்.

ஒரு பாடசாலையிலுள்ளவர்கள் உறவுமுறைகளினூடாக மகிழ்ச்சியை உருவாக்க மகிழ்ச்சியைப் பேண, மகிழ்ச்சியைக் கடத்த, மகிழ்வாக வாழ முயற்சி எடுக்க வேண்டும்.

மகிழ்ச்சியை உருவாக்குவதில் பெரும்பங்கு அதிபரையே சாரும்.

ஒருவர் தான் விரும்பியவற்றை எல்லாம் சொன்னால் அவர் விரும்பாதவற்றைக் கேட்க நேரிடும். எனவே ஒரு பாடசாலையின் அதிபர் முதல் ஒரு திணைக்களத்தின் கணக்காளர் வரை கவலையில்லாமல் தன் வாயில் வந்ததை எல்லாம் சொல்லத் தொடங்கினால் ஒரு நாள் அங்கு வேலை செய்பவர் இவர் விரும்பாததை அவர் எதிரிலேயே கூற நேரிடும். அதனை அவர் தாங்க முடியாது. பின்னர் ஏனையோரும் அவருக்கு இது போதாது என்பர். ஏனையோரும் அவருக்கு எதிராகக் கதைக்க முற்படுவர். நீங்கள் எதனையும் கூறுமுன் அதனை உங்கள் காதுகள் கேட்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சியின் அடிப்படையை உங்களது சொற்களே உருவாக்குகின்றன அல்லது அழிக்கின்றன.

நீங்கள் எவ்வளவு உயர்ந்த பதவி வகிப்பவராக இருந்தாலும் எவராவது உங்களைப் பற்றி ஒரு நல்லது அல்லது ஒரு பாராட்டு சொன்னால் எவ்வளவு காலம் அதனை நினைவில் வைத்திருக்கின்றீர்கள். உங்கள் வீட்டில் உள்ளவர்களிடம் எத்தனை தடவை அதனைக் கூறுகின்றீர்கள். ஏன் நீங்கள் நல்லது சொன்னதாக, பாராட்டியதாக தங்கள் வீடுகளில் ஏனையோர் கூற வழி செய்யக்கூடாது. பிழையான விமர்சனமும் குறைகூறும் தன்மையும் உங்கள் அலுவலகத்திலோ, உங்கள் மாணவர்களிடமோ உங்களைப் பற்றிய அபிப்பிராயங்களை வளர்க்கும். நேர்ப்பாங்காக அல்லது எதிர்ப்பாங்காக நீங்கள் தான் உங்களைப்பற்றிய ஏனையோரின் அபிப்பிராயங்களின் தோற்றுவாய்.
நீங்கள் பாராட்டக் கற்றுக் கொள்ளுங்கள். நீங்களும் பாராட்டப்படுவீர்கள்.

ஒரு மாணவன் தொடர்ந்து உங்களுக்கு பிரச்சனையாளராக இருக்கின்றாரா? அவரை அவதானியுங்கள். நல்லதைச் செய்யும்போது ஒரு சபாஷ் போடுங்கள். அடுத்தநாள் முதல் அவர் நீங்கள் சொல்கின்றபடி இயங்குவார்.

நீங்கள் நல்லதைக் கண்டால் உடனேயே கூறி விடுங்கள். கெட்டதைக் கண்டால் கண்டுகொண்டதாகக் காட்டிக் கொள்ளாதீர்கள். பொறுத்திருங்கள். அதனை மகிழ்ச்சியாகவும் ஏற்றுக் கொள்ளும் விதமாகவும் கூறக்கூடிய சந்தர்ப்பம வரும். அதுவரை காத்திருங்கள்.

நீங்கள் அவமானப்படுத்த எடுக்கும் முயற்சி குற்ற உணர்வை அவர்களிடம் வளர்த்து விடும். நீங்கள் அன்பு செய்ய எடுக்கும் முயற்சி உங்களைச் சூழ ஓர் சிறந்த ஆளணியை உருவாக்கும்.

ஒரு மாணவர் 9 A களையும் ஒரு C ஐயும் பெற்றால் நீங்கள் எதுபற்றி அவருடன் முதலில் உரையாடுகின்றீர்கள். அந்த ஒரு Cஐப் பற்றி அல்லவா? அவர் எடுத்த A களைப்பற்றி அவரைப் பாராட்டுங்கள். C எடுத்த பாடத்தை அடுத்த தடவை A ஆக்க முயல்வார். ஒருவர் 10 வேலைகளைச் செய்யும் போது ஒரு வேலையில் தவறு வரலாம். தவறைப் பற்றி பேசுவீர்களானால் ஏனைய வேலைகளும் தொடர்ந்து தவறிடும். இவை எல்லாம் உங்களைச் சூழ நீங்கள் மகிழ்ச்சியை வளர்த்துக்கொள்ள சில ஆலோசனைகள் தான்.

அதிபர் தான் பாடசாலை. பாடசாலை தான் அதிபர்.

அதிபர் மகிழ்ச்சியாக இருந்தால் பாடசாலை மகிழ்ச்சியாக இயங்கும். அதிபர் மகிழ்ச்சியை ஆசிரியர்களிடம் ஏற்படுத்தினால் ஆசிரியர்கள் மாணவர்களிடம் மகிழ்ச்சியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்துவார்கள். மாணவர்கள் தங்கள் பெற்றோர்களிடம் மகிழ்ச்சியை ஏற்படுத்துவார்கள். இதனை மகிழ்ச்சி வட்டம் (Happy Cycle) எனலாம்.

கல்வி ஒவ்வொரு மாணவரிடமும் இருக்கும் ஆற்றல்களை வளர்க்கத் தனது திட்டங்களை எல்லாம் தீட்டுகின்றது. சிலவேளை அதிபரும், ஆசிரியரும், பெற்றோரும் மாணவர்களிடம் அவருக்கு எதுவெல்லாம் இயலாதோ அவற்றைக் காட்ட முயற்சிக்கின்றனர்.

மாணவர்களை மகிழ்ச்சியாக வைத்திருப்பது அப்படி ஒன்றும் கஷ்டமான காரியம் அல்ல. "நாம் மகிழ்ச்சியாக இருப்போம்". என்ற எண்ணத்துடன் பாடசாலைக்கோ அலுவலகத்திற்கோ வந்தால் அதுவே போதும். அந்த எண்ணமே நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்கான சகல சூழலையும் உங்களுக்கு அடையாளம் காட்டும்.

நாம் அதிக நேரம் நம் பிரச்சினைகளை ஏனையோரிடம் கூறிக்கொண்டு இருக்கின்றோம். அடுத்தவர் பிரச்சினைகளைக் கூறத்தூண்டி அதனைக் காது தாழ்த்திக் கேட்டாலே போதும் மற்றவர்களை மகிழ்ச்சிப்படுத்தி விடலாம். அவரவர் மட்டத்தில் சிறிதாகவும், அதிகமாகவும் பிரச்சினை வரும். அவை தனிமனிதனை நோக்கியவை அல்ல. உங்களது பதவிகளை நோக்கியவை. பின் ஏன் நீங்கள் உங்கள் மகிழ்ச்சியை பிரச்சினைகளினூடாக இழக்கின்றீர்கள்? நீங்கள் அப்பதவியில் இருக்காவிட்டாலும் அதே பதவியிலுள்ளவருக்கு அவ்வளவு பிரச்சினைகளும் வரும். பிரச்சினை உங்களுக்கானவை என எண்ணாதீர்கள் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

எண்ணிக் கொள்ளுங்கள் உங்கள் அனுமதியின்றி யாரும் உங்கள் மகிழ்ச்சியைக் கொள்ளையிட முடியாது. இது சிறந்த அதிபருக்கு.

ஆசிரியர்களை மகிழ்ச்சியாக வைத்திருக்கத் தெரியாத அதிபர் உண்மையில் இலக்குகளை அடையத்தக்கதாகத் தனது நிறுவனத்தை வழிநடத்த முடியாது. இதுவும் சிறந்த அதிபருக்குத்தான்.

மகிழ்ச்சி நாம் என்ன பெற்றிருக்கின்றோம் என்பதில் இல்லை. நாம் எப்படி இருக்கின்றோம் என்பதில் இருக்கின்றது.

எனவே மகிழ்ச்சியாக இருக்க 10 உறுதிகள்

* முதலில் மகிழ்வாக இருப்பது என்று முடிவெடுங்கள்.
* நல்லவற்றைக் காணுங்கள், அவற்றைப் பாராட்டவும் பழகிக் கொள்ளுங்கள்.
* உங்கள் முகத்தை அடிக்கடி கண்ணாடியில் பார்த்துக் கொள்ளுங்கள்.
* மகிழ்ச்சியாக இருப்பதை உறுதிப்படுத்துங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* மகிழ்ச்சியாக வலம் வாருங்கள்.
* மற்றவர் பிரச்சினைகளைச் செவிமடுக்கப் பழகிக்கொள்ளுங்கள்.
* மகிழ்வாக இருந்ததை எழுதிக் கொள்ளுங்கள்.
* இதனை அடிக்கடி வாசித்துக் கொள்ளுங்கள்.
* எப்போதும் பயனுள்ள பணியில் நீங்கள் ஈடுபடுங்கள்.
* ஏனையோரின் பெருமிதத்தில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள்.
* குறை சொல்லாதீர்கள்.

எப்போதும் மகிழ்ச்சியாக இருக்க எவராலும் முடியாது. இதனை நீங்கள் கூற வேண்டாம். எவராலும் முடியாததை நாம் செய்ய வேண்டும் என்று எண்ணுங்கள். செய்வீர்கள்.

*God does not need anything from a devotee except devotion and complete Surrender. He expects from him sacred body. Sacred words, sacred vision and selfless action. When the devotee offers these things, god gives himself to that devotee. Man's body. mind and actions should always be pure, so that god is attracted towards him.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Quality Education

**Mrs. K.N. Shafie Marikar**
Attorney-at-Law
Convenor – Sri Lanka
Women Teachers' Network
Colombo.

Everyone has the right not only to receive education, but to receive education of a high quality.

Quality Education can be defined as the education that best fits the present and future needs of the particular learners in question and the global community. For this they should be given the particular circumstances and prospects. One of the key measures to create the foundation for sustainable development, where everyone will have the opportunity to live a decent life and democracy and equal rights will be strengthened, is investment in quality education. The quality concept embraces the development of the potential of every member of each new generation.

A quality education system must manage to provide all children and young people, without distinction of any kind, such as race, colour, sex, language, religion, political or other opinion, national or social origin, with a comprehensive education. It should be with an appropriate preparation for working life, life in society and private life in the form of further education within vocational schools, colleges, universities or other educational institutions.

The cost for education should not be regarded as expenditure, but as a crucial investment in the future.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Threats Against Quality Education

- One of the main threats today is an excessively narrow-minded, short-sighted, economistic approach towards education. It seems that many governments are willing to decrease the quality level if it saves money.

- Low teacher salaries will make it difficult to recruit new teachers and retain the good teachers in education. Low salaries are threatening the quality of education. E.g. Teachers' temptation to conduct tuition classes.

- Increase in class size - difficult for the teacher to give individual attention.

- An increase in the number of lessons will mean an increase in workload and less time to do necessary preparation and follow-up lessons. This will affect the quality of the lesson's.

- Limitations in the professional freedom of the teacher. This will make it more difficult for the teacher to decide which methods to use in the classroom in order to create an optimal learning situation.

## How Can the Quality of Education be improved?

- The learning condition for students must be improved. This means investment in school buildings, school environment and equipment. School meals in remote government schools would reduce the drop-out rate due to malnutrition and ill-health.

- Improve the working conditions of teachers.

- A fundamental issue is to make the teaching profession attractive. Some examples are – Education and training for teachers, career opportunities, salaries, working hours, working environment and the ability to influence working conditions.

- In order to play their main role teachers must be well prepared for their professional duties. For this teacher training education is always of paramount importance in increasing the quality of education.

- Provide continuous professional development to update the teacher and give him/her an opportunity to find new approaches to teaching. This is important to keep the good teachers and retain them in the profession. To improve the quality of education teachers must be supported in their efforts to develop professionally.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- The link between classroom teaching and research is extremely important. Teachers must be given information about the latest findings in educational, pedagogical and psychological research and information be given to the researchers about the problems in teaching experienced by classroom teachers. Strengthened pedagogical research based on these could be an important step to improve the quality of education.

- Steps have to be taken to introduce new technologies into the schools on a broader scale than have been done so far. Information and communication technologies can and should be used as tools for teaching in all subjects – in Arts, humanities and social sciences as well as in Mathematics and Technical subjects.

- To maintain and develop quality in education it is necessary to increase knowledge about the needs and demands in the surrounding environment. Important problems in society such as environmental problems, HIV/AIDS, violence, growing threats against democracy must be reflected in the education given to the students at least in the Advanced Level class. This will contribute to an increased quality in education.

- Habits in the family on reading, discussing, participating in cultural activities etc. as well as the economic standard, the education of the parents, the professions of the parents etc. seem to be factors that substantially influence the school achievements more than school factors.

- Measures should be taken to guarantee the quality and recognition of examinations. We must find ways to integrate assessment with learning through the use of the students regular work.

- The total output of education is not only mathematics, reading, comprehension etc. but the entire result of learning processes in several subjects. What really counts is not the output of the learning process as it can be measured during the process or immediately after the learning, but what the outcome will be in 10 or 20 years time. Quality cannot be seen as snapshots in time but as a journey.

Quality education cannot be regarded as a process of consumption but as a process of active interaction between teachers and students, and where the students are given the opportunities to develop themselves and their confidence to enable them to adapt to new situations.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LOVE THY NEIGHBOUR AS THYSELF




Peace through language - Abayapura S.M.V.



Peace Tour -St. Mary's College



Teacher's Awarners Programme - Vani vid. & Punithavalanar Vid.



Model Exam for Grade 5 Scholarship



Educational Tour
Sinhala M.M.V., Jamaliya M.M.V.



Peace through Culture - Tissa M.V.



Light House Programme
- Neighbouring Schools




Scholarship - G.C.E. O/L
- Vigneswara M.V. by
SLWTN



Film Festival Programme - St. Joseph, St. Xavier

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசைக்கலையின் மேன்மையும் வளர்ச்சியும்

**செல்வி. மணிமேகலாதேவி கார்த்திகேசு**
சங்கீதகலா வித்தகர்,
ஓய்வுபெற்ற முன்னாள் ஆசிரியை,
ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி,
திருக்கோணமலை.

இசைக்கலை, இறைவன் எமக்கருளிய அருஞ்சாதனை நாதப்பிரம்மமாக விளங்கும் ஈசனையே வசப்படுத்தக்கூடிய அதியுன்னத கலையும் இதுவே. "ஏழிசையாய் இசைப்பயனாய் விளங்கும் இறைவன் சாமகானப் பிரியனாவான். "பண்ணும் பதமேழும் பலவோசைத் தமிழிசையும்..." என ஆளுடைப் பிள்ளையும், ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே......" என அப்பர் பெருமானும், "பண்ணுள்ளீராய் பாட்டும் ஆனீர்"... எனச் சுந்தரரும்." பண்ணார்ந்த மொழி மங்கை...." எனத் திருவாதவூரரும் அருளிய தெய்வீகப் பாடல்களும் இக்கருத்தை வலியுறுத்துகின்றன.

மேலும் தட்சணகைலாய புராணங் கூறும் நிகழ்வில், அடுக்கற்கீட் கிடந்த இராவணேஸ்வரன் வீணை வாசித்துச் "சாமகானம் பாட, அது கேட்டு மகிழ்ந்த இறைவன், தன்னிலை மறந்து நடனமாடக் காலைத் தூக்கியபோது, இராவணன் விடுதலை பெற்று உய்ந்த வரலாறும், இறைவன் அடியவரின் பக்தி இசைக்குக் கட்டுப்பட்டவன் என்பதை "உள்ளங்கை நெல்லிக்கனி" என உணர்த்துகிறது.

இன்னும் இறையருள் பெற்ற அருளாளர்கள் தமது பக்தி இசையால், இறைவனைத் தம் வயப்படுத்தி, பல்வேறு அற்புதங்களை நிகழ்த்தி, மக்கள் மனதில் இறை பக்தியையும் நம்பிக்கையையும் வளர்த்து, "இசைவழி இறைவனை விரைவில் அடையலாம்" என்பதையும் மெய்ப்பித்துள்ளனர். இதைச் சைவத் திருமுறைகள் எமக்கு வலியுறுத்துகின்றன.

"இசை" என்பது செவிக்கு இன்பத்தைக் கொடுக்கும் ஓசையாகும். இதற்கு ஆதாரமாக உள்ளது. "நாதம்" இது ஆகதநாதம், அநாகதநாதம் என இருவகைப்படும். மனிதனுடைய முயற்சியினால் உண்டாக்கப்படுவது "ஆகதநாதம்" இது வாய்ப்பாட்டிசை வாத்திய இசை என இருபிரிவுகளைக் கொண்டது. அநாகதநாதம் மனித முயற்சி இன்றி அண்டவெளியிலே இயற்கையாகக் கேட்கப்படும் இசை. இவ்விசையை முனிவர்களும், ஞானிகளும், இறையருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற அருளாளர்கள் மட்டுமே உணர்வர். அத்தகைய பெருமைக்கு உரிய ஒருவர் ஸ்ரீதியாகராஜ சுவாமிகளாவர். இன்னும் "மனிதனுடைய மூலாதாரத்திலிருந்தும் "அநாகதநாதம்" பிறக்கும் என ஞானிகள் கூறுவர்.

மனித மனத்தின் துன்பியல்பைப் போக்கி, இன்பியில் ஆழ்த்தும் வல்லபம் பெற்றதும் இசையாகும். பண்டிதர் பாமரர் என்ற பேதமின்றி அனைவராலும் விரும்பப்படுவது இசைக்கலையே. "செவிவழியாகச் சென்று, உள்ளத்துள் நுழைந்து, உணர்வுகளைத் தன்வயப்படுத்தி உயிரிற் கலப்பது தான் உன்னதமான இசை" எனச் சான்றோர் கூறுவர்.

முத்தமிழ்களுள் முதலிடம் வகிப்பதும், நுண்கலைகளான இசை, நடனம், சிற்பம், ஓவியம், கட்டடம் ஆகியவற்றுள், கலைஞனையும் ரசிகனையும் ஒரே சமயத்திற் பரவசப்படுத்தும் மகத்துவம் பெற்றதும் இசையெனின் மிகையன்று.

இக்கலை, மனிதனை மட்டுமன்றி, விலங்குகள், பறவைகள், மரஞ்செடிகொடி, அருவி, கல் ஏன் பலகை போன்ற சடப்பொருட்களையுங் கனியவைக்கும் அற்புதமான சக்தியுடையதாம். மேலும் மழைபெய்யவும், மழை நிற்கவும், தீ எரியவும், மரங்கள் செழிக்கவும், மதயானை பணிந்து வணங்கவும், சீறும் பாம்பு படமெடுத்தாடவும் செய்யக்கூடிய அபாரசக்தி இசைக்குண்டு. இதைப் பண்டைத்தமிழ் நூல்களும், திருமுறைகளும், புராண இதிகாசங்களும், வலியுறுத்துகின்றன. இன்றைய விஞ்ஞானிகளும் தம் ஆய்வுகள் வாயிலாக உறுதிப்படுத்தியுள்ளனர்.

இத்தகைய பெருமைமிக்க அருங்கலை, உலகம் தோன்றிய காலந்தொட்டே பயன்பாட்டில் இருந்துள்ளது எனப் புதைபொருள் ஆய்வாளர் கூறுவர். ஆதிமனிதன் இயற்கையோடு ஒன்றிவாழ்ந்த காலத்தில், பலவிதமான ஓசைகளையுங் கேட்க ரசித்து, தாமும் அவ்வொலிகளைத் தமது கண்டத்திலிருந்து பிறப்பிக்க முயன்று வெற்றியுங் கண்டான். பின்னர் படிப்படியாக அவ்வோசைகளைத் தனது பல தேவைகளுக்கும் பயன்படுத்தினான். தனது உணர்வுகளைப் பிறருக்கு வெளிப்படுத்தவும், மிருகங்கள் பறவைகளை வசப்படுத்தவும் இவ்வோசைகள் உதவின. அவ்வேளைகளில் அவன் பலவித சைகைகளையும், முகபாவங்களையுங் கூடக் காண்பித்தான். இவ்வாறே இசையும் நடனமுந் தோன்றின.

இயற்கையில் அசைந்த நாணற்புல், மூங்கில், மரங்களிற் தொங்கிய பட்டைகள், விழுதுகள், வில்லிற் கட்டப்பட்ட மிருகங்களின் நரம்புகள் போன்றவை காற்றில் அசைந்து ஒலியெழுப்பிய போது, அவை அவனைக் கவர்ந்தன. உடனே அவன், மரத்தண்டுகள், பட்டைகள், மூங்கில், மிருகங்களின் தோல், நரம்புகள் என்பவற்றைப் பயன்படுத்தி இசைக்கருவிகளை உருவாக்கினான். அவற்றைத் தட்டிப்பார்த்தான். அவையெழும்பிய ஓசை வன்மையாக இருந்தாலும், சுயமுயற்சியாற் பெற்றதால் மனதுக்கு இதமளித்தது. மேலும் மேலும் அவற்றைத் திருத்தி அமைக்கவுஞ் செய்தான். பயன்படுத்தவுந் தொடங்கினான். இசைப்பதற்கு மட்டுமன்றித் தாளத்திற்கும் முரசு, பறை, தாரை, தப்பட்டை போன்றவற்றையும் ஆக்கினான். இவற்றைப் பாடியாடி இன்புறுதற்கன்றி இக்கருவிகளில் பலவித ஒலிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுப்பி, தூர இடங்களுக்குச் செய்தி அனுப்பினான். வேட்டையின் போது மிருகங்களை விரட்டி அடக்கினான். பகைவர்கள் வருவதைத் தன் கூட்டத்தவருக்குத் தெரிவித்தான். பகைவனைப் போருக்கு அறைகூவி அழைத்தான். இவ்வாறு ஆதிமனிதனுடைய பல தேவைகளையும் பூர்த்தி செய்வதில் இசைக்கருவிகள் முன்னணியில் நின்றன.

அத்துடன் இவற்றைத் திருத்தமான முறையில் வடிவமைக்கவும் பழகிக் கொண்டான். ஆரம்பத்தில் தோற்கருவி, துளைக்கருவி என்றிருந்தவை பின் நரம்புக்கருவிகள், கஞ்சக்கருவிகள் என உருப்பெற்றன. அப்போது பலவகை மரங்களுடன் வெள்ளி, வெண்கலம், பித்தளை, செம்பு போன்ற உலோகங்களைக் கண்டறிந்தமையால் அவற்றையும் பயன்படுத்தி இசைக்கருவிகள் ஆக்கப்பட்டன. இன்னும் நாணல், மூங்கில், பிரம்பு, காய்ந்த காய்கனி பதப்படுத்திய தோல் என்பனவும் இசைக்கருவிகள் செய்ய உபயோகிக்கப்பட்டன. இவற்றிலிருந்து இசை வளர்ச்சியில் முதலில் வாத்தியங்களே பாவனைக்கு வந்தன என்பதும் பெறப்படும்.

மனித மூளை விருத்தியடைய, மனித நாகரிகமும் வளர்ச்சி கண்டது. காலப்போக்கில் மொழி பிறந்தது. மனிதன் பேசத் தொடங்கினான். அப்பேச்சும் இசையோடு பிறந்தது. இவை திருத்தமற்றதாக இருந்தமையால், இசைக்கருவிகளும் சைகைகளும் அவன் கருத்துக்களை வெளிப்படுத்தத் துணைபுரிந்தன. இதனால் மனித நாகரிகம் ஆரம்பித்த காலகட்டத்தில், பாடல், ஆடல் இசைக்கருவிகள் தாளக்கருவிகளை வாசித்தல் போன்ற கலைகளும் வளரத் தொடங்கின. அத்துடன் தெய்வ வழிபாடும் இணைய, காவற் தெய்வங்கள் முன்னிலையில் இசை, நடனம், கூத்துப் போன்றவை அரங்கேறி விருத்தியடையத் தொடங்கின.

மொழிப் பயன்பாடு ஆரம்பித்த காலத்திற் தோன்றிய இசை திருத்தமற்ற மொழியில் அமைந்திருந்தது. எனினும் இசைக்குத் தந்தையான தாளலயக் கட்டுப்பாட்டுடன் அமைந்திருந்தமை வியப்புக்குரியதாம். இதற்குத் துணைபுரிந்தவை ஆதிமனிதன் பயன்படுத்திய தாளக்கருவிகளே. இவ்விசையே பிற்காலத்தில் பாமரமக்களிடையே கிராமிய இசையாக உருப்பெற்று வளரத் தொடங்கியது. இன்றும் இவை "நாட்டார் பாடல்கள்" எனப் போற்றி வளர்க்கப்பட்டு வருதல் பெருமைக்குரிய விடயமாகும்.

பாமரமக்களால் வளர்க்கப்படும் இவ்விசையானது, அவர்தம் வாழ்வின் பல நிகழ்வுகளிலும் இடம்பிடித்து மனநிறைவையும் மகிழ்ச்சியையும் அளிக்கிறது. மனிதன் பிறந்தது முதல் இறக்கும் வரை பாடப்படும் இப்பாடல்கள், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு வேறுவேறான இசையிலும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. பிறந்ததும் முதலில் குளிப்பாட்டுகையில் மருத்துவிச்சி பல மங்கலப் பொருட்களை குழந்தை மேற் தூவி வாழ்த்துப் பாடுவாள். தூங்க வைப்பதற்கு அன்னை தாலாட்டுப் பாடுவாள். அன்னம் ஊட்ட நிலாப்பாட்டு, கிளிப்பாட்டு, ஊஞ்சற்பாட்டு, திருமண நலங்குப்பாட்டு, ஈற்றில் இறந்தபோது ஒப்பாரி இதிலிருந்து கிராமத்தவர் வாழ்க்கையில் இசை எவ்வாறு பின்னிப்பிணைந்துள்ளது என்பதை அறியலாம்.

மேலும் தாம் வழிபடும் காவற் தெய்வங்களான ஐயனார், மாரியம்மன், வைரவர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளி, கருப்புச்சாமி முன்பாகப் பொங்கல் பூசையிட்டு வணங்கும்போது பாடி ஆடப்படும் கும்மி, கோலாட்டம், கரகம், காவடி, சாமியாட்டம் என்பன பக்தியிசையாக மிளிர்வதைக் காணலாம். இந்நிகழ்வின் போது முன்பு, பறை, முரசு, உடுக்கு என்பன அனுசரணையாக வாசிக்கப்பட்டன. தற்போது மேளம், தபேலா, நாதஸ்வரம் போன்றவையும் சேர்க்கப்பட்டுள்ளன.

இவை தவிர வேலை நேரப் பாடல்களும் கிராமிய இசையில் முக்கிய இடம் பெறும். அவை ஏற்றப்பாட்டு, நாற்றுநடும் பாட்டு, அரிவிவெட்டும் பாட்டு, வயற்காட்டுப் பாட்டு, வண்டிக்காரன் பாட்டு, மீனவர் பாட்டு, ஓடப்பாட்டு கப்பற்பாட்டு எனப் பல வகைப்படும். ஆடிப்பாடி வேலை செய்யும் போது உடற்களைப்பும் தெரியாது வேலைப் பழுவும் தெரியாது. மாறாகப் புத்துணர்ச்சியும் ஆனந்தமும் பிறக்கும். இதனாலும் இசையின் சிறப்பு நன்கு புலப்படும். திருத்தமான மொழிப்பயன்பாடு ஏற்பட்ட காலத்தில் எழுந்தவையே புராண இதிகாசங்களும் சங்கத்தமிழ் இலக்கியங்களும் பின் தோன்றியவை பக்தி இலக்கியங்கள் ஆன சைவத்திருமுறைகளும், ஐம்பெருங் காப்பியங்களும் எல்லாமே இசையோடியைந்த செய்யுட் பாடல்களால் ஆனவையே.

சங்க காலத்தில் எண்ணற்ற இசைப்புலவர்கள், இசை பாடியும், இசைக்கருவிகளை வாசித்தும், இசைநூல்களை இயற்றியும் வாழ்ந்ததாக இலக்கியங்கள் மூலம் அறியக்கிடக்கிறது.

பண்டைத் தமிழிசைக்கு அடிப்படையாக விளங்குவன 103 பண்களாம். இசைப்பாடலுக்கு இன்றியமையாத இப்பண்கள் பற்றியும், சங்க இலக்கியங்களிற் பல குறிப்புகளும் உண்டு. அந்நூல்களில் ஆம்பற்பண், காஞ்சிப்பண், குறிஞ்சிப்பண், செவ்வழிப்பண், நைவளம், படுமாலைப்பண், பஞ்சுரம், பாலைப்பண், மருதப்பண், விளரிப்பண் எனப் பல்வேறு வகையான பண்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன.

இன்னும் அக்காலத்தில் வழங்கிய இலக்கிய இசைப் பாடல்களும் பலவகையின. அகவன் மகளிர் பாடல், மறையோர் பாடல், தழிஞ்சிப்பாடல், உழிஞைப்பாடல், துணங்கைப் பாடல், வெறியாட்டுப் பாடல், விறற்களப் பாடல், ஆடல் மகளிர்பாடல் வள்ளைப்பாடல், வேதப்பாடல் என்பன அவற்றுட் சிலவாம்.

மேலும் சங்க இலக்கியங்களான, பெரும்பாணாற்றுப்படை பொருநராற்றுப் படை, மலைபடுகடாம் போன்ற நூல்களில் யாழ்பற்றிய விரிவான செய்திகள் உள்ளன. "சீறியாழ்" வாசித்து பாடுபவரைக் "சிறுபாணர்" என்றும் "பேரியாழ்" வாசித்துப் பாடுபவரைப் "பெரும்பாணர்" என்றும் அழைக்கப்பட்டமை பற்றியும் அந்நூல்கள் பகரும். அன்றியும் ஆனிரை மேய்க்கும். ஆயர்குலச் சிறுவன் "வில்யாழிற்" குறிஞ்சிப் பண்ணை இசைத்துப் பாடிக் கொண்டு தன் தொழில் புரிந்ததாகக் கூறப்படுகிறது. இதுவே பிற்காலத்தில் "வில்லுப்பாட்டு" என உருப்பெற்றது எனலாம்.

"பண்கண்டு நிறனெய்தாய் பண்தாளம் பெறப்பாடிக்
கொண்ட இன்னிசைத்தாளம் கொளை சீர்க்கும் விரிந்தாடும்
தண் தும்பி இனங்காண்மின்" [பரி 11 : 26 - 303]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலேயுள்ள இப்பாடல்வரிகளில், சுரும்பின் இசை பாலைப்பண்ணாக ஒலிக்கிறது. அப்பண்ணுக்குத் தாளமாகத் தும்பி இனம் ஒலி எழுப்புகிறது எனக் கூறப்பட்டுள்ளது. மேலும் வண்டுகளின் ரீங்காரத்தை யாழிசையாகவும், அருவியின் இசையை முழுவிசையாகவுங் கேட்டு, அவை நிகழும் மலைச்சாரலை இசை அரங்கமாகவும் கண்டு இன்புற்றனர் பண்டையப் புலவோர்.

யாழ் வாத்தியத்தின் வளர்ச்சிக்குக் மூலகாரணமாக அமைந்தது வேய்ங்குழல் வாத்தியம். இதனைச் சிலப்பதிகாரம்.

"குழல்வழி நின்றது யாழே யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே தண்ணுமை
பின்வழி நின்றது முழவே முழவொடு
கூடிநின் றிசைந்த தாமந்திரிகை" எனக் கூறும்.

அக்காலத்தில் வாழ்ந்த பாணர் என்போர் இசைக்காகவே தம்மை அர்ப்பணித்து, இசையையே தமது தொழிலாகவுங் கொண்டு வாழ்ந்தனர். இவர்களுடன் கூத்தர், விறலியரும், பொருநர் என்போரும் இசைப்பாடல்களைப் பாடுவதுடன் சிறந்த இசைக்கருவிகளை மீட்டவும் வல்லவராக விளங்கினர். யாழ், கிண்ணரம், குழல், சங்கு, தூம்பு, வயிர் போன்ற பண்ணிசைக் கருவிகளும் தண்ணுமை, முழவு, முரசு, பறை சிறுமுழா, கிணை, துடி, தடாரி, பதலை, எல்லரி, ஆருணி, மத்தரி, மகுனி, சில்லரி, பம்பை, கொட்டு, பாண்டில், தட்டை, குளிர் இன்னியம் போன்ற தாளக் கருவிகளும் பயன்படுத்தப்பட்டன. இவற்றை பாணர்கள் உருவாக்கவும் அறிந்திருந்தனர் என்பதற்கு இலக்கியச் சான்றுகள் உள.

கவிஞர்களும், பாணர்களும், அருளாளர்களும் தமது ஆக்கங்களை மன்னர்கள், குறுநில அரசர்கள், கொடை வள்ளல்கள் என்போர் முன்பாடிப் பொருள் கூறி அரங்கேற்றிப் பரிசில்கள் பெற்றமைக்கும் பல வரலாற்றுச் சான்றுகள் உள்ளன.

"நலங்கிள்ளி நகைப் பொருநரேம்
பிறர்பாடிப் பெறல் வேண்டாம்" (புறம் 382)

என்னும் பாடல்வாயிலாக, இக்கலைஞர்கள் முதலில் யாரிடம் பாடிப் பரிசு பெற்றார்களோ, அவரைத் தவிர வேறெவரிடமும் பாடிப் பரிசில் பெறும் வழக்கம் இல்லாதவர்கள் என்பதை அறியலாம். இதிலிருந்து அவர்களுடைய தன்மான உணர்ச்சியும் இசைமேல் இருந்த நம்பிக்கையும் தெள்ளிதிற் தெரிகிறது.

சங்க காலத்தின் பின் தோன்றியவையே பக்தி இலக்கியங்களாகக் கருதப்படும் சைவத்திருமுறைகள் இவை "தெய்வீக இசை" எனக் கருதப்பட்ட போதும், இவற்றின் பாடலமைப்பும், பொருட்செறிவும் இலக்கியங்களுக்கு எல்லாம் மூல இலக்கியமாக விளங்கும் சிறப்புப் பெற்றிருந்தமையும், பண்டைத் தமிழிசையிற் காணப்படும் 103 பண்களிற் பாடியருளப் பெற்றமையும், இவை பக்தி இலக்கியங்களாகக் கருதப்படுவதற்குக் காரணம் ஆயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5ம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் காரைக்கால் அம்மையார், பண் நட்டபாடை, பண்இந்தளம் என்ற இரண்டு பண்களில் பிரபந்தங்கள் பாடியருளியமை, அவர் காலத்துக்கு முன்பே பண்ணிசை விளங்கியமை பற்றி வலியுறுத்துகின்றது.

சமய குரவர்களும், ஏனைய அருளாளர்களும் தமது தெய்வீக இசைப்பாடல்கள் வாயிலாக, மக்களுடைய மனதில் இறைபக்தியையும் நம்பிக்கையையும் வளர்க்கவில்லை. பண்ணிசை வளர்ச்சிக்கும் அரிய தொண்டு ஆற்றியுள்ளனர். பண்டைத் தமிழிசைப் பண்கள் இன்றும் உயிர்பெற்று விளங்குவதற்கு சைவத் திருமுறைகளே காரணமாய் உள்ளதெனின் மிகையன்று.

பாணர் குலமே இப்பண்ணிசையைப் பேணிப் பாதுகாத்து வந்துள்ளமை பெருமைக்குரிய விடயமாம். இவர்கள் இன்னிசைக் கருவிகளோடு கர்ணபரம் பரையாய் இதை மக்களிடையே பரப்பினர். இன்னும் இவர்கள் தொண்டுக்கு ஆதரவளித்து ஊக்கமுடன் இவர்கள் வளர்த்துவிட்ட பெருமை, அன்றைய மன்னர்கள், கொடைவள்ளல்களையே சாரும். இவர்களுடைய அரிய தொண்டினால் 11ம் நூற்றாண்டில் திருமுறைகள் கண்டெடுக்கப்பட்டுத் தொகுக்கப்பட்டபோது பண்ணடை செய்ய பாணினி உதவியுள்ளார்.

இதன் பின்னர் சைவ ஆதினங்கள் இன்றுவரை இவ்வரும் பணியைச் செய்து வருகின்றனர். அத்துடன் ஓதுவார் மூர்த்திகளும் பண்ணிசையைப் பரப்பி வருகின்றனர். சைவ ஆலய ஆதீனகர்த்தாக்களும் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அந்நியர் ஆட்சிக் காலத்தில் சுதந்திரவேட்கை கொண்ட கவிஞர்களும் இசைப் புலவோரும், மக்களிடை சுதந்திர உணர்வை உண்டாக்கும் இசைப்பாடல்களை இயற்றிப் பரப்புவதில் மும்முரமாக ஈடுபட்டனர்.

இதனால் பக்தி இலக்கியம் பின் தள்ளப்பட்டு, கர்நாடக இசை மெல்லத் தலை தூக்கியது. உணர்ச்சி ஊட்டக் கூடிய துள்ளல் இசைப்பாடல்கள் உருவாயின. அவற்றுள் தெய்வம் பற்றிய கீர்த்தனைகளும் இருந்தன. கர்நாடக இசை படிப்படியாக வளரத்தொடங்கியது. அவ்வழி வாத்திய இசையும் விருத்தியடைந்தது.

கர்நாடக இசை பிரபலமடைய உதவிய மகான்கள், சங்கீத திரிமூர்த்திகளான ஸ்ரீதியாகராஜ சுவாமி, முத்துசாமிதீட்சதர், சியாமா சாஸ்த்திரிகள் ஆவர். இவர்கள் மூலமாகப் பல இசை விற்பன்னர்கள் இசைப்புலவோர் உருவாகினர். இவர்கள் கர்நாடக இசை வளர்ச்சிக்கு வேண்டிய இசை நூல்களையும் ஆக்கினர். செய்முறை நூல், சாஸ்திர நூல் இரண்டுமே பல்கிப் பெருகின. இன்னும் பல்வேறு இசைக்கருவிகளின் பயன்பாடும் ஏற்பாட்டு வாத்திய இசைக்கலைஞர்களும் பல்கிப் பெருகினர்.

ஆலயங்களிலும், சபாக்களிலும், இசைமன்றங்களிலும் இசைக்கலைஞர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னிசைக் கச்சேரி செய்ய வழிவகுக்கப்பட்டது. இதே போன்று தனித்து வாத்தியக் கச்சேரி செய்யும் முறையும் நடைமுறைக்கு வந்தது. விசேடமாக ஆலயங்களில் மேளம், நாதஸ்வரம், ஒத்து, தாளம் என்பன வாசிக்கப்படும் முறை ஏற்பட்டதால் அக்கலை அதிவிரைவாக வளர்ச்சி கண்டது.

இவ்வாறாகக் காலத்துக்குக் காலம் ஏற்பட்ட நாகரிக வளர்ச்சி காரணமாகவும், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் காரணமாகவும், தொலைத் தொடர்பு சாதனங்களின் பயன்பாடு காரணமாகவும், இசைக்கலை வளர்ச்சியில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.

இன்று ஒவ்வொரு இன,மத,மொழிபேசும் மக்களும், தத்தமது கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்களுக்கேற்ப தமது இசைக்கலையை வளர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுவருகின்றனர்.

இதனால் உலகளாவிய ரீதியில் இசைக்கலை பெரும் மாற்றத்திற்குள்ளாகி வருவது கண்கூடு.

இயற்கையான குரல்வளம் உடையவர் இசையை முறையாகக் கற்றுப் பாடும்போது, அவ்வின்ப இசை கேட்போரின் செவிவழிக்கென்று ஆன்மாவையே ஈர்க்கும் சக்தி பெற்றதாம். இதே போன்று வாத்திய விற்பன்னரும், தனி வாத்தியத்தைக் கையாண்டாலும் அன்றி பல்லியமாகப் பலவாத்தியங்கள் சேர்ந்து வாசிக்கப்பட்டால், அவ்விசையும் மனதை ஈர்த்துப் பரவசத்தை உண்டுபண்ணும்.

இவ்வருங்கலையைப் பயில்வதால், அன்பு, அடக்கம், பக்தி, சாந்தம் போன்ற அருங்குணங்களும், அறிவு, புத்தி, கற்பனாசக்தி, ஞாபக சக்தி, கேள்விஞானம் போன்ற திறமைகளும் விருத்தியாகும். மொழி புரியாவிடினும் ஒருவன் இன்னிசையை ரசிக்கலாம்.

எல்லா இனத்தவருடைய இசைக்கும் அடிப்படையில் அமைந்துள்ளவை. "ஸரிகமபதநி" என்ற ஏழுவகை ஸ்வரங்களே. ஆதலின் இன,மத வேறுபாடின்றி அனைவரையும் ஒன்றிணைக்கும் மாபெரும் சக்தி இசைக்கலைக்குண்டு.

எனவே மனித அவலங்கள் பெருகி வரும். இன்றைய உலகில், சாந்தி,சமாதானம், இன ஒற்றுமை என்பவற்றை ஏற்படுத்தி யாவரும் சுபீட்சமுடன் வாழ வழிவகுக்கக்கூடிய அருஞ்சாதனமாக விளங்கும் "இசைக்கலையை" போற்றிப் பேணிப், பாதுகாத்து, வளர்த்து நற்பயன் பெறுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீப்பிழம்பாய் எழுந்த பெண்மை என்னும் சுடர்

திருமதி. ரே. சதாசிவம்
(B.A.Hons) Dip.in.Edu
ஆசிரியை
மெதடிஸ்த மகளிர் கல்லூரி

*" ........................நெஞ்சை*
*அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணி*
*ஆரம் படைத்த தமிழ் நாடு" என்று*

மகாகவி பாரதியார் சிலப்பதிகாரத்தை அனுபவித்துச் சுவைத்து இன்பக் களிப்பிலே பாடினார். சிலப்பதிகாரமே தமிழ்த்தாய் திருநாட்டிற்கு மணியாரமாகப் பெருமையும் அழகும் சேர்க்கின்றது என்ற சுட்டிப்பான அவரின் கணிப்பு நயக்கத்தக்கது.

சிலப்பதிகார காவிய நாயகி கண்ணகி சோழநாட்டிலே பிறந்தாள். பாண்டி நாட்டிலே தனது வீரகற்பை நிலை நாட்டினாள். சேரநாட்டிலே தெய்வீக முற்றாள்.

கோவலனும் கண்ணகியும் சோழ நாட்டிலே காவிரியாறு கடலோடு கலக்கும் காவிரிப்பட்டணத்திலே வணிகர் குலத்திலே பிறந்தவர்கள். சாதாரண குடிமக்களாகிய தலைவன் தலைவி இருவரது இல்லறவியலின் ஏற்ற இறக்கங்கள் செஞ்சொற் காப்பியமாகப் பாடப்பட்ட தனிச்சிறப்பு சிலப்பதிகாரத்திற்கு உண்டு.

சிருங்காரம் துன்பியல் முதலியன பற்றிய நுண்மையான மனித உணர்வுகள், தமிழர் பழம்பெருங்கலைகளாகிய இசை,நடனம் பற்றிய மாண்பு , தமிழர் பண்பாடு, வீரம் தமிழகத்தின் இயற்கை வளம் என்பனவெல்லாம் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகளின் கவிவளத்தால் படிப்போர் உள்ளங்களில் இன்பத்தேனைப் பொழிகின்றன.

அக் காப்பியத்தில் நெஞ்சை அள்ளும் சில காட்சிகளைக் காண்போம்.

*'மலையிடப் பிறவா மணியே என்கோ*
*அலையிடைப் பிறவா அமிர்தே என்கோ'*

என்றெல்லாம் கண்ணகியை அன்பு மேலீட்டால் வர்ணித்த கோவலன் பின்பு மாதவியின் மையலிலே மூழ்கிவிட்டான். கண்ணகி பிரிவுத்துயரிலே தோய்ந்தவளாக என்ன செய்வது என்று அறியாது அழுபவளாக வாழ்கின்றாள். அவளின் நிலையை இளங்கோவடிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*'பவள வாள்நுதல் திலகம் இழப்பத்*
*துவள வாள்நகை கோவலன் இழப்ப*
*மையிருங் கூந்தல் நெய்யணி மறப்பக்*
*கையறு நெஞ்சத்துக் கண்ணகி'*

என்று இரக்கத்தோடு கூறுகிறார். இது கண்ணகியின் ஒரு வடிவம்

கோவலன் வஞ்சனையால் குற்றம் சுமத்தப்பட்டு அநியாயமாகக் கொலை செய்யப்பட்டான் என்ற கொடிய செய்தி கேட்ட போது அதுவரை பொறுமையோடு துன்பத்தைச் சுமந்திருந்த அவளின் இதயத்திலிருந்து பெண்மையின் வீரம் விழித்து அது சக்தியோடு அக்கினியாகச் சீறியெழுந்தது. அது அவளின் இன்னொரு வடிவம்!

அவள் கோவலனோடு வானவூர்தியிலே விண்ணுலகெய்தி வழிபடு தெய்வமாகியமை பிறிதொரு வடிவம்! இவ்வண்ணம் மூன்று வடிவங்களில் நாம் கண்ணகியை காப்பியத்தில் காண்கின்றோம்.

கோவலன் மாதவிபால் சென்று தன்னை மறந்து விட்டான் என்ற கவலை அவளை வாட்டுகின்ற தனித்து விடப்பட்ட நிலையை 'கையறு நெஞ்சத்துக் கண்ணகி' என்று இளங்கோவடிகள் குறிப்பிட்டாலும் அவள் பெண்மையின் நெறிமுறைகள் குலையாத மன உறுதியோடு தான் வாழ்ந்தாள். அதை அவரே கூறுகின்றார்.

நெய்தல் நிலத்திலேயுள்ள சோமகுண்டம் , சூரிய குண்டம் என்னும் இரு பொய்கைகளில் பெண்கள் மூழ்கி அவற்றின் கரையிலே அமைந்துள்ள காமவேளின் கோயிலைத் தொழுதால் அவர்கள் கணவனைப் பிரியாதிருப்பார்கள். ஆதலால் நாமும் சென்று அவற்றில் நீராடுவோம் என்று தேவதந்தி என்பாள் கண்ணகியை அழைத்தாள். அதற்கு கண்ணகி 'பீடு அன்று' என்று கூறியதை இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்.

அது எமக்குப் பெருமையல்ல என்று மறுத்து விட்டாளாம். அவ்வாறு அவள் கூறியிருக்கும் நிலையிலே கோவலன் அவளிடம் வந்தான். கண்ணகி உடல் துயரால் வாடினாலும் அவளின் ஆழ்மனதிலே பெண்மையின் உன்னதசக்தி என்னும் விளக்கு சிறிய சுடரை உமிழ்ந்து கொண்டிருந்தது. அச்சுடர்தான் கோவலனை மாதவியிடமிருந்து கண்ணகி பால் மீண்டும் ஈர்த்தது. அச்சுடர்தான் கோவலன் கொலையுண்டதும் தீப்பிழம்பாக எழுந்து தீ நாக்குகளைப் பரப்பி மதுரையை எரித்தது.

கண்ணகியை நாடிவந்த கோவலன் மிகுந்த கவலையுள் அழுந்தியவனாக மனம் குலைந்தவனாகக் காணப்பட்டான்'

*'சலபுணர் கொள்கைச் சலதியோடாடி*
*குலம்தரு வான் பொருட் குன்றம் தொலைந்த*
*இலம்பாடு நாணுந் தருமெனக் கென்'*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் கண்ணகியை நோக்கி மலை போன்ற எமது செல்வக்குவியலை வஞ்சம் பொருந்திய கொள்கையினை உடைய விலைமகளோடு சேர்ந்த தீய ஒழுக்கத்தால் தொலைத்துவிட்டேன். இப்போது வறுமை எனக்கு நாணத்தைத் தருகின்றது என்று கூறினான். கண்ணகி கோவலனை வையவில்லை, வெறுக்கவில்லை, அழுது குமுறவில்லை. கணவன் திருந்தி , திரும்பி வந்ததே அவளுக்கு நிறைவு. அவனை முறுவல் பூத்த இன்முகத்தோடு நோக்கி 'என்னிடம் சிலம்புகள் உள்ளன அவற்றைப் பெற்றுக் கொள்ளுங்கள்' என்றாள். 'நலங்கேழ் முறுவல் நகைமுகம் காட்டிச் சிலம்புள கொண்மின்' என்று இளங்கோவடிகள் பாடினார். அந்நிலையில் மதுரைக்குச் சென்று அச்சிலம்புகளை விற்று வாணிபஞ் செய்து இழந்த பொருள்களையும், புது வாழ்வையும் பெறலாம் என்ற நம்பிக்கையோடு கோவலன் கண்ணகியை அழைத்துக் கொண்டு மதுரைக்குச் சென்றான்.

புதுவாழ்வு தொடங்கலாம் என்ற இன்பக் கனவுடனும் பொங்கியெழும் புதுமலர்ச்சியுடனும் இருவரும் சென்றவிடத்தில் கோவலன் அநியாயமாகக் கொல்லப்பட்டான். காப்பியத்தில் இது மனதைப் பிழியும் மனதைவிட்டகலாத ஒரு சோகக் காட்சி அநியாயமான அல்லது தாங்கமுடியாத துயரச் சம்பவங்கள் நிகழ்ந்தால் 'இதைக் கடவுளும் பார்த்துக் கொண்டிருக்கிறாரா' என்று எமது சமுதாயத்தில் பலர் பேசுவதை இன்று நாம் கேட்கிறோம். நாமும் பேசிக் கொள்ளத் தவறவில்லை.

கோவலன் கொலைச் செய்தியால் அதிர்ந்த கண்ணகியும்

*'தெய்வமும் உண்டு கொல்*
*தெய்வமும் உண்டு கொல்'*

என்று கதறினாள். பாண்டிய மன்னனிடம் சென்று நீதி கேட்பேன் என்று குமுறும் எரிமலை இதயத்தோடு அழுது புலம்பிய வண்ணம் சென்ற கோலத்தை

*'மெய்யிற் பொடியும் விரிந்த கருங்குழலும்*
*கையிற் தனிச்சிலம்பும் கண்ணீரும்'*

என்று இளங்கோவடிகள் மனதை நெக்குருகச் செய்யும் ஒரு செஞ்சொற்சித்திரமாக தீட்டியுள்ளார்.

அவளின் கோலத்தை மதுரை மாநகர் மக்கள் பார்த்து,

*'களையாத துன்பம் இக்காரிகைக்குக் காட்டி*
*வளையாத செங்கோல் வளைந்தது'* என்று பேசித்துக்கப்பட்டனர்.

தெய்வம் வந்துற்றவள் போன்ற அக்கோலத்திலே அவள் பாண்டியன் முன்சென்று அவனது கொடுஞ்செயல் குறித்து ஆவேசமாக அக்கினிக் கணைகளை வீசினாள்.

'கள்வனைக் கொல்வது நீதி' என்று பாண்டியன் கூறிய போது கண்ணகி தன் சிலம்பினுள் உள்ளது மாணிக்கப்பரல் என்றாள். அந்நிலையில் பாண்டியன் கூறிய கோவலனிடமிருந்து பொற்கொல்லன் பெற்று தன்னிடம் உள்ள அச்சிலம்பை வரவழைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணகி அதை வாங்கி உடைத்தாள். மாணிக்கப்பரல் தெறித்து பாண்டியன் முன் வீழ்ந்தது. அவன்நிலை குலைந்தான்.

*'தாழ்ந்த குடையன் தளர்ந்த செங் கோலன்*
*பொன் செய் கொல்லன் தன் சொற் கேட்ட*
*யானோ அரசன் யானே கள்வன்*
*மன்பதைக் காக்கும் தென்புலங்காவல்*
*என் முதற் பிழைத்தது கெடுகவென்னாயுளென*
*மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே'*

என்று சிலப்பதிகாரம் இரக்கத்தோடு கூறுகிறது.

நிலை தடுமாறி வீழ்ந்து உயிர்துறந்த பாண்டியன் மீது அவனது தேவியும் வீழ்ந்து ஆவியை விட்டாள்.

*' .................. தென்னவன்*
*கோப்பெருந்தேவி குலைந்தனள் நடுங்கிக்*
*கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதில்லென்று*
*இணையடி தொழுது வீழ்ந்தனளே மடமொழி'*

துயரத்தையடுத்து இன்னொரு துயரம் கண்ணீர்ப்பெருக்கில் இன்னொரு கண்ணீர்மழை என்று சிலப்பதிகாரம் உள்ளத்தை நெக்குருகச் செய்யும் காட்சிகளை நம்முன்னே கொண்டு வருகின்றது.

செல்வச் செழிப்போடு அதிகாரம் மேலுற நீதிசெலுத்தி வந்த பாண்டியன் தான் தீர விசாரித்துப் பார்க்காது வழங்கிய அநியாயமான கொலைத்தீர்ப்பைத் தாங்க முடியாமல் இறந்தான். அவனைத் தொடர்ந்து அவனது தேவி மாண்டாள். மதுரை மாநகரம் எரிந்து அழிந்தது.

இங்கே ,

*'அல்லற் பட்டாற்றாது அழுத கண்ணீரன்றே*
*செல்வத்தைத் தேய்க்கும் படை'*

என்ற அருமைத் திருக்குறளுக்கு விளக்கமாக கண்ணகி விட்ட கண்ணீர் விளங்குகின்றது.

பொற் கொல்லனது சொல்லைச் சரியெனக் கேட்டு நடந்து கொண்ட நான் அரசனா? கண்ணகியின் சிலம்பை எம்முடையது என்று அபகரித்து வைத்திருந்த நான் தான் கள்வன். என் செயலால் பரம்பரையாக நீதி காத்து வந்த எமது அரசகுலம் முதல் முறையாக என்னால் களங்கமடைந்துவிட்டது. எனது உயிர் என்னை விட்டுப் போகட்டும் என்று சொன்னவுடன் அவன் இறந்து வீழ்கிறான். அது கண்ட பாண்டியன் தேவி கணவனை இழந்தோர்க்கு இதுவே வழி என்று அவனது அடிகளைத் தொழுது வீழ்ந்து இறக்கின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் நாம் இறக்க வேண்டும் என்று 'இறப்பிற்கு கட்டளை இட்டது போல் சொல்ல அவர்கள் இறந்து விடுகிறார்கள்! இது சிந்திக்கத்தக்கது. நீதி வழுவா நெறியை தனது உயிராகப் பேணிய பாண்டியன் தன்னால் அதற்கு ஊறு ஏற்பட்ட போது அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. உயிருக்கு ஊறு நேர்ந்தால் உயிர் நிற்குமா? எனவே அது அவன் உடலை விட்டுப் போனது. அவ்வண்ணமே அவனது தேவியும் தன் கணவனை தன்னுயிராக மதித்தாள். அந்த உயிர் போனால் அவளுக்கு எங்கே உயிர்? அவள் அவன் மேல் வீழ்ந்தாள்.

பாண்டியன் தீர விசாரித்துப் பார்க்காது கோவலனை கொலை செய்யும்படி ஏன் தீர்ப்பு வழங்கினான்? கோவலன் முற்பிறவியில் ஒருவனைக் காட்டிக் கொடுத்து அநியாயமாகக் கொலை செய்வித்த ஊழ்வினையின் பயனே அது என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது.

' ஊழ்வினை உருத்து வந்தூட்டும் ' என்பது இளங்கோவடிகள் வாக்கு பாண்டியன் நீதி பிழைத்த குற்றத்தைச் சொல்லி,

'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதும்' என்று அரசியல் நெறியை எச்சரிக்கையிட்டுக் கூறுகின்றார்.

இளங்கோவடிகளின் அண்ணன் சேரன் செங்குட்டுவன் கண்ணகி மதுரையை எரித்ததையும் கோவலனோடு விண்ணூர்தியில் அவள் வானுலகம் சென்றதையும் குன்றக்குறவன் சொல்லக் கேட்டு அப்பத்தினிக்கு இமயத்திலே சிலையெடுத்து கோயிலில் வைத்து விழாவெடுத்தான். அவ்விழாவிலே பல நாட்டரசர்களோடு ஈழத்தரசன் கயவாகுவும் கலந்து கொண்டான். பின்னர் அவன் ஈழத்திலே கண்ணகிக்கு கோயில் கட்டி வழிபட்டான். இச்செய்திகளை சிலப்பதிகாரம் இனிது கூறி

உரைசால் பத்தினியை

உயர்ந்தோர் ஏற்றலும் ...' என்ற உயர்ந்த தமிழ்ப் பண்பாட்டின் தெய்வீக நெறியினைப் புகட்டியுள்ளது.

இவ்வாறே சிலப்பதிகாரம் வலியுறுத்தும் மூன்று அறநெறிகளும் ஒன்றுடன் ஒன்று சங்கிலிக் கோர்வை போல் தொடர்புள்ளவை. இவற்றை அடிநாதமாக வைத்து பாடப்பட்ட பத்தினி கண்ணகியின் உன்னத காப்பியம் தமிழ்த்தாயின் மணியாரமாகத் திகழ்கின்றது என்று சொல்லும் போதே அக்காவியத்தின் காட்சிகள் நெஞ்சில் தோன்றி இன்பத்தேனைப் பொழிகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# STUDY TIPS

**Mrs. N.H.M. Marzook (Bsc)**
Teacher of English)
(Methodist Girls' College)

## The Process of Study

### How to use your time

Time is the most valuable resource a student has. It is also one of the most wasted of resoures. The schedule you develop should guide you how to allocate the available time in the most productive manner. A good deal of your success in school depends on this simple truth. So follow the schedule you prepared.

### Where to Study

you can study any where. Obviously, some places are better than others.

Libraries, study lounges or private rooms are best. Above all, the place you choose to study should not be distracting. Make a good physical environment a part of your study habits.

### Thinking skills

Every body has thinking skills. but a few use them effectively. Effective thinking skill cannot be studied, but must be built up over a period of time. Good thinkers see possibilities where others see only dead - ends. If you are not a good thinker, start now by developing habits that make you ask yourself questions as you read.

### The SQ3R Method

The SQ3R Method has been a proven way to sharpen study skills.

**S - Survey** - get the best overall picture of what you are going to study BEFORE you study it in any details. It's like looking at a road map before going on a trip.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Q** - **Questions** - ask questions for learning. The important things to learn are usually answers to questions should lead to emphasis on the what, why, how, when, who and where of study content. Ask yourself questions as you read or study. As you answer them , you will help to make sense of the material and remember it more easily because the process will make an impression on you.

**3R** - **Read** - Reading is NOT running your eyes over a text book. When you read, read actively. Read to answer questions you have asked your self or question the instructor or author has asked.

**3R** - **Recite**- when you recite you stop reading periodically to recall What you have read. Try to recall main headings. Important ideas of concepts presented in bold or italicized type, and what graphs, charts or illustrations indicate. Try to develop an overall concept of what you have read in your own words and thoughts.

**3R** - **Review** : - A review is a Survey of what you have covered. It is a review of what you are supposed to accomplish, not what you are going to do Re reading is an important part of the review process. The best time to review is when you have just finished studying some thing.

**Getting the main Idea -**

A Primary mean by which you acquire information is through reading. Getting the main Idea in reading is Central to effective studying. Every paragraph contains a main idea Make it a habit to find the main idea in each paragraph you read.

If you follow this process of study you can achieve higher grades with less stress.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TRADITIONAL HONOURING



Opening Ceremony - New Hostel Building



Prize Day - 2007



Peace through Culture



Peace through Language



Exhibition



Sports Meet



Teacher's day



Olivizha

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய கல்விச் சீர்திருத்தமும் மாணவர் உளநலனும்

திருமதி. த.ரொசான் முரளி
உதவி அதிபர்
தி/மெதடிஸ்த மகளிர் கல்லூரி

கல்வியானது ஒரு மனிதனை எதிர்கால வாழ்வுக்கேற்ற விதத்தில் வளப்படுத்துகின்றது. மனித வளத்தின் மேல் மேற்கொள்ளப்படும் ஒரு மூலதனமாக கலவி அமைகின்றது. "Emile Dyrheim" என்பவரது கருத்துப்படி ''வாழ்க்கைக்கு இன்னும் ஆயத்தமாகாதவர்கள் மீது அனுபவம் வாய்ந்தவர்கள் ஏற்படுத்துகின்ற நேரான தாக்கமாக கல்வி அமைகிறது. இக்கல்வியை நுகர்வதற்கேற்ற அடிப்படையான சமூக நிறுவனமாக பாடசாலைகள் அமைகின்றன.

ஒரு நாட்டின் எதிர்கால அபிவிருத்திக்கு பாடசாலைக் கல்வி முறைமை பலம்மிக்க அடித்தளமாக அமைகிறது. ஒவ்வொரு சமூகங்களுக்குமுரிய பண்பாடு (Culture) கலாச்சாரம் (Civilization) நியமம் [Norms] விழுமியம் [Values) போன்றவற்றை கல்விப் பாலத்தினூடாகத் தெரியப்படுத்தும் நிலையங்களாக பாடசாலைகள் அமைகின்றன.

கல்வியானது கற்றல் [Learning) (கற்பித்தல்) [Teaching] ஆகிய இரண்டு பொறிகளைக் கொண்டுள்ளது. இங்கு கற்பித்தலானது மேன்மையுறுவதற்காக முறையியல் (Methodology] பின்பற்றப்படுகின்றது. எந்த விடயத்தையும் எவருக்கும் எத்தரத்திலும் அறிவியல் சார்ந்த முறையில் கற்பிக்கலாம் என்பது ''புரூணர்'' இன் கருத்து. இங்கு அறிவியல் சார்ந்த முறையென்பது மாணவர்களுக்கு வழங்கப்படும் விடயங்களின் அளவு, விடயங்கள் வழங்கப்படும் போது கவனிக்க வேண்டிய இடைவெளி, விடயங்கள் வழங்கும் முறை, என்பன முக்கிய இடம் பெறுகின்றன. இதில் உள்ள அளவு என்பதைக் கருத்திற் கொண்டே கல்வித் திட்டங்கள் வடிவமைக்கப்படுகின்றன.

21ம் நூற்றாண்டிற்கான கல்வி பற்றி ஆராய்ந்த சர்வதேச ஆணைக்குழுவின் அறிக்கையில் [Delors Report - 1996) மனித குலம், தனியாட்கள் நாடுகள் என்பவற்றின் எதிர்கால வளர்ச்சிக்கான கல்வியின் பங்கு பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிக்கையானது மனித வளர்ச்சிக்குத் தேவையான அனைத்தும் கல்வியில் பொதிந்து கிடப்பதாகக் [Treasure within] கூறுகிறது. இதனடிப்படையிலேயே கல்வித் திட்டங்கள் சீரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

பொதுவாக கல்வி முறைமைகளை நவீனமயப்படுத்தல் அல்லது இற்றைப்படுத்தல் என்பவற்றில் கல்விச் சீர்திருத்தங்களே முக்கிய பங்கினை வகிக்கின்றன. ஒரு காலத்திற்குரிய கல்விச் சீர்திருத்தம் அக்குறிப்பிட்ட காலத்திற்குப் பொருத்தமானதாக இருப்பினும் காலவோட்டத்தில் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மாற்றங்கள் அவற்றை காலாவதியாக்கிவிடுகின்றன. இதன் காரணத்தினாலேயே கல்வித்திட்டத்தில் சீர்திருத்தங்கள் முன்வைக்கபபடுகின்றன.

பொதுக்கல்விக்கான கொள்கைகள் 1995ம் ஆண்டில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதந்துரைகளுக்கு அமைவாக உருவாக்கப்பட்டன. இதனை நடைமுறைப்படுத்துவதற்கென ஒரு செயற்பணிக் குழுவும் [Task force] அமைக்கப்பட்டது. இக்குழுவினருக்கு உதவுவதற்கென 13 நுட்பவியற் குழுக்கள் அமைக்கப்பட்டு, பிரதான கொள்கைப் பரப்புக்கள் ஆய்வு செய்யப்பட்டன. அவற்றின் பெறுபேறாகப் புதிய சீர்திருத்தங்களும் நடைமுறைகளும் அறிமுகம் செய்யப்பட்டன.

இலங்கையிலுள்ள அனைத்து மக்களையும் எழுத்தறிவுள்ளவர்களாக மாற்றுதல் 5-14 வயதுவரை அனைவருக்கும் கட்டாயக் கல்வியைத் தருதல், அதற்கென ஊக்கங்களையும், இயக்கங்களையும் வலுப்படுத்துதல் முதலானவற்றுடன் சீர்திருத்தங்கள் ஆரம்பமாகின்றன. இப்புதிய கல்விச் சீர்திருத்தத்தின் வாயிலாக தேசிய ஐக்கியம், சமூக நீதியை நிலைநாட்டுதல், வேலைவாய்ப்புக்களைப் பெருக்குதல், வேகமாக ஏற்படும் உலக மாற்றங்களுக்கேற்ப பொருந்தி வாழும் திறன்களை வளர்த்தல் முதலிய இலக்குகள் எதிர்பார்க்கப்படுகின்றன. ஆனால் இவ் இலக்குகளை அடைவது தொடர்பிலான நடைமுறைகள் மாணவர்களது உள நலனை எவ்வாறு மேம்படுத்துகின்றது. எவ்வாறு பாதிப்புக்குளாக்குகின்றது போன்ற விடயங்களை ஆராய்ந்தறிவது அவசியமாகின்றது.

உள நலன் என்பது உடல் நலத்தினைப் போன்று மனிதனிடத்தில் அத்தியவாசியமாகக் காணப்பட வேண்டியதொன்றாகும். மனிதனானவன் ஆரோக்கிய நிலையை அடைய வேண்டுமாயின் அவன் உடல், உள, சமூக, மற்றும் ஆன்மீக நிலைகளிலே முன்னேற்றமடைய வேண்டும் என்பது உலக சுகாதார ஸ்தாபனத்தின் [WHO] கூற்றாகும். இதற்கமைவாக உலக சுகாதார ஸ்தாபனம் மனநலனை ஐந்து விடயங்களின் அடிப்படையில் வகைப்படுத்தியுள்ளது.

1. சிறந்த நிலை - State of Well being
2. திறமைகளையும் ஆற்றல்களையும் அறிந்து கொள்ளுதல்
   Ability to recognize your abilites
3. அன்றாட வாழ்வில் எதிர்கொள்ளும் அழுத்தங்களை சமாளிக்கும் திறன்
   Ability to Cope with normal Stress of life



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. வினைத்திறன் மிக்க சிறந்த நபராக இருத்தல்
To become productive and Fruitful

5. சமூகத்திற்கு பங்களிப்பு செய்யக் கூடிய திறமையைக் கொண்டிருத்தல்.
Ability to make a contribution to the Community

மேற்குறிப்பிடப்பட்ட வகையில் முக்கியப்படுத்தப்படும் உள நலனை மாணவர்களிடையே செம்மைப்படுத்துவதில் புதிய கல்விச் சீர்திருத்தத்தின் பங்களிப்பு எவ்வாறாக அமைந்துள்ளது என நோக்கின்.

. புதிய கல்விச் சீர்திருத்தத்தின் படி ஆரம்பக் கல்வித்திட்டம் தரம் 1-5வரை உள்ளடங்கலாக மூன்று முதன்மை நிலைகளாக வகுக்கப்பட்டுள்ளன இதற்கமைவாக தரம் ஒன்றில் விளையாட்டு வாயிலாகக் கற்றல், அதிகளவிலும் எழுத்து வேலைகள் குறைந்த அளவிலும் ஒழுங்கமைக்கப்படுகின்றது. தரங்கள் உயர்ந்து 5ம் தரத்தை அடையும் பொழுது விளையாட்டு மற்றும் இயக்கச் செயற்பாடுகள் படிப்படியாகக் குறையும். தரம் 5ல் எழுத்து வேலைகளே ஒப்பீட்டளவில் கூடுதலாக இருக்கும். இத்தகைய முறைமையானது. முன்பள்ளிக் கல்வியை முறையாகப் பெறத் தவறிய பிள்ளைகளையும் வழிப்படுத்துவதற்கு ஏதுவாக இருப்பதனால் பிள்ளைகள் கல்வியுடன் ஈடுபாடு கொண்டவர்களாக மாற்றப்படுகின்றார்கள் இருப்பினும் தரம் ஐந்திற்கென வகுக்கப்பட்ட புதிய கல்விச் சீர்திருத்தமானது மாணவர்களை, புத்தக மூட்டை சுமக்கும் சுமைதாங்கிகளாகவே மாற்றியிருக்கின்றது. மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெறுவதற்காக இடையறாது கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். சில சந்தர்ப்பங்களில் பெற்றோர் மற்றும், ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கடுமையான அழுத்தத்தைக் கொடுக்கின்றார்கள். இதன் விளைவாக பிள்ளைகள் தாம் யார் என்பதை அறிந்து கொள்ள முடியாத பருவத்திலேயே உள நெருக்கீட்டிற்கு குறிப்பாக மனச்சோர்வு [Depressive Disorders] நிலைக்கு உள்ளாகின்றார்கள். சில பிள்ளைகள் மெய்ப்பாட்டு முறைப்பாட்டுக் கோளாறுகளுக்கு [Somatic Complaint Disorder] உட்படுகின்றார்கள். அதாவது பிள்ளைகள் தமது யதார்த்தமான செயற்பாட்டு நிலைகளிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ளும் பொருட்டு தமது மெய்ப்பாடு தொடர்பாக சில முறைப்பாடுகளை முன்வைப்பார்கள். உதாரணமாக வகுப்புகளுக்குச் செல்ல விரும்பாத நிலையில் பிள்ளைகள் தலையிடி, தலைச்சுற்று போன்ற சாட்டுதல்களை முன்வைத்தல். சாதாரண வழக்கிலே பிள்ளைகள் பொய் கூறுகின்றார்கள் என எடுத்துக் கொண்டாலும், பிள்ளைகளால் தொடர்ச்சியாக இத்தகைய முறைப்பாடுகள் முன்வைக்கப்படுவது அவர்களது உள நலனின் ஆரோக்கியமற்ற நிலையைச் சுட்டிக் காட்டுவதாகும். ஏனெனில் கட்டுப்பாடற்ற மெய்ப்பாட்டு முறைப்பாட்டுக் குறைபாடு ஒரு உள நோயாகவே கருதப்படுகின்றது. தாம் கடுமையான முயற்சிகளில் ஈடுபட்டும் எதிர்பார்த்தவாறு சித்தியடைய முடிய வில்லையாயின் பிள்ளைகள் விரக்தி நிலைக்கு உள்ளாகின்றார்கள். இதன் காரணமாக இவர்களது ஆளுமைக் கட்டமைப்பானது [Personality Structure] இளம் சிறு வயதிலேயே தளம்பலடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனிஷ்ட இடைநிலைக் கல்வி 6ம், 7ம், 8ம், 9ம் தரங்களை உள்ளடக்கியது. 9ம் தரத்தின் நிறையில் கனிஷ்ட பாடசாலைத் தேர்வு [Junior School Proficency Examination] என்பது பாடசாலை மட்டத்தில் இடம்பெறுகிறது. புதிய கலைத்திட்டத்திற்கமைவாக கனிஷ்ட இடை நிலையில் பயிலும் மாணவரின் தொழில்நுட்பத் திறன்களையும், செயன்முறைத் திறன்களையும் வளர்த்து, அவற்றை மேம்படுத்த செயற்பாட்டு அறை [Activity room] பாடசாலைகளில் ஒழுங்கமைக்கப்பட வேண்டும் என்ற கருத்து முன்மொழியப்பட்டுள்ளது. மாணவர்கள் ஒரு துறை தொடர்பான அறிவை செயன்முறை வாயிலாக அறிந்து கொள்வதற்கு வாய்ப்பாக செயற்பாட்டு அறை அமைகிறது. மாணவர்கள் தத்தமது ஆற்றல்களையும் படைப்பாக்கத் திறன்களையும் வளர்த்துக் கொள்வதற்கு வாய்ப்பளிக்கக்கூடிய சுயாதீனமான ஓர் இடமாக இது அமைகிறது. இத்தகைய நுட்பமுறை அறிமுகம் செய்யப்பட்டதன் வாயிலாக, மாணவர்கள் அதிக ஆர்வத்துடன் தமது துறை சார்பாக கற்றறிகின்றனர். மேலும் மாணவர்கள் குழுக்களாக இணைந்து செயற்படல், தலைமைத்துவமேற்றல், புரிந்துணர்வுடன் செயற்படல் ஆகியவற்றுக்கு வழிவகுத்து மாணவர்கள் தமது புலக்காட்சியை [Perception] சிறந்த முறையில் விருத்தி செய்வதற்கு வாய்ப்பாகவும் இது அமைகின்றது.

இச்செயற்பாட்டு அறைகளின் உருவாக்கமும் அதன் தார்ப்பரியமும் நகர்புற மாணவர்க்கே வரப்பிரசாதமாக அமைகின்றன. கிராமப்புற பாடசாலைகளில் இத்தகைய வசதி வாய்ப்புக்கள் இல்லாத நிலையில் மாணவர்கள் பலவேறு உளரீதியான பாதிப்புகளுக்கு உள்ளாகின்றார்கள். நகர்ப்புற பாடசாலை மாணவர்களுடன் ஈடுகொடுக்க முடியாத நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். மேலும் 9ம் தர நிறைவில் இடம்பெறும் கனிஷ்ட பாடசாலை தேர்ச்சித் தேர்வானது, கனிஷ்ட இடைநிலை மாணவரின் அசைவுகளைக் கணிப்பீடு செய்து சான்றிதழ் வழங்குவதை நோக்காகக் கொண்டுள்ளது. 9ம் தரத்தோடு பாடசாலையை விட்டு விலகும் மாணவர்க்கு தொழில் வாய்ப்புக்கும், மாற்றுவகைக் கல்விக்கும் இத்தேர்வு துணை செய்யும் என நம்பப்படுகின்றது. ஆனால் நடைமுறையில் இது சாத்தியமாகும் தன்மை கேள்விக்குரியதாகவே கருதப்படுகின்றது. 9ம் தரத்துடன் இடைவிலகும் பெரும்பாலான மாணவர்கள் ஏட்டுக் கல்வியை தம் வாழ்விலே பிரயோகித்து தொழில் முயற்சியில் ஈடுபட முடியாதவர்களாக இருக்கின்றனர். இது அவர்களது எதிர்கால வாழ்வை பெரிதும் கேள்விக்குள்ளாக்கியுள்ளது. இந்நிலை கல்விக்கும் எதிர்கால வாழ்வுக்குமான பொருத்தப்பாடின்மையை புலப்படுத்துகின்றது. காரணம் புதிய கல்விச் சீர்த்திருத்த மாற்றங்களுள் ஒன்றாக விளங்கும் வாழ்க்கைத் தேர்ச்சி அல்லது வாழக்கைத் திறன் தகவு என்ற பாடத்தை மாணவர்களுக்குப் போதிப்பதற்கு ஆசிரியர்கள், கல்வி நிர்வாகிகள், பெற்றோர் போன்ற முத்தரப்பினரும் இதுபற்றிய தெளிவான புலக்காட்சி நிலையைக் கொண்டிருப்பதில்லை.

அடுத்து சிரேஷ்ட இடைநிலைக் கல்வியானது க.பொ.த சாதாரண தரம், க.பொ.த உயர்தரம் ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக அமைகின்றது. இப்பிரிவு நிலைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சனையாக பாடத் தெரிவுகள் அமைகின்றது. மாணவர்கள் தாம் எத்தகைய பாடத்தினைத் தெரிவு செய்து கொள்வது என்பதில் குழப்பநிலையை அடைகின்றார்கள். இங்கு மாணவர்கள் தெரிவுக்குரிய அனைத்துப் பாடங்கள் பற்றியதுமான அறிமுகத்தைப் பெற்று, பின்னர் தமக்குப் பொருத்தமான பாடத்தினைத் தெரிவுசெய்து கற்பதற்குரிய வாய்ப்பினை புதிய கல்விச் சீர்திருத்தம் ஏற்படுத்திக் கொடுப்பதில்லை. க.பொ.த சாதாரண தரத்தில் சிங்களம் /தமிழ் (இரண்டாம் மொழி) புவியியல் உடல் நலமும் உடற்கல்வியும், இலக்கியம், அபிவிருத்திக் கல்வி, என்பன தெரிவுப் பாடங்களாக அமைகின்றன. சில பாடசாலைகளில் ஒரு சில பாடங்கள் கட்டாய பாடங்களாக அமைகின்றன. சில பாடசாலைகளில் ஒரு சில பாடங்கள் கட்டாய பாடங்களாக மாற்றப்பட்டுள்ளன. காரணம் ஆசிரியர் பற்றாக்குறை அல்லது வளப்பற்றாக்குறை. இதன் தொடர்ச்சியாக மாணவர்கள் உயர்தரத்தில் எப்பிரிவினைத் தெரிவு .செய்து கொள்வது என்கிற பிரச்சனையை எதிர் கொள்கின்றார்கள். ஒரு சில மாணவர்கள் தான் தோன்றித் தனமாக பாடத்தெரிவினை மேற்கொள்கின்றார்கள். வேறு சிலர் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களது அழுத்தத்தின் பெயரிலும், இன்னும் சிலர் தம்மைப் பற்றிய சுய மதிப்பீட்டை பிறர் கணிப்பை உயர்த்திக் கொள்வதற்காகவும் பாடத்தெரிவுகளை மேற்கொள்கின்றனர். குறிப்பாக கலைப்பிரிவில் கல்வி கற்பது சாதாரணமான விடயம் எனக் கருதிக் கொள்ளும் மாணவர்கள் விஞ்ஞானம் அல்லது வர்த்தகப் பிரிவுகளை தெரிவு செய்து கொள்கின்றனர். இதில் குறிப்பிடத்தக்க விடயம் யாதெனில் உயர் தரத்திற்குரிய தெரிவுப் பாடங்களாகிய கலை, வர்த்தகம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளுமே ஒரே தரத்திலான (Quality) பாடப் பரப்புக்களைக் கொண்டமைந்த தன்மையை மாணவர்கள் விளங்கிக் கொள்வதற்கு புதிய கல்விச் சீர்திருத்தம் வழி வகுக்கவில்லை. இதன் காரணமாக கலைப் பிரவுகளிலே கல்வி கற்கும் சில மாணவர்கள் தாழ்வுச் சிக்கல் [Inferiority Complex] நிலைக்கும், விஞ்ஞான, வர்த்தகப் பிரிவுகளில் கல்வி கற்கும் மாணவர்களில் சிலர் உயர்வுச் சிக்கல் (Superiority Complex] நிலைக்கும் உள்ளாகி தமது எதிர்கால இலட்சியத்தை அடைய முடியாதவர்களாகின்றனர். இதன் விளைவாக இறுதிப் பரீட்சையில் பல மாணவர்கள் பின்னடைவை எதிர் கொள்கின்றார்கள். இலங்கையின் பாடசாலைக் கல்வியானது பல்கலைக்கழக நுழைவை நோக்காகக் கொண்டு செயற்படுகின்ற நிலையில் மாணவர்கள் புத்தகப் பூச்சிகளாகி முனைப்புடன் கற்கின்றனர். பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் மேற்படிப்பினுள் நுழைகின்றனர். ஆனால் பல்கலைக்கழகத் தெரிவுக்கு உட்பட்டவர்களின் நிலை கேள்விக்குள்ளான நிலையில் இருக்கின்றது. இருப்பினும் தெரிவு கிடைக்காத மாணவர்கள் சிலர் தம் பாடத்தெரிவுகளை மாற்றிக்கொண்டு மீண்டும் முயற்சிக்கின்றனர். குறிப்பாக விஞ்ஞான, வர்த்தக பிரிவுகளில் கற்று, பல்கலைக்கழகத் தெரிவு கிடைக்காத மாணவர்கள் கலைப்பிரிவில் இணைந்து/ கல்வி கற்று, சிலர் பல்கலைக்கழக அனுமதியையும் பெற்று விடுகின்றனர். சில மாணவர்கள் பெறுபேறுகளின் நிமித்தம் மனச் சோர்வினால் கற்றலைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடராமல் வேலை வாய்ப்பைத் தேடுகின்றனர். இந்நிலையில் அவர்களது உளநிலை பெரிதும் பாதிக்கப்படுகின்றது. காரணம் அவர்கள் கற்ற கல்விக்கும் வேலைவாய்ப்புக்குமிடையே பொருத்தப்பாடின்மை காணப்படுகின்றது. இந்நிலை பட்டதாரி மாணவர்களிடையேயும் ஏற்படுகின்றது. உதாரணமாக, நடனத்துறையில் சிறப்புக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்த ஒருவர் சுகாதார திணைக்களத்திலும், இந்து நாகரிகத் துறையில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற ஒருவர் வங்கியிலும் கடமையாற்றுகின்றனர். மேலும் பட்டதாரி மாணவர்களில் பலர் வேலையில்லாப் பிரச்சினையை எதிர்கொள்கின்றனர். இவர்களது நிலையைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளும் பாடசாலை மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதை விரும்பாமல் பாடசாலைக் கல்வித் தரத்துடன் தமக்கென தொழில் வாய்ப்பு ஒன்றைத் தேடிக் கொள்கின்றனர்.

புதிய கல்விச் சீர்திருத்தத்திலே அறிமுகம் செய்யப்பட்ட கணிப்பீட்டு முறைமை பற்றி நோக்கின், இது மாணவர்களைத் துடிப்புடன் செயற்பட வைப்பதுடன், பரீட்சை பற்றிய பயத்திலிருந்து மாணவர்களை உளரீதியாக விடுவிக்கும் ஒரு செயற்பாடாகவும் காணப்படுகின்றது. இம்முறையில் ஒவ்வொரு பாடத்திலும் மாணவரது அடைவுகள் பதிவு செய்து வைக்கப்படும். வகுப்பிலுள்ள அனைத்து மாணவரதும் அடைவுகள் வண்ணச் சுட்டுகளாலும் வரைபுகளாலும் தொகுத்துக் காட்டப்படும். மாணவரது அடைவுகள் அவரவர் அப்பியாசப் புத்தகங்களில் குறித்துக் காட்டப்படும். தமது அடைவுகளை வரைபடங்களிலே காணும் பொழுது தனது யதார்த்த நிலையை மாணவர் தாமே அறிந்து கொள்வர். இருப்பினும் இச்செயற்பாடு, மாணவர்களது மனங்களில் நேரான தாக்கங்களை ஏற்படுத்துவது போன்றே எதிரான சில தாக்கங்களையும் ஏற்படுத்துகின்றது. குறிப்பாக கணிப்பீட்டு முறைமையினால் பரீட்சை பற்றிய பதகளிப்பு (Anxiety) நிலை மாணவர் மத்தியில் இருந்து விலகிக் கொள்கிறது. இருப்பினும், இக் கணிப்பீட்டு முறைமையினால் மாணவர்கள் மன அழுத்த நிலைக்கு [mind Stress] தள்ளப்படுகின்றார்கள். அதாவது கற்றல் என்பது பெரும் சுமையாக அவர்களது மனங்களில் படிந்து விடுகின்றது. இதன் விளைவாக தேடல் மீதான ஆர்வம் மாணவர்களிடையே குறைவடைந்து பரீட்சையை மட்டுமே நோக்காகக் கொண்டு மாணவர்கள் செயற்படுகின்றார்கள்.

ஆக மொத்தத்தில் இலங்கையின் புதிய கல்விச் சீர்திருத்தமானது திறனாய்வு மனப்பாங்கு, ஆக்க மலர்ச்சிச் சிந்தனை, சமூக நோக்கு, தற்பரிமாணங்கள், சுய முகாமைத்துவம், வளமுகாமைத்துவம், சுய சீர்மியம், சமத்துவத்தை பாதுகாத்தல், தரப் பாதுகாப்பு முதலாய பண்புகளை வளர்த் தெடுக்கவில்லை என்றகருத்து முன்மொழியப்பட்டுள்ளது. [Upali Gunasekara, Daily News 16-12-98] கல்விச் செயன் முறையினால் உருவாக்கப்படுபவர்கள், பரீட்சை எழுதுவதற்குரிய மனிதர்களாகத் தயாரிக்கப்படுகின்றார்களே ஒழிய வாழ்க்கை அறிதகவு கொண்ட மனிதர்களை உருவாக்கப்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. தேசியகல்வி ஆணைக்குழுவின் முதலாவது அறிக்கையில் (Report - I / NEC 1992) இப்பிரச்சினையிலிருந்து விடுபடுவதற்கான முன்மொழிவு குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுவான தேசிய குறிக்கோள்கள், பொதுவான திறன் தகவுகள் முதலியவை கற்றல், கற்பித்தற் செயன்முறையினூடாக வளர்த்தெடுக்கப்பட வேண்டுமென்று அதிலே முன் மொழியப்பட்டுள்ளது.

இதற்கமைவாக நோக்கின் மாணவர்களின் அறிவை விருத்தி செய்வதில் பரீட்சைகளின் ஆதிக்கத்தைக் குறைத்து செயன்முறைக் கல்விக்கும், தொழில் முறையோடு தொடர்புடைய கல்வி முறைமைக்கும் முக்கியத்துவம் கொடுத்து மாணவர்களிடையே காணப்படும் தனியாள் வேறுபாடுகளை இனங்கண்டு அதற்கேற்றவாறு அவர்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்கி, மாணவர்களின் எதிர்கால வெளிச்சத்தினை அவர்களே இனங்கண்டு கொள்வதற்கேற்ற விதத்தில் கல்வித் திட்டங்கள் .அமையுமாயின் மாணவர்களது உள நலன் மேம்படுத்தப்படுவதோடு, அவர்களது எதிர்காலமும் சுபீட்சம்பெறும் என்பதே பெரும்பாலானோரின் அபிலாசையாக அமைகின்றது.

**சற்றே சிந்துத்துப் பாருங்கள்!**

நமக்கு இரண்டு காதுகளும், ஒரேயொரு வாயும் தரப்பட்டிருப்பது ஏன்?

1. நாம் பேசுவதைப் போல் இருமடங்கு கவனிக்க வேண்டும் என்பதற்காகவா?
2. பேசுவதை விடக் கவனிப்பது இரு மடங்கு சிரமமானதா என்பதற்காகவா?
3. இரண்டு ஒன்று என்ற விகிதத்தில் கவனிப்பதையும் பேச்சையும் பயன்படுத்த வேண்டும் என்பதற்காகவா?
4. மேற்சொன்ன அனைத்துக் காரணங்களுக்கும் சேர்ந்ததா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Economy OF SRILANKA

**Dilaxshana Keerthithas.**
2nd Year,
Computation & Management,
University of Peradeniya
(Past student of T/Methodist Girls' College

Sri Lanka is a lower-middle income developing nation with a gross domestic product of about $32 billion. This translates into a per capita income of $1,600. Sri Lanka's 91% literacy rate in local languages, and life expectancy of 72 years rank well above those of India, Bangladesh, and Pakistan. English language ability is relatively high but has declined significantly since the 1970s.

Sri Lanka's income inequality is severe, with striking differences between rural and urban areas. About 15% of the country's population of 20.1 million remains impoverished. Civil conflict, falling agricultural labour productivity, lack of income-earning opportunities for the rural population, high inflation and poor infrastructure outside the Western Province are impediments to poverty reduction.

In 1978, Sri Lanka shifted away from a socialist orientation and opened its economy to foreign investment. But the pace of reform has been uneven. A period of aggressive economic reform under the UNP-led government that ruled from 2002 to 2004 was followed by a more statist approach under former President Chandrika Kumaratunga and current President Mahinda Rajapaksa.

Despite a brutal civil war since 1983, economic growth has averaged around 4.5%. In 2001, however, GDP growth was negative



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.4%—the only contraction since independence. Growth recovered to 4.0% in 2002. Following the 2002 ceasefire and subsequent economic reforms, the economy grew more rapidly, recording growth rates of 6.0% in 2003 and 5.4% in 2004. The December 2004 Indian Ocean tsunami killed 32,000 people, displaced 443,000, and caused an estimated $1 billion in damage. The tsunami's overall economic impact was less severe than originally feared, with the economy growing by 6% in 2005 as the damage was offset by the reconstruction effort. The economic situation in Sri Lanka is stable, but hampered by the resumption of hostilities between the government and the LTTE, escalating oil prices, and high inflation and interest rates. GDP grew by 6.8% in 2007, down from 7.7% growth in 2006. Sri Lanka's key exports such as garments and tea performed well. Remittances from foreign workers, estimated at $2.5 billion, also helped the economy.

President Rajapaksa's broad economic strategy was outlined in his election manifesto "Mahinda Chintana" (Mahinda's Thoughts), which now guides government economic policy. Mahinda Chintana policies focus on poverty alleviation and steering investment to disadvantaged areas; developing the small and medium enterprise (SME) sector; promotion of agriculture; and expanding the already enormous civil service. The Rajapaksa government rejects the privatization of state enterprises, including "strategic" enterprises such as state-owned banks, airports, and electrical utilities. Instead, it plans to retain ownership and management of these enterprises and make them profitable.

The future of Sri Lanka's economic health primarily depends on political stability, return to peace, and continued policy reforms—particularly in the area of fiscal discipline and budget management. Rising oil costs and the 24-year conflict have contributed to Sri Lanka's high public debt load (86% of GDP in 2007). Sri Lanka needs economic growth rates of 7-8% and investment levels of about 30% of GDP for a sustainable reduction in unemployment and poverty. In the past 10 years, investment levels have averaged around 25% of GDP.

Sri Lanka depends on a continued strong global economy for investment and for expansion of its export base. The government plans an ambitious infrastructure development program to boost growth. It



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

hopes to diversify export products and destinations to make use of the Indo-Lanka and Pakistan-Sri Lanka Free Trade Agreements, GSP Plus treatment by the European Union and other regional and bilateral preferential trading agreements.

The service sector is the largest component of GDP at around 60%. In 2007, the service sector continued its strong expansion, fueled primarily by strong growth in telecom, trading, transport, and financial services. Public administration and defence expenditures increased in 2007 due to resumption of hostilities, expansion of public sector employment, and the expenses associated with maintaining a 106-minister cabinet. There also is a growing information technology sector, especially information technology training and software development. The tourism sector has been impeded by the volatile security situation.

Industry accounts for 28% of GDP. Manufacturing is the largest industrial subsector, accounting for 18% of GDP. The construction sector accounts for 6% of GDP. Mining and quarrying account for 2% of GDP. Electricity, gas and water account for 2% of GDP. Within the manufacturing sector, food, beverage, and tobacco is the largest subsector in terms of value addition, accounting for 46%. Textiles, apparel, and leather is the second-largest sector with 24% of value addition. The third-largest sector in value added terms is chemical, petroleum, rubber, and plastic products.

Agriculture has lost its relative importance to the Sri Lankan economy in recent decades. It employs 31% of the working population, but accounts for only about 12% of GDP. Rice, the staple cereal, is cultivated extensively. The plantation sector consists of tea, rubber, and coconut; in recent years, the tea crop has made significant contributions to export earnings.

Sri Lanka's exports (mainly apparel, tea, rubber, gems and jewellery) are estimated at $7.7 billion and imports (mainly oil, textiles, food, and machinery) were estimated at $11.3 billion for 2007. The resulting large trade deficit was financed primarily by remittances from Sri Lankan expatriate workers, foreign assistance, and commercial borrowing. Sri Lanka must diversify its exports beyond garments and tea. Garment exports face increased competition since the 2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

expiration of the worldwide Multifiber Arrangement. Sri Lanka's exports to the European Union (EU) increased sharply in 2006-2007 due to duty-free entry of goods under the EU GSP Plus program, granted in 2005 to help Sri Lanka rebuild after the 2004 tsunami. The GSP Plus program expires at the end of 2008 and its renewal is uncertain. The tea industry is challenged by a shortage of plantation labour and by growing competition.

Exports to the United States, Sri Lanka's most important single-country market, were estimated to be around $2.1 billion for 2007, or 27% of total exports. As a result of the GSP Plus program, the EU as a whole is Sri Lanka's biggest export market. For many years, the United States has been Sri Lanka's biggest market for garments, taking almost 50% of total garment exports. India is Sri Lanka's largest supplier, accounting for 21% of imports valued at over $2.6 billion. United States' exports to Sri Lanka were estimated to be around $230 million for 2007, consisting primarily of wheat, electrical apparatus, textiles and specialized fabrics, medical and scientific equipment, plastics, and paper.

Sri Lanka is highly dependent on foreign assistance, with the World Bank, the Asian Development Bank, Japan, and other donors disbursing loans totaling $1.4 billion in 2007. Iran is becoming the largest provider of foreign assistance. During the Iranian President's visit in April 2008, Iran committed $450 million for the Uma Oya multipurpose irrigation project. Iran is also a major lender to Sri Lanka and has provided infrastructure project loans and an interest-free credit facility for oil imports. Under this facility, Sri Lanka has imported substantial amount of oil (valued at $700 million as of June 30, 2008). Iran promised assistance for modernization of Sri Lanka's only oil refinery, though no firm commitments are in place. China has also become a major lender for infrastructure projects, such as a new port and a coal power plant. Foreign grants amounted to $275 million in 2007. While implementation of aid projects has been spotty over the years, the government is trying to improve this record by streamlining tender processes and increasing project management skills.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Should women go out to work?

In the present day society more and more women go out to work. This situation has given rise to many social, economic and cultural issues. some of them are advantageous and the others are disadvantageous.

In ancient times women were confined to home. They were expected to do all the household work and to look after their children. Only their husbands earned money under this situation they suffered a lot through the masculine supremacy.

It is apparent that most of the women go out to work because they are unable to make both ends meet. In other words they are unable to maintain their families only with the income of their husbands. The cost of living is going up day by day. With the escalating cost of living, many families feel that they need a dual income to provide decent living conditions and a good education for their children. According to a statement issued by the university Grants Commission, the majority of the students who enter the universities are girls. After receiving higher education in universities they do not like to waste their knowledge and abilities and they are compelled to seek employment. There are a large number of women in the Sri Lanka in the Administrative Service too holding high positions.

Now let us look at the disadvantages of this situation. There is no time for employed women to look after their children and elderly family members. Most of them are looked after by Servants. It is said that mother's love and affection is essential for a child for his mental and physical development. In the present day society some children grow up with many problems. Some drop out of school , others take to other vices and often get involved with gangs, some children grow up lazy and confused. They need the full time guidance and support of a mother.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Today thousands of SriLankan women are employed in the Middle - East Countries. Some women renew their employment contracts and stay in foreign countries for longer periods. As a result of this the peaceful environment which prevailed in their families has been shattered. Their husbands have taken to liquor and other vices. Their Children have neglected their studies. Some children have even become drug addicts. It is true that these women bring a lot of money to SriLanka as foreign exchange. But their family lives are bleak.

So. I wish to conclude by saying that, although there are disadvantlages, the advantages are mainfold. Therefore considering the advantages in my opinion I feel that women should go to work and enjoy herself well.

**Rohini Kantharooban**
2011 (Science)

**வாழ்க்கை என்பது**

போராட்டம் .... அதை சந்தித்து வெல்ல வேண்டும்

விளையாட்டு ..... அதை மகிழ்ச்சியுடன் விளையாட வேண்டும்

ஓட்டப்பந்தயம் ..... அதில் அவசியம் ஓட வேண்டும்

வாழ்க்கையின் வெற்றி என்பது பரிசு அதை அனைவருடனும் பகிர்ந்து கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னை

அன்பின் உருவம்
ஆறுதலின் வடிவம்
இன்னல் நீக்கும்
ஈகையின் பிறப்பிடம்

உள்ளதைக் காட்டும்
ஊமையில்லா மௌனம்
எளிமையின் பிறப்பிடம்
ஏக்கத்திற்கு மடியிடம்
ஐயத்தைப் போக்கிடும்

ஒழுக்கத்தைக் கற்றுத்தரும்
ஓங்கி வளரும் ஆலமரம்
ஔடதத்தை தருணத்தில்
எனக்கு ஊட்டும் தாயவள்.

**ஜெமிமா துரைராசா**
**தரம் - 3**

## என் அழகு பூக்கள்

சின்னச் சின்னப் பூக்களாம்
சிந்தை கவரும் பூக்களாம்
மனம் மயக்கும் பூக்களாம்
மக்கள் விரும்பும் பூக்களாம்

அம்மா ஓடி வாருங்கள் - என்
அழகுப் பூவைப் பாருங்கள்
வண்ண வண்ண மலர்களை
- வண்டு
வந்து வந்து மொய்க்குதே

சிவப்பு மஞ்சள் நிறத்திலே
சிரித்து மகிழும் பூக்களாம்
எத்தனை அழகு உங்களிடம்
என்னால் எட்டி விடவும் முடியுமா?

**சாலினி விநாயகமூர்த்தி**
**தரம் - 4B**

## பாசம்

பூவிற்கு பாசம் வண்டுடன்
மண்ணிற்குப் பாசம் வேருடன்
மீனுக்குப் பாசம் நீருடன்
தாயிற்குப் பாசம் சேயுடன்

கண்ணிற்குப் பாசம் இமையுடன்
இரவுக்குப் பாசம் பகலுடன்
சிறுவர்களுக்குப் பாசம் சமாதானத்துடன்
உண்மை நட்புக்குப் பாசம் கல்வியே

**லாவண்யா ஞானராஜ்**
**தரம் - 3**

## அம்மா

அமிழ்தினும் இனியவள் அவள்
ஆசையாய் எனை அணைப்பவள்
இனிய வார்த்தை பேசியே எமை
ஈன்றெடுத்த தெய்வம் அவள்

உலகில் நாம் உயர்ந்திடவே
ஊண் உறக்கம் மறந்தவள்
எது வந்த போதிலும் - எம்
ஏற்றம் காண உழைத்தவள்

ஐயம் இன்றி வாழவே
ஒன்றே குலம் என்றவள்
ஓதும் குருவை மதித்திட
ஔவை பாதை காட்டினாள்

என்றும் அவளைப் போற்றுவோம்
ஏற்றம் பெற்று வாழுவோம்.


**மேரி எல்ஜீனியா யூலியன் எமாட்**
**தரம் - 4B**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணினியின் வரலாறு

"கணினி அறிவு காலத்தின் தேவை"."கணிதம் அறியாதவன் இதற்குள் நுழையாதிருப்பானாக" இது நூலகங்களில் காணப்படும் வாசகம். "கணினி அறிவு இல்லாதவன் வேலை உலகினுள் நுழையாதிருப்பானாக" இது இன்றைய மாணவர்களுக்கான மகுடவாசகம். இன்று உலகில் உள்ள பலராலும் உச்சரிக்கப்படும் சொல் "தகவல் தொடர்பாடல் தொழினுட்பம்" இன்றைய நவீனத்தின் அதீத வளர்ச்சியால் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்துடன் ஒன்றித்திருப்பது மிக மிக அவசியமாகின்றது. இத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்துறையில் வெற்றி பெற கணினி மிகவும் முக்கியமானது. நாம் இன்று அதிகளவில் பயன்படுத்தி வருகின்ற கணினியின் வரலாறு என்ன என்பதை அறிந்து கொள்வோமா?




கணினியின் வரலாற்றுத் துறை அபிவிருத்தியில் பல்வேறு கணினிக் கருவிகளின் கண்டுபிடிப்புகள் காணப்பட்டன. பெரிய அளவிலான தொழினுட்ப முன்னேற்றமானது கணினியில் மிக சிறியளவான கணினிகளைக் கண்டுபிடித்ததோடு குறைந்த விலையுடையதாகவும், அதிகசக்தி வாய்ந்ததாகவும் வினைத்திறன் கொண்டதாகவும் கணினிகளை உருவாக்கக் காரணமாக இருந்துள்ளது.

ஆரம்பகாலங்களில் மனிதன் கணிப்பீடுகளை (கூட்டல், கழித்தல்) தனது விரல்கள் மற்றும் சிறு பொருட்களின் உதவியோடு மேற்கொண்டான். பின் இதற்கு உதவியாகக் கருவிகளைக் கண்டுபிடிக்க முயன்று வெற்றி கண்டான். நாம் தற்போது பயன்படுத்தும் கணினி கண்டுபிடிப்பதற்கு முதற்படியாக அமைந்த கருவி மணிச்சட்டம் (அபாகஸ்) ஆகும். இக் கருவி கணித கணிப்பீடுகளான கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் போன்றவற்றை விரைவாக மேற்கொள்ள உதவியாக இருந்தது. இதுவே முதன் முதலில் தோற்றம் பெற்ற கணிப்பீட்டுக் கருவியாகும்.

அபாகஸ் கருவியை மெருகூட்டி வடிவமைக்கப்பட்டதே கூட்டும் இயந்திரம் ஆகும். இக் கூட்டும் இயந்திரத்தை பிளாயிஸ் பஸ்கால் என்ற பிராஞ்சு நாட்டுக் கணித மேதை வடிவமைத்தார். இது பெருக்கல், வகுத்தல் போன்ற செயற்பாடுகளை இலகுவாகவும் விரைவாகவும் செய்யக்கூடியதாகக் காணப்பட்டது. கூட்டும் இயந்திரத்தின் தொழிற்பாடுகளை விட அதிக வினைத்திறன் வாய்ந்த இரண்டு இயந்திரங்களை Charles Babbage வடிவமைத்தார். அதில் ஒன்று Different Engine எனும் இயந்திரம் ஆகும். இதன் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் போன்ற செயற்பாடுகளை இலகுவாக விரைவாக செய்யக்கூடியதாக அமைந்ததோடு digit வரையுள்ள கூடிய பெறுமதியுள்ள இலக்கங்களையும் கணிப்பீட்டிற்கு உள்ளடக்க கூடியதாக அமைந்தது. இதைவிட Algebra கணக்குகளையும் செய்யக் கூடியதாக இருந்தது. மற்றையது Analytical Machine ஆகும். இதன் சிறப்பு தானாகவே கூட்டல் கணக்குகளை கணக்கிடும் இயந்திரமாக விளங்குவதாகும். இதனை 'தன்னியக்கக் கணினி இயந்திரம்' என்று அழைத்தனர். இது நினைவக ஆற்றல்களையும் கொண்டிருந்ததால் ஒரு நிமிடத்திற்கு 60 கணக்குகளை செய்து முடிக்கக்கூடியதாக இருந்தது. இவற்றின் அடிப்படைகளிலிருந்தே நவீன கணினியின் தந்தை என அழைக்கப்படுகின்றார்.

இதன் பின்னர் Ada என்ற பெண்மணியால் கணினி தொழிற்பாட்டிற்கு இன்றியமையாததாகக் காணப்படும் Program முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. இவர் இப் Programஐ துவித எண் முறையிலேயே அமைத்தார். பின் ஜேர்மன் ஜொளரித் 1880 ஆம் ஆண்டு punched card என்ற இயந்திரத்தை அறிமுகப்படுத்தினார். இது துளைகளை இட்டு கணக்கீடு செய்து கொள்ளும் வல்லமை கொண்டதாகக் காணப்பட்டது. இக் கண்டுபிடிப்பின் பின் Automatic sequence controlled calculator 1944ல் வடிவமைக்கப்பட்டது. இது Mark I என அழைக்கப்பட்டிருந்தது. இது கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் போன்றவற்றை இலகுவாக மேற்கொள்ள உதவி புரிந்தது.

முதலாவது இலத்திரனியல் Digital கணினி Electronic Numerical Integrators And Computers ஆகும். இது 1946 இல் வடிவமைக்கப்பட்டது. இது கணிப்பீடுகளைச் சேமித்து வைக்கக்கூடிய சிறியளவான நினைவக வசதியைக் கொண்டதாகவும் , அசையக்கூடிய எந்த ஒரு பாகங்களையும் கொண்டிராமலும் காணப்பட்டிருந்தது. இது வெற்றிடக்குழாய்கள் (Vaccum Tube) மூலம் தொழிற்பட்டது. இதன் பின் Universal Automatic Calculator கண்டுபிடிக்கப்பட்டது. இது ஒரு செக்கனில் 10000 கணிப்பீடுகளை மேற்கொள்ளக்கூடியதாகக் காணப்பட்டிருந்தது. இது 1950 ல் வடிவமைக்கப்பட்டிருந்தது. இதை 1957 இல் IBM அபிவிருத்தி செய்து IBM 704 என வெளியிடப்பட்டிருந்தது. இது ஒரு செக்கனில் 100000 கணிப்பீடுகளை மேற்கொள்ளக்கூடியதாக காணப்பட்டது. 1950 இன் பிற்பகுதியில் Transistor கண்டுபிடிக்கப்பட்டது. இது ஆயிரக்கணக்கான வெற்றிடக் குழாய்களைப் பிரதியீடு செய்து கொண்டது. இவ் Transistors 200000-250000 வரையான கணிப்பீடுகளை 1 செக்கனில் மேற்கொள்ளக் கூடியனவாகக் காணப்பட்டன. இதன் பின் 1960 இன் பிற்பகுதியிலிருந்து IC (Integrated circuit) தொழினுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டது. பின் 1980 இன் பிற்பகுதியில் நவீன வடிவ கணினிகள் கண்டுபிடிக்கப்பட்டன. கணினி கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து இன்று வரையுள்ள காலப்பகுதியில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டன. தற்போதைய நவீன கணினியின் செயற்பாட்டை விரிவுபடுத்தி இன்னும் கணினி கண்டுபிடிப்புக்கள் வெளிவர வாய்ப்புகளுண்டு.

**சம்சத்பானு றொக்ஷான்**
தரம் - 10B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Social Bond



Share the Love with the elders at the Elders Home



Shramadana - Navothaya week



Saving is essential - Peoples Bank



The world need Today is spirituality



Present need of the Society

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் துடைக்கும் கரங்கள்

கானம் பாடும் குயில்களின் கீதமும், பறவைகளின் ஓசையும், காதுகளுக்கு இனிமை சேர்க்க, காலை வெய்யில் பட்டதினால் பனித்துளிகள் வெட்கத்தில் கரைந்து போக, சில்லென்ற காற்று அந்தப் பல்கலைக்கழக வளாகத்தைத் தொட்டுச் சென்றது. நித்திரை கலைந்திருந்தும் அவள் கண்விழிக்க மனம் இன்றிப்படுத்திருந்தாள்.

''கார்த்திகா.... கார்த்திகா ஏய் கார்த்திகா எழும்புடி ஆறு மணிவரைக்கும் என்ன தூக்கம் எழும்புடி''

அனித்தா குளியலறையில் இருந்து குரல் கொடுக்கிறாள். சில மணி நேரமாகியும் அவள் பதிலைக் காணாது போக அனித்தா அவள் அருகே வந்து மெதுவாய் தட்டி எழுப்பினாள்.

''கார்த்திகா ஏய் கார்த்திகா''

''என்னடி''

''இன்றைக்கு பட்டமளிப்பு விழா வெள்ளன வெளிக்கிட்டு போக வேண்டாமா'' இல்லடி எனக்கு வேணாம் நான் அங்க வரவில்லை.

யன்னலைப் பார்த்தபடியே பதில் அளித்தாள் கார்த்திகா.

''ஏய் கார்த்தி ஏன் அப்படி சொல்லுறா உன்னோட கனவு, இலட்சியம் உன் வாழ்க்கையின் அர்த்தம் எல்லாம் இன்றைக்கு நிறைவேறப் போகுது இப்ப போய் இப்படிச் சொன்னா. ஏய் இங்க பாரு''

அவள் தலையைப் பிடித்து மெல்ல அவள் பக்கம் திரும்பினாள் அனித்தா. கார்த்திகாவின் கண்களில் இருந்து கண்ணீர் ஆறாய் ஓடிக் கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கார்த்திகா இதோ பாரு எப்பவும் முடிந்ததைப் பற்றி நாங்க யோசிக்கக் கூடாது. நடக்கப் போவதைப் பற்றி மட்டும் தான் யோசிக்கணும். இன்றைக்கு உனக்கு சந்தோஷமான நாள் இப்படி அழாத கார்த்திகா''

''இருந்தும் என்ன பிரியோசனம் அம்மா என்னோட இல்லையே'' அவ்வாறு சொல்லிக் கொண்டு அவள் ஓவென கண்ணீர் விட்டு அழுதாள். அவளை தன் தோள்களோடு அணைத்து தலையை மெதுவாகத் தடவியபடி இருந்தாள் அனித்தா. கார்த்திகாவின் நினைவுகள் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு மெதுவாய் ஓடியது.

''கார்த்திகா ஏன் கோம் வேர்க் பண்ணிட்டு வரவில்லை?''

''கார்த்திகா உன்னைத் தான்மா, ஏன் கோம் வேர்க் பண்ணிட்டு வரவில்லை''

''மிஸ் அது வந்து அது வ.... ந்... து''

வார்த்தைகள் வராது கண்ணீர் மட்டும் அவள் கண்களில் இருந்து வந்தது.

''சரி நீபோய் உட்காரு, அடுத்தமுறை கோம் வேர்க் தந்தால் செய்து விட்டு வரணும் சரியா''

''சரி மிஸ் என்றாள்''

''எஸ் கியூஸ் மீ திவ்வியா மிஸ் கொஞ்சம் வரமுடியுமா?''

''சொல்லுங்க'' சந்திரா மிஸ் என்ன விடயம்

'' நேற்றுத்தானே புதுஷா இந்தப் பாடசாலைக்கு வந்தனீங்க உங்ககிட்ட ஒரு முக்கியமான விடயம் சொல்லோணும்''

''சொல்லுங்க''

''கார்த்திகா ரொம்ப கெட்டிக்காரி நல்லாப் படிப்பா அவள் ரொம்ப பாவம் அவளுக்கு அம்மா இல்ல சின்ன வயதிலேயே இறந்திட்டாங்க. அவங்க அப்பா ஒரு குடிகாரன். கார்த்திகா ஒவ்வொரு நாளும் பீச்சில கடலை விற்கிறாள். அவங்க பக்கத்து வீட்டில் இருக்கிற மனுஷி தான் கடலை அவித்து கொடுக்கிறதாம். அத வச்சுத்தான் அவள் சாப்பிடுறவள் அவங்கட அப்பா அவள கவனிக்கிறதே இல்லை. ஒரே அவளைப் போட்டு அடிக்கிறது. நாங்க எல்லா ஆசிரியரும் சேர்ந்து அவளின் படிப்பிற்கு உதவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யுறோம். நாங்க அவளை அடிப்பதில்லை நீங்க கொஞ்சம் பார்த்துக் கொள்ளுங்க மிஸ். சின்ன வயதில் எவ்வளவு கஷ்டத்தை அனுபவிக்கிறது பாவம். இத விட அவளுக்கு எங்களால எந்த உதவியும் செய்ய முடியவில்லை.

``ஓ அப்படியா நான் பார்த்துக் கொள்ளுறன்"

மறுநாள் பாடசாலை முடிந்ததும் திவ்வியா கார்த்திகாவை தன் வீட்டிற்கு கூட்டிச் சென்றாள்.

``கார்த்திகா இனி இதுதான் உன்வீடு இனி நான் தான் உனக்கு எல்லாமே நான் தான் சரியா. இங்க உனக்கு எல்லா வசதியும் இருக்கு நீ நல்லா படித்து பெரிய ஆளாக வரவேண்டும். இனி உன் அப்பா இங்க வரமாட்டார். உன்ன அடிக்கமாட்டார். நான் உன் கூடவே இருப்பன். உனக்கு துணையா இருப்பன் சரியா கவலைப்படாத அவள் கண்களில் இருந்து கண்ணீர் மட்டும் வெளிவந்தது வார்த்தைகள் வரவில்லை.

அன்று போலவே இன்றும் அவள் மனம் மௌனமாய் சொல்லிச் சொல்லி அழுதது.

அன்று சொன்னீங்களே இனி என்கூடவே இருப்பன் என்று ஏன் என்னை விட்டுப் போனீங்க. இப்ப உங்கட கனவு எல்லாம் பளிச்சிட்டு தான் பெரிய டொக்டராகப் போறன் இந்த நேரம் நீங்க பக்கத்தில இல்லை ஆறுமாதமாய் என்னைத் தனியே விட்டுட்டு போய்ட்டீங்களே. நீங்க எனக்கு வேணும் நீங்க இல்லாட்டி நான் இந்த நிலைமைக்கு வந்திருப்பேனா? எல்லாத்திலும் என் கூடத்துணையா இருந்திட்டு இந்த நேரத்தில என்னைத் தனிமையாக்கிட்டு போய்ட்டீங்க என்று சொல்லியவாறு அனித்தாவைக் கட்டிப்பிடித்தவாறு விம்மி அழுதாள்.

இதைப்பார்த்த அனித்தா ``கார்த்தி இதோ பார் இனி உனக்கு நான் இருக்கிறன், கார்த்தி பழையதை எல்லாம் யோசித்து இப்படி உன்னை நீயே கெடுத்துக்காத அழுவதை விட்டுட்டு வெளிக்கிடு நேரமாகி விட்டது ஏய் கார்த்தி உனக்கு இனி நான் எங்கட குடும்பம் இருக்கு கார்த்தி இனி எல்லாவற்றிலும் நாங்க உன்னோடு இருப்பம் என்று கூறினாள் அனித்தா. அழாத கார்த்தி அவள் அழுகையை நிறுத்தமட்டும் அணைத்தபடியே இருந்தாள்.

ஒவ்வொரு மனிதனின் கண்ணீரையும் துடைப்பதற்கு ஒருகரம் இருந்தால் இந்நாட்டில் கண்ணீருக்கே தட்டுப்பாடு ஏற்படும் அல்லவா.

**யோன்சன் வர்மிளா**
கலைப்பிரிவு (2010)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HIV - AIDS AND HUMANITARIAN ACTION

The 20th Anniversary of World AIDS Day was celebrated on 1st December 2008. The whole world remembered those who have lost their lives to AIDS by lighting candles and wearing red ribbons on 1st December 2008. SriLanka has the good fortune to be a country with low rate of HIV infection. If we look back the history for tracking this deadly disease we can can see the first SriLanka national with HIV - AIDS was detected in 1987. But the record reveals that a foreigner was the first victim detected on HIV - AIDS in Srilanka. However the world Health Organization states the first HIV person was reported from San Francisco U.S.A on 5th June 1981.

Even though HIV - AIDS is a populor topic today, many people still do not know exactly what HIV -AIDS actually means. Most of the people are still in the dark or with wide spread misconceptions about HIV -AIDS. In fact they do not know how to protect themselves. Therefore it has become absolutely essential to have a basic knowledge about HIV -AIDS, and the epidemic HIV - AIDS is the abreviation for Human Immune Deficiency Virus - Acquired Immune Deficiency Syndrome. According to latest report 40.3 million AIDS victims are living all over the world Around 95 percent of them live in developing countries, and 2.5 million victims are children. Nearly 2 million died of AIDS in 2007. In the year 2007 alone some 2.5 million people become newly infected with virus. The report further revealed that most of the victims are between the age group of 25 to 44 years. There fore HIV -AIDS today is a threat to men, women and children on all continents around the world.

**CAUSES.**

Let us now see as to how the HIV, the virus that causes AIDS is spread. It spreads through four bodily fluids blood, semen, vaginal secretions and breast milk. The



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

virus can only be spread from an infected person if his or her bodily fluids enter the blood stream, of an uninfected person, thus the infection is transmitted.

**(1) SEX :-**

Nearly 95% of HIV transmission is through unprotected sex. Unprotected sexual contact with an infected partner let it be vaginal, oral, or anal is the most common method of transmission. An infected person should tell any prospective sexual partner about the HIV positive status. They should exchange body fluids during sexual activities Srilanka is a low prevalent country but at high risk because of lower level condom use.

**(2) BLOOD :-**

Nearly 1% of the HIV transmission is through blood transfusion. HIV can be transmitted to aperson receiving blood or organs from an infected donor. By sharing un-sterilised needles or syringes with HIV positive person transmission of infection takes place. For example while using drugs or in a health care setting or through blood trans-mission with infected blood. In order to reduce this risk, blood bank and organ donor programmes should ex-ercise vigilant care in screening of donor's blood and tissues thoroghly.

**(3) MOTHER TO CHILD :-**

3% of HIV is transmitted through mother to child. HIV is transmitted either during pregnancy or birth and through breast feeding from a HIV positive mother to her baby. An estimated 1.6 million children are born to HIV infected women each year in low income countries. Infants are born to mothers with HIV who do not receive HIV therapy during pregnancy.

The 20th anniversary of World Aids Day was celebrated on 1st December 2008 all over the world, SriLanka has the good fortune to be a country with a low rate of HIV infection. The existence of high risk behaviours that can facilitate HIV transmission coupled with other socio economic and cultural factors that can fuel the epidemic. We should first create awareness among our people to eradicate the misunderstanding about this disease. Everyone should keep the following facts in mind and educate others also.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) HIV is not spread by casual contacts such as kissing touching or hugging on infected person.

(2) It does not spread either by air or water and food.

(3) Living with a HIV positive person does not transmit the disease.

(4) Sharing of clothes, cups, Plates and utensils will not transmit the infection.

(5) Shaking hands and sharing toilets, bathrooms too will have no adverse effect.

Therefore it has become necessary to educate our people on these facts. Not only the people but also our children in school, so that these messages would be taken to their parents and others. Children can play a pivotal role in this regard. In view of this Education International has targetted teachers in its "ONE HOUR ON AIDS" campaign in schools. Numerous companies setup AIDS programme in their work place to educate their staff as envisaged in the I LO convention. We should create and conduct awaraness programme among the general public about the mode of transmission, prevention, trearment care and support as done in some of the western countries.

The Red Ribbon is an international symbol of AIDS awareness. There fore all HIV infected mothers should receive counselling which includes provision of general information about meeting their own requirement and about the risks and benefits of various feeding options.

**(4) SYMPTOMS :-**

Symptoms can be evident only from acute HIV infected person and not other wise. Normally AIDS begin with HIV infection. People infected with HIV may have no symptoms for ten years or longer, but they can still transmit the infection to others during this symptom free period. Mean while if the infection is not defected the immune system gradually weakens and AIDS developed. Symptoms of AIDS are primarilly the result of infection that do not normally develop in individual with healthy immune system. People with AIDS have had their immune system depleted by HIV and are very susceptible. Human immune deficiency virus (HIV) causes AIDS. The virus attack the immune system and leaves the body vulnerable to a variety of life threatening infections and cancer.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(5) PREVENTION :-**

Protected sex with sexual partner or use of condom will be the wisest method. Reducing the practice of using injected drugs ; Avoid sharing needles or syringes, avoid contact with another person's blood are the vital remedial measures to eseape from this deadly disease World Bank funded the HIV - AIDS prevention programme in SriLanka from 2003 to 2007. Now World Bank has stopped its funding for this prevention programme. Now funds are received from the Global fund, but there are no allocation for media publicity programme So media should voluntarily work for prevention of HIV - AIDS.

**(6) AWARENESS PROGRAMME :-**

The 20th anniversary of World AIDS Day was celebrated on 1st December 2008 . The red ribbon is an international symbol of AIDS awareness that is worn by people all year round and particularly around World AIDS Day demonstrate care and concern about HIV and AIDS and to remind others of the need for their support and commitment. Working island wide to conduct training sessions, Peer education programme, Street drama, Condom promotion, Community services, Exhibiting posters, Distributing leaftets, Bill boards and Providing technical assistance are some of the ways of creating awareness. Infected women transmit the HIV virus to their babies during pregnancy, labour and delivery or through breast feeding. This often re-inforces stigma and discrimination against HIV positive women since the blame for infecting the child is solely put on the mother. but the mother is usually infected by the father of the child is commonly neglected. Therefore talking about parents to child transmission better recognises the roles and responsibilties of both parents in protecting themselves and their families against HIV infection. You must have hard hitting compaigns for HIV - AIDS. The role played by World Health Organization and UNICEF in this regard is highly commendable.

**(7) TREATMENT :-**

There is no cure for AIDS. However a variety of treatments are available that can improve the quality of life of those who have already developed symptoms. Antiretroviral therapy suppresses the replication of the HIV virus in the body. This is a highly effective Treatment and reduce the number of HIV particles in the blood stream. How ever HIV may become resistance to this treatment in patient who do not take this



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

medications on schedule every day. People should also be advised to go to STD (Sexually Transmitted Diseases) clinic located in twenty six places all over the island. Staff working in Health Care Centre should wear protective clothing such as masks and goggles. This is absolutely essential while treating injured positive HIV victims.

**(8) CONCLUSION :-**

President Grorge W.Bush's emergency plan for AIDS relief to combat global HIV - AIDS launched in 2003 remains the largest commitment by any nation to combat a single disease in human history. Over one hundred billion dollars had been allocated for this fund. I am sure that the incoming new president Barack Obama too would liberally allocate funds to this programme. In SriLanka. National AIDS Council was established under the chairmanship of the president His Excellency Mahinda Rajapakse and necessary funds too had been allocated. This council has taken action to sign a MOU with Clinton Foundation to fight against the HIV - AIDS in SriLanka. In the meantime we must also remind ourselves how much hardwork lies ahead. Therefore let all of us keep this in our mind, share our hope for those living with HIV and renew our commitment to combat this terrible pandemic in SriLanka, and through out the world, as discovery of a vaccine against HIV remain as distant as its today.

**Miss.Thuwaarahaa Thurairajah**
2010 Science
T/Methodist Girls' College, Trincomalee

கூடிய மழைவீழ்ச்சியுள்ள காலங்களில் இடிவிழும் கவனம் எனக் கூறுவர் இதன் விளக்கம் இடி என்பது இரும்புத்துண்டு போல விழும் பொருள் அல்ல. அதாவது மேகங்களில் சேர்ந்திருக்கும் ஆயிரம் கணக்கான கிலோவோல்ட் மின்சக்தி பூமியில் உயரமான பொருளுடன் கடத்தப்படுவதையே இது குறிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our Future Heroines



Welcoming New Buds



Children's Day



Educational Tour



Drama



Exhibition



Keep your body healthy

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்ச்சிமிக்க தேசத்தைக் கட்டி எழுப்புவோம்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொட்டே மனித சமுதாயம் பல யுத்தங்களையும் இழப்புக்களையும் இன்னல்களையும் இவற்றுக்கு அப்பால் சமாதானத் தேடல்களையும் தீர்வுகளையும் கண்டு கொண்டமை சரித்திரச் சான்றுகளாகும். இனப்போர், எல்லைப்போர், மதப்போர், வர்க்கப்போர் என உலகில் போர்கள் தொடர்கின்றன. ஆயினும் இதற்கு உரித்தான நீண்ட நிரந்தர சமாதானத் தீர்வு எனும் அம்சம் அடியோடு அறுத்தெறியப்படுவதே துரதிஸ்டவசம் எனலாம். இதற்குள் எமது இலங்கைத் திருநாடும் உள்வாங்கப் பட்டிருந்தமை வேதனையே!

உலகம் எம்மை இன்று உற்று நோக்கிக் கொண்டிருக்கிறது. இனியாவது சண்டையில்லாத எழுச்சிமிக்க தேசத்தைக் காணமுடியும் என அனைத்து உலக நாடுகளும் உற்று நோக்கிக் கொண்டிருக்கின்றன. எதிர்காலச் சந்ததியின் பின் எதிர்பார்ப்பும் அதுவே. மகிழ்ச்சி மிக்க தேசத்தில் கால்பதித்து நடமாடும் காலம் வராதா என்று கேள்வி எழுப்பியவர்கள். இவ்வாறான அவர்களின் கேள்விகள் எம் மனசாட்சியை மண்டியிட வைப்பதைப்போல் இருக்கிறது எனலாம். சாதியும், சமூக ஏற்றத்தாழ்வு தீண்டத்........... என்ற வட்டத்தை எமது தேசம் உடைத்தெறிந்து வெளியே வரும் வேளையில் எம் கொள்கைக்கும் எதிர்பார்ப்பிற்கும் அவாவுக்கும் மாறாகப் போர் எனும் கொடிய நோய் எம்மை ஆக்கிரமித்துப் புற்று நோய் போன்று மெல்ல மெல்ல எமது தேசத்தை அழித்துக் கொண்டிருந்த யுத்தம் தற்போது ஏதோ ஒரு வகையான முடிவை எட்டியிருக்கிறது. புற்றில் இருந்து பறக்க எத்தனிக்கும் ஈசலின் சிறகு உதிர்ந்தது போலவே எமது தேசமும் இருந்த காலம் மாறி தற்போது தான் போர் அற்ற தேசம் என அயல்நாடுகள் வாரி வாரி உதவியினைச் செய்து கொண்டிருக்கின்றன. இதுவே எமது நாட்டின் எழுச்சிமிக்க வளர்ச்சி எனலாம்.

ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதினான்காம் ஆண்டு தொடக்கம் ஆயிரத்து தொளாயிரத்து பதினெட்டாம் ஆண்டு வரை நிகழ்ந்த முதலாம் உலக மகா யுத்தமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரண்பாடுகளுக்கு வித்திட்ட முதலாவது நவீனத்துவ நிகழ்வாக வரலாற்றில் பதிவாகிவிட்டது. எந்தவொரு நாட்டிலும் தம்வலிமையை விலை பேசுகின்ற போது அங்கு போர் வெடிக்கின்றது. இதனாலே ஒரு நாட்டில் அபிவிருத்தியில் வீழ்ச்சிநிலை, இனங்களுக்கிடையே குரோதம் வளர்க்கப்படுகிறது. முள்ளை முள்ளால்தான் எடுக்கவேண்டும் என்பதையே பலபேரும் கூறிக் கூறியே நாட்டை யுத்த வெள்ளத்திற்குள் தள்ளி இருந்தனர். ஏதும் அறியாத நிராயுத பாணிகளே மக்களுக்குத் தேவையாக இருந்தது. யுத்தமற்ற தேசமே அந்த அவா தற்போது ஓரளவு நிறைவேற்றப்பட்டிருந்தது என்பதை நினைக்கும் போது மகிழ்வாக இருந்தாலும் இன்னும் மக்கள் படும் அவலங்களைப் பார்க்கும் போதுதான் ஒரு பக்கம் வேதனையாகவும் இருக்கிறது. அதுவும் நாளடைவில் மாறுகின்ற நிலைதான் எனும் போது மகிழ்ச்சிமிக்க தேசமாக எமது இலங்கையும் நிகழும் என்று கூறுவது ஐயப்பாடற்ற கருத்தே ஆகும்.

பொதுவாக முரண்பாடுகள் முற்றுகின்ற போதே யுத்தம் வெடிக்கிறது. அங்கே கொலைகள் இடம் பெறுகின்றன. இது உலக அரங்கில் சர்வசாதாரண வடிவமாகியும் விட்டது. கடந்த காலங்களில் எமது நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலையில் இருந்து இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஏற்பட்ட சமாதான நிலை எம்மை அபிவிருத்தியில், கல்வியில், பொருளாதாரத்தில் உயர்த்தியது. எல்லோரும் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். அவ்வாறான ஓர் சூழ்நிலையில் தான் எதிர்கால நல்வாழ்வைப் பற்றியே எல்லோரும் சிந்தித்தோம். ஆனால் அமைதிக்குப் பின் ஏற்பட்ட புயல் போன்று நிலமை தலைகீழ் ஆனது இம்முரண்பாடுகள் மெல்ல மெல்ல முந்தி ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களின் உயிர்களையும் காவெடுத்தது. கிணறு வெட்டப் பூதம் வந்த கதையாகிப் போன எமது நாட்டை நினைத்து ஏன் இந்தக் கொடுமை என்று நிலை தடுமாறினோம். தவித்துக் கொண்டு கல்வியும், எம் எதிர்காலமும் கற்பனையிலே முடிந்தது. இது ஒருபுறம் இருந்தாலும் ஒரு சில நிமிடம் ஏற்பட்ட ஆழிப் பேரலையும் எம் மக்களை விட்டு வைக்கவில்லை. இவை எல்லாம் தற்போதய எமது நாட்டின் நிலையினைப் பார்க்கின்ற போது எல்லா இனமக்களின் மனதிலும் ஒரு இனம் புரியாத சந்தோஷமும் முயற்சியும் தோற்றம் பெற்றுள்ளது என்பது அவர்களின் முகத்தில் தெளிவாகின்றது.

ஒரு முடிவின் ஆரம்பம் அந்த முடிவை ஒத்ததாக இருப்பதில்லை எமது நாடும் கடந்த காலங்களில் தொடக்கமும் முடிவும் யுத்தத்தையே உணவாக உட்கொண்டுவந்தது. இதய சுத்தியுடனான அணுகு முறையிலேயே ஒரு நாட்டின் அமைதியும் தங்கியுள்ளது. சாண் ஏற முழம் சறுக்கினால் அது விழலுக்கிறைத்த நீராகி விடும். அப்படி ஒரு ஆபத்தான நிலையில் இருந்த எமது நாடு இன்று எல்லோரின் முகத்திலும் ஒரு பயம் அற்ற சிரிப்பு மலர்வதற்கு வழி வகுத்துச் சென்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மைப் போன்ற சாமானியர்கள் விரும்பும் அமைதியான நாட்டை எப்போது நாம் காணப்போகிறோம். எதிர்கால சந்ததியினர்கள் வாழ்வில் ஒளிமயமான எதிர்காலம் எப்போது துளிர்விடும் என அவ்வப்போது எல்லோரும் ஏங்கினோம். அந்த ஏக்கமும் வீண்போகவில்லை என்று தற்போதைய நிலை இருந்தாலும் இதே சுமுகத்துடன் எழிச்சி மிக்க நாடாக எமது இலங்கை எப்போதும் திகழ வேண்டும் என்பதே அனைவரினதும் அவா. என்பது மட்டுமல்ல அதுவே எம் நாட்டின் கனவும் எனலாம்.

கொலைக் கலாச்சாரம் எந்த நாட்டில் இருந்தாலும் அதை வேரோடு சாய்த்தல் வேண்டும். மனிதனுக்கு மனிதன் அஞ்சினால் அவர்கள் இருவருமே மிருகமாகின்றனர் என்றுதான் அர்த்தம். வறுமையற்ற வாழ்க்கையை ஆரம்பித்து, கல்வியில் அபிவிருத்திகள் பொருளாதாரத்தில் உயர்வு நிலை பெற்று குடும்ப உறவுகள் தமக்குள்ளும் பிற இனத்தினருடனும் அந்நியோன்யமாக புரிந்துணர்வுடன் வாழவேண்டும். நான் பெரிது நீ பெரிது என்று வாழாது நாடு பெரிது என வாழ்தல் சிறப்புடையது. இத்தகைய சீரும் சிறப்புமிகு செங்கோல் நிலை நாட்டப்படுகின்ற தேசத்தைக் கட்டி எழுப்பி அதை எதிர்கால சந்ததியினரின் கையில் குரோதமற்ற, பகைமையற்ற தேசமாக கையளித்தால் எம்மைப் போன்ற எதிரிகள் இருகரம் கூப்பி வணங்கி அத்தேசத்தை அடுத்த சந்ததிக்கு இரட்டிப்புச் சந்தோஷமாக்கி வழங்குவர்.

**சாருஜா சந்திரகுமார்**
**தரம் - 9B**

உங்களுக்காகப் பேசுவது, உங்கள் செய்திகளுக்குப் பொறுப்பேற்றுக் கொள்வது, விமர்சனத்தைச் சரியாக கையாள்வது, விரும்பும் போது 'வேண்டாம்' என்று தயங்காமல் சொல்வது, மற்றவர் மீது மரியாதை காட்டுவது, இவையெல்லாம் உங்கள் தொடர்பு கொள்ளுதல் திறனை அற்புதமாக மேம்படுத்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்

ஐயிரண்டு திங்கள் என்னைச் சுமந்தாய்
அளவில்லாத் துன்பமதை அனுபவித்தாய்
ஊனை உறக்கத்தை நீ மறந்தாய்
உடல் நொந்து எந்தனை நீ ஈன்றெடுத்தாய்

பாலுடனே பண்பினையும் பருக வைத்தாய்
பார் போற்ற என்னை நீ படிக்க வைத்தாய்
கால் கடுக்கப் பலதூரம் நீ நடந்தாய்
கடுகளவு தூக்கத்தையும் நீ மறந்தாய்

துன்பமே நெருங்கிவிட என்னைக் காத்தாய்
துயர் ஏதும் வருத்தாது பார்த்திருந்தாய்
என்றுமே புகழோடு வாழ வழி செய்தாய்
ஏமாற்றுலகிதெனப் புரிய வைத்தாய்

பிரியமுடன் உறவுகளை நீ நேசித்தாய்
பிரிவில்லா நட்புகளை நீ யாசித்தாய்
பெரியவனாய் ஆக்கிவிட நீ யோசித்தாய்
பெருமையுடன் வாழ்ந்துவிட நீ பூசித்தாய்

தன்னிகரின்றியே நீ உருவமைத்தாய்
தயக்கமின்றி என்னையுமே வாழவைத்தாய்
என்னகத்தில் அழியாத இடம்பிடித்தாய்
என்றுமே நான் மறவேன் என் அன்புத்தாய்.

தனுஷாலினி கந்தசாமி
2009 கலைப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் வளமும் வணிக முக்கியத்துவமும்

## அறிமுகம்

தகவல் இன்று எல்லாக் கருமங்களிலும் செல்வாக்குச் செலுத்தும் அத்தியாவசிய வளங்களில் ஒன்றாக மாறியுள்ளது. வணிகம் அரசு அரசல்லாத நிறுவனங்கள் ஆகிய எல்லாவற்றின் கருமங்களையும் சிறப்பாக நிறைவேற்றுவதற்குத் தகவல் பயன்படுத்தப்படும். எல்லோரும் ஒவ்வொரு நாளும் ஆரம்பம் தொடங்கி முடியும் வரை தகவல் பரிமாற்றம் செய்கின்றனர். இத்தகவல்கள் அவரது நடத்தையைப் பாதிக்கிறது. அந்நாளுக்குள் முடிக்கவேண்டிய பல கருமங்களில் எதனை முன்னால் செய்வது எதனைப் பின்போடுவது என்னும் பல்வேறு மாற்றீடுகளிலான தெரிவுக்கு தகவல்களே அவர்களுக்குப் பயன்படுகின்றன. பல்வேறு அமைப்புக்களில் கருமமாற்றும் தனி நபர்களுக்குத் தேவையான பல்வேறு தகவல்கள் வெவ்வேறு தகவல் முறைகளால் வழங்கப்படுகின்றன. தனியாள் ஒருவர் எளிமையான தகவல் முறையைப் பயன்படுத்துவதையும் வெவ்வேறு அமைப்புக்கள் மிகச்சிக்கலானதும் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டதுமான தகவல் முறைகளைப் பின்பற்றுகின்றன.

அண்மைக்காலத்தில் தகவல் முறைகளின் சிக்கலான தன்மை அதிகரித்துள்ளமைக்கு சிலகாரணிகள் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. அதில் முதலாவதாக உலகப் பொருளாதார பூகோளமயமாதலும், இரண்டாவதாக விவசாய, கைத்தொழில் பொருளாதாரமும், மூன்றாவதாக சமூகமும் அறிவு தகவல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட சேவைப் பொருளாதாரமாக 'மாற்றமடைந்தமை அதிகாரப்பரவலாக்கம் நெகிழ்ச்சித் தன்மை, ஒத்துழைத்துத் தீர்மானித்தல் ஆகிய எண்ணக்கருக்களை அடிப்படையாகக் கொண்ட நிறுவனமும் என்பன விளங்குகின்றது.

## அறிவுச்சமூகம்:

நவீன சமூகம் அறிவை அடிபபடையாகக் கொண்டமைந்ததாகும். அறிவு உருவாக்கமும் விரிவும் தகவல் மூலமாகவே நிகழ்கிறது புதிய அறிவை உருவாக்கவும், விருத்தியடையச் செய்யவும் தகவல் தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்ட தகவல் முறை கூடிய பங்களிப்புச் செய்கின்றது. தகவல் தொழில்நுட்பத்தின் புதிய போக்குகள் கணினியைப் பயன்படுத்தும் தொடர்பாடலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்ரநெற்றும், மின்னஞ்சலும் தொடர்பாடலை நிகழ்த்துவதற்கு மட்டுமன்றி இலத்திரனியல் வர்த்தகம் மூலமாக வணிகக் கருமங்களை நிறைவேற்றுவதற்கு அரசு, அரசல்லாத நிறுவனங்கள் பெருமளவுக்கு உதவுகிறது. தகவல் பயன்பாட்டுக்காக ஆரம்ப காலத்தில் தகவல் சேகரித்தல் அறிக்கையிடல், பகுப்பாய்தல், அவற்றைப் பயன்பாட்டுக்கு ஏற்றமுறையில் தயார்செய்தல் போன்ற பல்வேறு கருமங்களும் மானிடக்கை முறையினால் (Mannual Systems) நிகழ்த்தப்பட்டன. பின்னர் இந்த மானிடக்கை முறை இயந்திர உபாயமுறை, இலத்திரனியல் உபாயமுறைக்கு மாற்றம் பெற்றுள்ளது. இலத்திரனியல் உபாயமுறையில் கணினிப் பயன்பாடு பெருமளவில் இடம்பெறுகிறது. அந்தந்த நிறுவனத்தின் தேவையைப் பொறுத்து பல்வேறு பயன்பாடுகளுக்கு கணினி உபயோகிக்கப் படுகிறது.

உதாரணமாக சொல் நிரற்படுத்தல், பல்வேறு பகுப்பாய்வு முறை கணியமாதிரி தயாரித்தல், கணக்கறிக்கை தயாரித்தல், பல்வேறு கருமங்களுக்குத் தரவு தயாரித்தல் அட்டவணை, வரைபு, வடிவில் தகவல் சமர்ப்பித்தல் என்பவற்றைக் குறிப்பிடலாம். அத்தோடு வணிகத்திற்கான அண்மைக்காலத்தில் மிகவும் அதிகமாகப் பயன்படுத்தப்படும் இலத்திரனியல் தொடர்பாடல் இன்ரநெட் பயன்பாடும், மின்னஞ்சல் என்னும் இத்தொழில்நுட்பம் கண்டுபிடிக்கப்பட்டதுடன் பல்வேறு தொடர்பாடல் முறைகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

தொலைபேசி, கணினி தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில் உபாயமுறை அவற்றின் நெகிழ்வு ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டு மிகச் செயற்றிறனுடைய தகவல் தொடர்பாடல் முறை உருவாகியுள்ளது. மின்னஞ்சல் இன்ரநெற் இலத்திரனியல் தரவு இடைமாற்றம் போன்ற இலத்திரனியல் தொடர்பாடல் முறைகள் பல பயன்படுத்தப்படுகின்றன.

**மின்னஞ்சல்**

கடதாசிப் பயன்பாட்டிலிருந்து முழுமையாக விலகி இலத்திரனியல் முறைப் பயன்பாட்டுடன் தகவல் பரிமாற்றம் செய்யும் இம்முறையில் சாதாரண கணினிக்குத் தகவல் அல்லது செய்தி உட்பாயவும், வெளிப்பாயவும் இலத்திரனியல் உதவுகிறது.

**இதில் காணப்படும் முக்கியமான பண்புகள்.**

- தகவல்களை உடனே பரிமாற்றிக் கொள்ள முடியும்
- உலகில் எந்த இடத்திற்கும் தகவல்களை அனுப்பமுடிதல்
- பெருந்தொகையான செய்திகளையும் ஒரே தடவையில் அனுப்புதல்
- தகவல்களின் இரகசியத்தன்மையை பாதுகாத்தல்
- இரகசியச்சொல் போன்ற பாதுகாப்பு முறைகளைப் பயன்படுத்தல் மூலமாக தகவல்களைப் பாதுகாத்துக் கொள்ள முடிதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வலையமைப்பு**

கணினி களஞ்சியப்படுத்தல், உபாயமுறை பதச்செயற்பாடு, அச்சு இயந்திரம் தொலைபேசி முறை ஆகிய அங்கங்கள் எல்லாம் ஒன்றிணைவதால் வலையமைப்பு உருவாகிறது. வலையமைப்பில் மிகவும் எளிமையான சந்தர்ப்பம் LAN என அழைக்கப்படும். வரையறுக்கப்பட்ட பிரதேசத்திற்குள் பயன்படுத்தப்படும் கணினிகள் இலத்திரனியல் உபாயமுறையில் இணைக்கப்பட்டு தகவல் பரிமாற வாய்ப்பு ஏற்படுத்தும் வலையமைப்பு Local Area Network என அழைக்கப்படும். மிகவும் பரந்த அளவான பூகோளப் பிரதேசத்தில் அமைந்த கணினிகள் இலத்திரனியல் உபாயமுறையில் கீழ் இணைக்கப்பட்டு தகவல் பரிமாற்றமுறை Wide Area Network என அழைக்கப்படும் WAN மூலம் ஒரே தகவல் தளம் போன்று பூகோள ரீதியாக மிகப்பரந்து காணப்படும் தனிநபர்களும் குழுக்களும் பயன்படுத்த முடியும்.

வங்கிக் கூட்டமொன்றில் அமைந்துள்ள எல்லாக் கணினிகளும் ஒன்றிணைக்கப்பட்டு LAN உருவாக்கப்படும். அந்த வங்கியே தனது கிளைகளுடன் ஏனைய நிறுவனங்களுடன் கணினிகளால் WAN இணைக்கப்பட்டு உருவாக்கப்படும்.

**இன்ரநெற்**

அகிலத் தகவல் வலையமைப்பு போன்ற சர்வதேச வலையமைப்பின் வலையமைப்பு இணையம் எனவும் காட்டமுடியும். அகிலத்தகவல் வலையமைப்பின் மூலமாக ஒலி, ஒளியுடன் கூடிய தகவல்களை பெறமுடிதல் அதன் சிறப்பு அனுகூலமாகும். ஒரு தனியார் Modam உடன் கூடிய கணினியுடன் தகவல் பங்களிப்புச் சேவைக்கு கட்டணமொன்றைச் செலுத்தி இன்ரநெற் வசதியைப் பெற்றுக் கொள்ளமுடியும். இதன் மூலமாக மிகவும் பரந்த தளத்தில் விரிவாகியுள்ள இடங்களிலிருந்து தேவையின் போது பல்வேறு தகவல்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

**ஒலி அஞ்சல்**

ஒலி அஞ்சல் பெட்டியில் தனி நபர்களுடைய செய்தியை உட்செலுத்தியுள்ள போது தொடர்பு கொள்ள வேண்டியவர் தொலைபேசியினூடாக பின்னர் செய்தியைப் பெற்றுக்கொள்ளக் கூடிய தன்னியக்க முறை இதுவாகும்.

**இலத்திரனியல் தொடர்பு உரையாடல்**

இந்த உபாயமுறையில் பலதரப்பட்டவர்கள் ஒரே நேரத்தில் தொடர்பு கொண்டு உரையாடல் நிகழ்த்தவும் தகவல் பரிமாறிக் கொள்ளவும் முடியும். அதற்காக அவர்கள் தனிப்படத் தொடர்பு கொள்ள வேண்டிய தேவையில்லை. குறிப்பிட்ட நபர்கள் ஒரு நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களிலிருந்து கொண்டு அல்லது வெளிநாடுகளிலிருந்து கொண்டு இந்த முறையைப் பயன்படுத்தி உரையாடல் நடாத்தித் தகவல் பரிமாறிக் கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொலைப்பதிவு**

வணிக ஆவணமொன்றின் முறைப்படியான பிரதியை உடனடியாக ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அனுப்பக்கூடிய முறையாகும். இது இரு தூர இடங்களுக்கிடையில் நடைபெறும் நிழற்படப்பிரதி எனவும் காட்டமுடியும். இது நம்பகரமாக விரைவான முறையாக வணிகத்துறையில் மிக அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றது. இப்பொழுது இச்சேவை கணினியைப் பயன்படுத்தி மிகச் சிறப்பாக நிகழ்த்தப்படுகிறது.

**இலத்திரனியல் வர்த்தகம்**

இலத்திரனியல் பாதையைப் பயன்படுத்திச் செய்யப்படும் வர்த்தகம் இலத்திரனியல் வர்த்தகம் எனப்படும். அபிவிருத்தியடைந்த நாடுகளில் இம்முறை பிரபல்யமடைந்துள்ளது. இதன் மூலமாக நுகர்வோருக்கு மிகக் குறைந்த விலையில் பண்டங்கள், சேவைகளை வழங்கமுடியும். உள்நாட்டிலுள்ள நுகர்வோருடைய தேவைகளையும் பூர்த்தி செய்ய முடியும். இலத்திரனியல் வர்த்தகம் உருவாகியதும் மற்றநாடுகளில் பிரவேசித்து வணிகக் கருமங்களை ஆற்றுவதற்கு வணிகர்களுக்கிருந்த பல தடைகள் நீங்கியுள்ளன.

எனவே உலகமயமாதலூடாகவும் தகவல் வளங்கள் போன்றவற்றின் மூலமும் நாடு முன்னேறும் என்பதில் ஐயமில்லை.

**டிசானி கிரிதரன்**
2011
வர்த்தகப்பிரிவு

நீ அறிந்தவனாக இருந்து கொள், அல்லது அறிவைத் தேடிப்படிப்பவனாக இருந்து கொள். அல்லது சொல்வதைக் கேட்பவனாக இருந்து கொள். ஆனால் எதையும் அறியாதவனாக இராதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ENJOYING THE ACTIVITIES




Ready to cook




We are the Scientists




Stepping into globalized world




Gift of God




Keep your body fit



College Band



Enjoying Art



Bank Unit

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் ஆசிரியர்

எங்கள் வகுப்பு ஆசிரியர்
என்றும் அன்பு நிறைந்தவர்
பாடங்கள் சொல்லித் தரும்
பக்குவம் மிக்க ஆசிரியர்

அறிவுரைகள் பல சொல்லிடும்
அக்கறை நிறைந்த ஆசிரியர்
சுதந்திரம் எமக்குத் தந்து
சுயமாகக் கற்கக் தூண்டிடுவார்.

தவறு செய்தால் வார்த்தையினால்
தயவாய் என்றும் திருத்திடுவார்
உயர்ந்தோர் தாழ்ந்தோர் பேதமின்றி
உணர்வுடன் என்றும் போதிப்பார்.

நல்ல நல்ல கதைகளை
நடித்துக் காட்டிக் கூறிடுவார்
இனிய புதிய பாடல்களை
அசைவுடன் எமக்கு இசைத்திடுவார்.

**சப்திக்கா பிரியதர்சினி ஜீவராஜ்**
**தரம் - 5**

# அன்பிற்கு உண்டோ அடைக்குந்தாழ்

பத்து மாதம் சுமந்தவள் நம் அன்னை
பாலூட்டி வளர்த்தவள் நம் அன்னை
தேன் போல அன்பூட்டியவள் அன்னை
தேசம் புகழ வைப்பவள் அன்னை

நாளும் பொழுதும் வணங்கிடுவோம்
- தாயை
நல்ல வண்ணம் காத்திடுவோம்.
பாலும் பழமும் தேவையில்லை – அம்மா
பக்கத்தில் என்றும் நீ வேண்டும்.

இறைவனுக்குச் சமமான இனியவளை
இதயம் நிறைய வாழ்த்திடுவோம்
முயல்வோம் முயல்வோம் முயல்வோம்
- தாயை
களிப்புடன் வைக்க முயல்வோம்.

**சூரியஹாசினி கிங்ஸ்லி வீரரட்ண**
**தரம்-5**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Are You a Slave of the Cigarette?

Many thousands of people today are heavy smokers, not by choice, but because they have found no way of escape they are caught in the grip of habit developed during their teenage years when so many young people think it is "Smart" to smoke.

Why should we worry about smoking? For several reasons. Smoking is not merely an expensive luxury; it plays a definite part in lowering a person's resistance to disease. Heavy smokers die from five to ten years earlier than non-smokers. In most cases the trouble is due to important factor is cancer of the lung. A Person can save money by not smoking ; but far more consequential, he saves health and vitality.

The smokers don't stop the habit because they are addicted to nicotine, a powerful drug that is present in tobacco leaves. Some people seem to have little difficulty in giving up the habits, but most people have a real struggle. The majority continue to smoke because they get a temporary life from tobacco.

Strange that a few brown leaves rolled up small wrapper or packed down in a bowl of pipe should have such a profound effect on a person's life. It is a temporary way of escape from the strain of living amid constant tension. Smoking provides a quick wayof a dilemma. Drugs present in tobacco leaves give a temporary life. So they keep on smoking. Lighting one cigarette from the butt of another. Meanwhile the "weed" is slowly wrecking their health and shortening their lives.

When a person stops smoking his digestion improves, his blood pressure returns to normal, the quality of the blood it self improves and his heart works more efficiently. But this is not all ; The person who gives up smoking does something really worthwhile for his future health. He has less chances of developing ulcers of the stomach, and he is less susceptible to heart disease during the productive year of his life. He will also have less trouble with his nose and throat.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Actually there are eighteen different poisons in a cigarette. Some of these attack the delicate membrances of the wind pipes. Other enter the blood stream and interfere with its normal circulation throughout the body. But two most important are the tar , a carcinogenic or cancer producing substance and nicotine.

A Person can stop smoking , by stopping to do that whether you decide to stop for just an hour at a time during the first day, and two hours the next and three hours the next day , or whether you plan to stop altogether is a personal matter which you alone must decide. Almost every smoker who genuinely wishes to stop will have a real struggle to face.

Once you have solved this problem you will be surprised at how much better you feel. Your heart will beat quietly, your nerves will be calm, and your pulse strong and steady , your breath will be sweet and clean , your muscles relaxed and your mind will be in control itself. This will give you new moral and intellectual power, for you are no longer enslaved by a filthy habit. You will enjoy better health , and under the blessings of God, you will know true statisfcation and happiness.

**Vathsala Thiyagarajah**
(2011) Bio

**மகிழ்ச்சி ......**

வெளியிலிருந்து

உள்வருவதல்ல

உன் உள்ளத்திலிருந்து

வெளிவருவதே

உண்மையான மகிழ்ச்சி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியே அழியாச் செல்வம்

இன்றைய விஞ்ஞான உலகில் ஒவ்வொரு நொடியையும் விந்தையுடன் எதிர்நோக்கி வாழ்ந்துகொண்டிருக்கும் நாம், சில நாளில் தோன்றிச் சில நாளில் இருந்து சிலநாளில் மறைந்து போவதாகிய மானிட உடம்பைப் பெற்றிருக்கிறோம். நம் உடம்பு அழிந்தாலும், நாம் உயிரோடு சேர்ந்து நம்மை ஏழு பிறப்புகளிலும் தொடர்ந்து வருவதாய் அமைந்த கல்விப் பெருஞ்செல்வத்தை (அழியாத) பெற முயற்சிக்க வேண்டும். பொதுவாக, நாம் பயன்படுத்தும் பொருட்களில் கூட நீண்டகாலப் பாவனைக்குதவக்கூடிய பொருட்களையே விலைகொடுத்து வாங்கிப் பயன்டுத்துகிறோம். உதாரணமாக, சில நாட்களில் கிழிந்து போகும் சீமைத்துணிகளை வாங்க விரும்புவோமா? பல நாட்கள் நீடித்திருக்கும் நாட்டுப்புடவை வாங்க விரும்புவோமா? அதைவிட, சிறிது கைதவறினாலும் நொறுங்கிப் போகும் மட்பாண்டங்களை வாங்க விரும்புவோமா? நீண்ட நாள் பாவனைக்குதவும் செப்புக்கலங்களை, பித்தளைக் கலங்களை வாங்க விரும்புவோமா? விலை அதிகமானாலும் செப்பு, பித்தளைக் கலங்களையே வாங்க விரும்புகிறோம். எனவே, அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களில் கூட நீண்டநாள் பாவனைக்குதவும் பொருட்களையே பயன்படுத்த விரும்புகிறோம். இதிலிருந்து விளங்குவது யாதெனில், அழியாச் செல்வத்தைப் பெறுவதே நம் அனைவரினதும் அவாவாக உள்ளது.

இவ்வெண்ணம் நம் எல்லோரிடத்திலும் இயற்கையாகவே இருந்தாலும் கூட, முத்துச் சிப்பியில் உள்ள முத்தின் ஒளியும், கூடை கவிழ்ந்த விளக்கின் ஒளியும் போல் நம்மை மூடிக்கொண்டிருக்கும் அறியாமை எனும் இருளில் அகப்பட்டவர்களாகிய நாம் அறிவை இழந்து, அழியாச் செல்வத்தை அடையமுயலாமல், நிலையின்றி அழிந்துபோகும் செல்வத்தையே அடைய வேண்டுமென நிலையாகப் பிழைபட எண்ணி வாழ்ந்து கொண்டிருக்கிறோமே தவிர, நம்மைப் படைத்த இறைவனையோ, அல்லது நல்ல நூல்களை ஓதி உணர விரும்புகிறோமா?

நாம் நிலையாக நினைத்த மாடமாளிகைகளும், ஆடை அணிகலன்களும் நாம் நினைத்தவாறு நிலையாக இருப்பவை தானா? இல்லை இல்லவே இல்லை. ஏனெனில், 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமிப் பேரலை அதனைத் தெளிவாகப் புலப்படுத்திவிட்டது. எத்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்களுடன், எத்தனை மாளிகைகள், நிலமட்டமாகத் துடைத் தெடுக்கப்பட்டன என்பதை நன்கு அறிவோம். இதிலிருந்து விளங்குவது யாதெனில், நாம் நிலையான செல்வங்களென எண்ணியிருக்கும் மாடமாளிகைகளும், தட்டுமுட்டுக்களும், ஆபரணங்களும் நிலையான செல்வங்கள் அல்ல. இதிலிருந்து வெள்ளத்தால் அழியாததாய், வெந்தழலால் வேகாததாய், அரசர்களால் கைப்பற்ற முடியாததாய், கொடுத்தாலும் நிறைவன்றிக் குறைவுறாததாய், கள்ளர்க்குப் பயப்படத்தேவையில்லாததாய் உள்ள கல்விச் செல்வத்தைப் பெறவே நாம் என்றும் முயற்சிக்க வேண்டும்.

கல்விச் செல்வமானது, வெள்ளத்தால் அழியாது, வெந்தழலால் வேகாது, செல்வத்தை வைத்திருப்போர் கள்வர்க்குப் பயந்து கொண்டிருப்பதைப்போல், கல்விச் செல்வத்தை வைத்திருப்போர் பயந்த வாழ்க்கை வாழத் தேவையில்லை கல்வியின் பெருமையை உணர்த்து முகமாகத் திருவள்ளுவர், .

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றுப்பிற" என்கிறார்.

அதாவது, ஒருவனுக்கு அழிவில்லாத சீரிய செல்வம் கல்வியே. ஏனையவை செல்வமல்ல என்கிறார்.

நமது ஔவைப்பிராட்டியாரும் மன்னனும் மாசறக் கற்றோனுஞ் சீர் தூக்கின் மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் - மன்னனுக்குத் தன்தேச மல்லாற் சிறப்பில்லை. கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு என்கிறார். அதாவது, மன்னனுக்கு தன்னுடைய தேசத்தைவிட்டு வெளியில் சிறப்பில்லை ஆனால், கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பென்கிறார்.

எனவே இத்தகைய சிறப்புடைய கல்விச் செல்வமே அழியாச் செல்வமென்பதை உணர்ந்து, அதைப் பெறுவதில் முயற்சியுடையவர்களாக இருப்பதுடன் அதைப் பெற்றவர்கள் ஒழுக்கத்துடனும், பிறருக்கு உதவிசெய்தும் வாழ வேண்டும். நாமும் பயன்பெற்றுப் பிறரையும் பயன்பெறச் செய்வதே நாம் பெற்ற கல்வியைப் பயன்படுத்தும் முறையாகும்.

**டிரோஷினி கிருஷ்ணன்**
**தரம் 10C**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது பாடசாலை

- எனது பாடசாலையின் பெயர் தி/மெதடிஸ்த மகளிர் கல்லூரி. இது திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ளது.
- இப் பாடசாலையில் ஆரம்பக்கல்வி முதல் உயர்தரம் வரை வகுப்புக்கள் காணப்படுகின்றன.
- எனது கல்லூரி அதிபர் திருமதி உ. ரோகினிதேவி ஜோதிநாதன் ஆவார்.
- எனது கல்லூரியில் 720ற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றனர். அத்துடன் 46 ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றனர்.
- எனது கல்லூரியில் கற்கும் மாணவர்கள் வலய மட்டப் போட்டிகள், மாகாணமட்டப் போட்டிகளில் பல வெற்றிகளைப் பெற்றுள்ளனர்.
- எனது பாடசாலைக்கு அருகில் தேவாலயம், நீதிமன்றம், வைத்தியசாலை போன்ற முக்கிய கட்டடங்கள் காணப்படுகின்றன.
- இங்கே அழகிய பூமரங்கள் விளையாட்டு முற்றம், மரங்கள் போன்றன மேலும் எமது கல்லூரியை அழகுபடுத்துகின்றன.
- நான் இக் கல்லூரியில் தரம் 4ல் கல்வி கற்கின்றேன். இக் கல்லூரியில் இருந்து கல்விகற்று வைத்தியராக வெளியேற வேண்டும் என்பது எனது ஆசை.
- எனது கல்லூரி எதிர்வரும் காலங்களில் பல்வேறு சாதனைகளைப் பெற வேண்டும் என்று கடவுளைப் பிரார்த்திக்கின்றேன்.

**வாழ்க கல்லூரி! வளர்க கல்லூரி புகழ்!! பரப்பு கல்லூரி!!!**

**சயனிக்கா ஸ்ரீகாந்த்**
**தரம் 4 B**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தட்சிண கைலாய புராணத்தில் ஈழம்

சிங்கைச் செகராசசேகரனால் பாடப்பெற்ற தட்சிண கைலாச புராணம் திருக்கோணேஸ்வரம் பற்றிய தலபுராணமாகும். சைவராசபண்டிதர் என்னும் குருவின் வேண்டுகோளுக்கு அமையச் செகராசசேகர மகாராசன் இதனைப் பாடினார். தலபுராணங்களில் இந்நூல் பழமையானவற்றுள் ஒன்று. திருக்கோணேஸ்வரம் பற்றிக் கிடைக்கின்ற இலங்கையில் எழுந்த நூல்களில் இதுவே புராதனமானது. ஆலயம் சிறப்புற்றிருந்த காலத்தில் இந்நூல் பாடப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மகா புராணங்களிலே கூறப்படும் இந்து சமய தத்துவங்களையும், சைவசமயக் கருத்துக்களையும், தலச்சிறப்பு பற்றிய செய்திகளையும் ஒருங்கிணைத்துக் கூறும் நூல் என்பதனால் சமய அறிவுக் களஞ்சியமாக இது விளங்குகிறது. கோணேசர் கல் வெட்டு, விரித்துரைக்கப்படுகின்றது. இந்நூலானது பாயிரமும், இலங்கை மண்டலச் சருக்கம், திருமலைச் சருக்கம், புவனோற்பத்திச் சருக்கம், திருநகர்ச்சருக்கம் என்னும் ஏழு சருக்கங்களும் கொண்டு அமையப் பெற்றுள்ளது.

இத்தல புராணத்தின் முதலாவது சருக்கமாகிய ஈழமண்டலச் சருக்கம் நாட்டுச் சிறப்பினை இலக்கிய ரசனையோடு சுவைநயம்படக் கூறகின்றது. ஈழம், இலங்கை என்னும் நாட்டுப் பெயர்களை ஆசியர் விளக்கும் வண்ணம் புதுமையானது "அமைத்த பொன்மலை ஆதலின் அப்பெயர் சமைத்த ஈழமிதனென்று தமிழியதால்" எனவரும் அடிகள் ஈழம் என்னும் பெயர் ஏற்படுவதற்கான காரணத்தை விளக்குகின்றன. பொன் மலையான மேருவின் சிகரங்களுள் ஒன்றான திரிகூடம் என்னும் தென் கைலாசம் அமைவுற்றதால் இலங்கை ஈழம் என்றாகியது.

"இமைத்த மாமணி எங்கும் இலங்கலால் இழைத்த நீர் வயலூரும் இலங்கையே"

எங்கும் பரந்து சிதறிக் காணப்படும் மணிகளின் ஒளியானது வயல்களிலெல்லாம் பரந்து பாய்கின்ற நீரிலே பிரகாசிக்கும் பான்மையால் இலங்கை என்னும் திருநாமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டிற்கு உரியதாகியது என்பர். ஈழம், இலங்குதல் என்னும் சொற்களின் பொருளை அடிப்படையாகக் கொண்டு நாட்டுப் பெயர்களை முதன் முதலாக விளக்கிய சிறப்பு செகராச சேகரனுக்கே உரியது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஈழம் மிகவும் சிறப்புற்று இருந்தது என்பதை இப்புராணத்தில் கிடைக்கும் தரவுகளில் இருந்து நாம் அறிய முடிகிறது. விலைபோய உயர்ந்த மாணிக்கக் கல்லின் விலை என்ன எனக் கேட்டால் அதற்குரிய ஒரு விலையினைப் பதிலாகச் சொல்லார். ஏனெனில், செம்மை சான்ற ஒளி வீசும் மாணிக்கற்களின் பெறுமானம் நாள்தோறும் உயர்ந்து செல்வதால் அன்றைக்கே அவற்றின் பெறுமான விலையைக் கூறுவர் என்பது,

"விற்ற மாமணிக்கு என்கொல் விலையெனச் சொற்றவர்க்கு ஓர் விலை எதிர் சொல்கலார்" எனும் பாடல் அடிகள் மூலம் விளக்கப்படுகிறது. ஈழத்தில் மாணிக்கக்கற்கள் நிறைந்து காணப்பட்டது. என்பது,

பேடுடன் இணைந்து தன்குஞ்சோடு வாழும் ஊர்க்குருவி : இரவு நேரத்தில் தான் வாழும் கூட்டிற்கு விளக்கு ஏற்றுவதற்கு, என்றும் ஒளிபரப்பிக் கொண்டிருக்கும் மாணிக்கற்களைத் தன்வாயினால் எடுத்துக் கொண்டு வந்து கூட்டின் உட்பக்கத்தே அழகு பொருந்தவைக்கும் என்பதிலிருந்து அழகாகச் சித்தரிக்கப்படுகிறது.

மேலும், இத் தட்சிண கைலாச புராணத்தில் கூறப்படும் ஈழத்தில் நானிலங்களும் செழிப்புற்று இருந்தமைக்கான தக்க சான்றுகள் உள்ளன.

"மேகநீர், அருவிப் பணைவிம்முற நாகமணி நல் விளக்கு ஏந்த வந்து தோகை ஆடச் சுரும்பு இசைபாடுவது ஆக ஓங்கல் அகலச் குறிஞ்சியே"

இப்பாடலின் மூலம் குறிஞ்சி நிலத்தின் சிறப்பு எவ்வாறு உள்ளதென்பது செழுமையும், இனிமையும், ஒற்றுமையும், அழகும் கொண்டதாக வர்ணிக்கப்படுகிறது.

அவ்வாறே முல்லை நிலத்தின் சிறப்பும் கூட இவ்வாறு விளக்கப்படுகிறது. மூங்கிலின் ஓசையுடன் சேர்ந்து இடைச்சியர் தயிர்கடையும் ஓசையும் இணைந்து புல்லாங்குழலின் நாதத்தைத் தருகிறது என முல்லை நிலத்தின் அழகு எடுத்தாளப்படுகிறது.

அத்தோடு நெய்தல் நிலவளம் ஏறு சங்கம் ஒலிப்பு, விலைத்தலைச் சோறு தாழை சொரிதரப், புன்னை கண் மாறில் காவணம் செய்ய மணம் செய்வார் வீறு கொண்டது வெண்திரை நெய்தலே எனும் பாடல் மூலம் விளக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் அத்தனை அழகையும் மொத்தம் சேர்த்ததுவாய் உள்ள ஈழமண்டலம் எவ்வாறு உள்ளதெனில் மலையும் மலைசார்ந்து வளஞ்சிறந்து விளங்கும் குறிஞ்சி நிலத்தை தன் தலையாகவும், கடலும் கடல் சார்ந்து வளங்கொழிக்கும் நெய்தல் நிலத்தைத் தன் அடிப்பாகமாகவும், மருத நிலத்தை இதயமாகவும் முல்லை நிலத்தை மற்றைய உறுப்புகளாகவும் கொண்டு நாட்டின் நான்கு திக்குகளிலும் பரவிப் பல வளங்கட்கு இடனாக இலங்கை அமைந்துள்ளதால் அனைத்துயிர்களும் நல்வாழ்வு பெறும் வளத்தினைப் பெற்றுள்ளது.

இங்கு வாழ்கின்ற மக்கள் எவ்வாறு தம்மை வளப்படுத்திக் கொள்கின்றனர் என ஆராய்கையிலே இத்தலபுராணத்தில் செகராசசேகர மகாராஜன் ஈழத்து மக்களைப் பற்றி மிகவும் சிறப்பாக குறிப்பிட்டிருப்பதைக் காணலாம். தெருக்கள் தோறும் முழுதுணர்ந்த சான்றோர் ஒன்றுகூடி உட்பொருள் ஆய்வு செய்கின்றனர் என்றும் நாட்டின் மூலை முடுக்கெல்லாம் வேதமோதும் ஒலி முழுங்குமென்றும் அவ் ஒலி போல் கடலும் முழங்குமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

புரவலர்கள் வேதம் கற்ற அந்தணர்களுக்கு யானைகளை அறக் கொடையாகக் கொடுப்பர் அனைவரிடமும் பேரறிவு நிறைந்துள்ளது. ஈழத்தில் இசைபாடுவோர் இறைவனின் புகழையே பாடுவர். அவ்வண்ணம் பாடும் அடியவர் பெருமையினை சொற்கள் கொண்டு விளக்குவது அரிது என்று தட்சண கைலாச புராணத்தில் செகராசசேகர மகாராஜன் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் வாழும் மக்கள் பசித்திருப்போர்க்கும் தாயன்புடன் உணவளிப்பார். எதனையும் பின்பு செய்வோம் என கூறும் வழக்கம் மக்களிடம் இல்லை. இதனை தட்சிண கைலாச புராணம் 'அன்னை போல் அளிப்பார் உண்டி அனைவரும் சுத்த உண்டி பின்னை என்னார்கள்' என்று கூறுகிறது.

பெண்கள் தம் கடமைகளில் தவறுவதில்லை. அவர்களிடம் ஒழுக்கக்கேடு இடம் பெறுவதில்லை.

தன்னைத்தான் உணர்ந்த சான்றோரின் இருக்கைகளே எங்கும் நிறைந்துள்ளன. அல்லாத இடங்களில் வளம் மிக்க இன்கலை உணர்ந்த புலவர்கள் இருக்கைகள் நிறைந்துள்ளன. இவை அனைத்திற்கும் அடிப்படையாக இருப்பது அண்ட மனைத்தும் நெறிப்படுத்தி ஆள்கின்ற இறைவனின் கோயிலில் நடைபெறும் பெருவிழாவே காரணமென மகாராஜன் கூறியுள்ளார். நாட்டுக் காவலில் ஈடுபட்டுள்ளோர் எங்கும் அமைதியும், இன்பமும் நிறைந்துள்ளதால் தம் பணி செய்யாது அவ்வேளையில் ஆடி மகிழ்வார். இதனைக் கண்டு மன்னனிடத்து வாழும் மக்களும் புகழ்ந்து வாழ்த்துவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் அமைந்துள்ள மலைகளிடத்தில் உள்ள மூங்கில்களும் கரும்புகளும் முற்றி விளைந்து முத்துக்களைச் சிந்திப் பரப்புகின்றன. மலைகளில் சந்தன மரங்கள் ஓங்கி வளர்ந்துள்ளன. அச்சந்தனச் சோலைகளில் சூல் கொண்ட முகில்கள் படிந்து நீர்வளம் சுரக்கின்றன. இதனால் நெல் வயல்களில் சாலி இன நெற் பயிர்கள் செழுமை பெற்று வளமூட்டுகின்றன. வயல் வரம்புகளில் கரும்புகள் செழுமை பெற்று உள்ளன. நீர்த்தடாகங்களில் உள்ள உயிரினங்கள் இன்னிசை எழுப்புகின்றன. நிலமெங்கும் மரகத நீல நிற மணிக்கற்கள் நிறைந்துள்ளன.

நீர்த்தடங்களில் நீலோற் பல மலர்கள் விரிந்து மணம் பரப்புகின்றன. நீர்த்தடங்களில் அன்னங்கள் நீந்தி விளையாடுகின்றன. கரைகளில் கவரிமான்கள் துள்ளி விளையாடுகின்றன.

ஈழத்தின் கடற்கரையில் பொன் கொளிக்கின்றது. இவை அனைத்தும் நிரைபட ஒழுங்கமைந்திருப்பதற்குச் சாலி என்று கூறப்படும் அருந்ததி போன்ற கற்பின் மகளிர் நாட்டகத்தில் நிறைந்திருப்பதே காரணம் எனக் கூறப்பட்டுள்ளது.

" ஈழமும் பளிங்கு நேரும் எறி
நவ மணியும் எல்லாம்
தாழ மண்மடந்தை நல்கும்
தரளமும் சங்கும் துப்பும்
ஆழி என்று ஒரு நீர்த் தெய்வம்
அளித்திடு வரைமீது உள்ள
வேழம் என்ற அனேகமேகம்
வெளிரும் முத்து உகுக்கும் அம்மா"

என்பதிலிருந்து ஈழத்தின் சிறப்பைத் தட்சிண கைலாச புராணத்தில் நாம் கண்டு இன்புறக் கூடியதாக உள்ளது.

**பிரியதர்ஷினி வின்சன்பீரிஸ்,**
**தரம் - II A**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BEST PERFORMANCE IN G.C.E.(O/L) & (A/L) EXAMINATION



2007 O/L
Miss. Inthuja Patkunanathan



2008 O/L
Miss. Vathsalakumary
Thiyagarajah



2007 A/L Arts
Miss. Dinesha Thevasagayam



2007 A/L Commerce
Miss. Dilaxshana Keerthidas



2007 A/L Science
Miss. Tharshika
Vathanakumar



2008 A/L Arts
Miss. Nagarani
Manogaralingam



2008 A/L Commerce
Miss. Dilani Thanaraj



2008 A/L Science
Miss. Fathima Nooha
Haliloor Rahuman

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியங்களும் மனித விழுமியங்களும்

"இறவாப் புகழுடைய புது நூல்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்" என்ற புரட்சிக் கவிஞன் பாரதியின் கவிக்கேற்ப காலமாற்றத்தோடு ஓட்டிய இலக்கியங்கள் படைக்கப்பட்டிருப்பது மனித இனத்தின் விழுமியங்களைக் கட்டிக் காப்பதில் முதுகெலும்பாக அமைந்துள்ளது என்பதில் அசைக்க முடியாத உண்மைகள் பலவுள்ளன. தமிழினத்தின் வரலாற்றில் எமக்குக் கிடைத்துள்ள காலத்தால் தொன்மை மிகு இலக்கியம் தொல்காப்பியம் முதல் சங்ககால இலக்கியங்களான எட்டுத் தொகை, பத்துப்பாட்டு போன்ற நூல்களும், தமிழ்மொழிக்கு மட்டுமல்லாது மனித வாழ்விற்கே இலக்கணம் கூறுவது யாமறிந்த உண்மை. பழந்தமிழ் இலக்கியங்கள் என்ற வரிசையில் ஐம்பெரும் காப்பியங்கள், சிறு காப்பியங்கள், இதிகாசங்கள் என்ற புனைகதை இலக்கியங்கள், சிறுகதைகள், நாவல்கள் புதுமைப்பித்தன் கவிதைகள் என்பன பட்டி தொட்டி எங்கணும் ஏதோ ஒரு வகையில் மனித விழுமியங்களான அன்பு, நேர்மை, தியாகம், நீதி, அறம், உண்மை, மன ஒருமைப்பாடு, மனித நேயம், கற்புநெறி, அடக்கம் போன்ற இன்னோரன்ன வாழ்க்கைப் பண்பியல் சார்ந்த விடையங்களைச் சமூகத்தின் உணர்வுகளாக வெளிப்படுத்தியுள்ளன என்பதில் எதுவித ஐயப்பாடும் இல்லை.

"மக்களின் நடத்தை முறைகளைக் கட்டுக்கோப்பான முறையில் செயற்படுத்துகின்ற தத்துவார்த்த நெறிமுறைகளே மனித விழுமியங்கள் ஆகும்." ஒரு இனச் சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளைத் தொகுத்து பொருள் சார் கூறுகள், அறிதல் சார் கூறுகள், நெறியியற் கூறுகள் என வகுத்துக் கொள்ள முடியும். இக் கூறுகள் யாவும் காலத்தின் கண்ணாடிகளான இலக்கியங்கள் மூலம் மக்களின் வாழ்க்கையைத் திடப்படுத்தி வளப்படுத்தியுள்ளன. இதனால் தான் பழந்தமிழ் இலக்கியங்கள் முதல் இன்றைய நவீன இலக்கியங்கள் வரை வாழ்வின் மகத்தான நெறியியற் கூறுகள் என விதந்துரைக்கப்பட்டுள்ளன.

"கண்ணுடையார் என்போர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையார் கல்லாதவர்" என்பதை மக்கள் மத்தியில் புகுத்த விரும்பியவர் வள்ளுவப் பெருந்தகை. இதனால் எழுந்தது வள்ளுவம் உலகப் பொதுமறையான இந்நூல் இலக்கியங்கள் என்ற வகையில் தனித்துவம் வாய்ந்தது. அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால்களும் இணைந்து இழையோடி இருப்பது உலகப் பொதுமக்கள் அனைவரும் வையத்தில் வாழ்வாங்கு வாழவேண்டிய அனைத்து ஒழுக்க விழுமியங்களையும் உணர்த்துவதையே குறிக்கோளாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கின்றது. மனித வாழ்வில் மனிதன் உயர்வை வள்ளுவர் கூறுமிடத்து "குழவி பிணியின்றி வாழ்தல் இனிது.

மானம் போன பின் உயிர் வாழாமை முன்னினிது

என்பதற்கு இலக்கணம் வகுத்தாற் போல

மயிர் நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார்

உயிர் நீப்பர் மானம் வரின்"

என்று மானத்தின் சிறப்பை நயம்பட உரைப்பதில் இருந்து உலகப் பொது இலக்கியமான திருக்குறள் மனித வாழ்வின் உன்னதமான இலக்கணங்களைப் பறை சாற்றுவதைக் காணமுடிகின்றது. மனித வாழ்க்கையை அகிலமெங்கும் வளம்படுத்த வேண்டும் என்ற நோக்கில் பண்பாட்டு விழுமியங்களை அறநெறிகள் ஒழுக்கங்கள் பழக்கவழக்கங்கள்ள.

"காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்

அதனினூ உங்கில்லை உயிர்க்கு"

என்று இரக்கம் பண்பு கொண்டோரை உருவாக்கும் பெருமையை இக்குறள் வலியுறுத்துவது குறிப்பிடத்தக்கது. மானிட சமுதாயத்தில் அன்பும், அறிவும், நன்றியுணர்வும் மிளர வேண்டும் என்ற தூரநோக்கில்

"அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்

என்பும் உரியர் பிறர்க்கு"

என்று ஒரு அதிகாரத்தில் அன்பின் வலிமையை மக்களுக்குச் சிறப்புற விளக்கியுள்ளார்.

ஆலயந்த தொழுவது சாலவும் நன்று

இல்லறமல்லது நல்லறமன்று

என்பதை உணர்ந்து இல்லறத்தில் இனிதே வாழும் மக்கள் ஆலயங்களைப் பேணிச் சமுதாயத்தின் விழுமியங்களைக் கட்டிக் காக்க வேண்டும் என்று விளக்கியுள்ளார். உலக நெறியறிந்து ஒழுகக்கூடிய சமுதாயத்தை உருவாக்க ஒழுக்கத்தை வலியுறுத்தும் வள்ளுவர்.

ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்

உயிரினும் ஓம்பப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என நல்லொழுக்கத்தை உருவாக்குவதில் ஆழமான விழுமியக்கருத்துக்களை விதைத்துள்ளார்.

உலகம் போற்றும் உன்னத இதிகாசங்களான மகாபாரதமும், கம்பராமாயணமும் சிறந்த வாழ்வியல் இலக்கியங்களாகும் என்பதில் ஐயம் இல்லை. இராமாயணத்திலே இராம, இராவண யுத்தம் நிகழ்கிறது. ஒரு சந்தர்ப்பத்தில் இராமன் முன்னே இராவணன் கூனிக் குறுகி ஆயுதம் எதுவும் இன்றி நிராயுதபாணியாக நிற்கின்றான். அவ்வேளை இராமபிரான் "இன்று போய் போருக்கு நாளை வா" என்கிறார்..... காரணம் என்ன? யுத்த தர்மம் மேலோங்கி நிற்கின்றது.

இதற்கும் மேலாக இராமபிரான் காட்டில் பரதனைக் கண்டவேளை அவனைத் தழுவியதால் இராமன் மனம் கசிந்து உருகுகிறது. இவ்வாறு கண்ணீர் கசிந்து பரதனின் நீண்ட சடாமுடியே நனைகிறது. இங்கு பாசம், கருணை, அறப்பண்பு என்பன மக்களுக்குச் சுவையாகப் புலப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் மகாபாரத்திலே தருமரை ஒரு கணம் நோக்குவோமாயின் கொடுந்துன்பம் வந்தபோதும் உண்மையை வன்மையாகக் கைப்பற்றினான். "துரோணாச்சாரியாரைக் கொல்லத் தருமன் பொய் கூறினான்" என்பர் அறியாத மூடர்கள் மனைவி திரௌபதி நட்டநடு சபையில் மானபங்கப்படுத்தப்பட்ட போதும் வாய்மையைக் கைவிடவில்லை. சூதாடித் தன் இராச்சியத்தையே இழந்த போதும் இழிவுற்ற இன்னல்களை இன்னது என காட்ட முடியாத அளவு அனுபவித்த இராமன் புகழுடன் ஓர் இராச்சியத்தில் ஆட்சி செய்தான். இவையெல்லாம் உண்மையின் வலிமையை மக்களுக்குப் பறை சாற்றுகின்றன. "சத்தியம் ஏவஜயதே" என்கிறது. சமஸ்கிருத சுலோகம். வாழ்க்கையில் உண்மையே வெல்லும், உண்மைக்கு அழிவே இல்லை என்ற ஆழ்ந்த பொருள் பொதிந்துள்ள முறையில் கருத்துக்கள் எடுத்துரைக்கப்பட்டள்ளன. சத்திய வழியில் அகிம்சை என்னும் தத்துவத்தைப் பொறித்து அமைதியாக அறவழி நின்று வாய்மையுடன் போராடியது. அல்லவா? இவை யாவும் சத்திய போதனை என்ற இலக்கியத்தில் மிளிரும் உயரிய மனித விழுமியங்களே. வாழ்வில் சத்தியத்தைக் காப்பது என்பது வாழ்வின் அடிப்படை உண்மை என்பதைப் புரிய வைக்கின்றது.

வாழ்வில் வாய்மை ஓங்கி நின்றவன் யாருமல்ல அரிச்சந்திரனே. அதே வாய்மையால் செங்கோலைப் பிடிக்க வேண்டிய அவனது கரங்கள் செந்தீயில் பிணங்களைத் தீயில் தள்ளும் கோலைப் பிடிக்கச் செய்தது. ஆயினும் வாய்மையைப் போற்றிய முதன்மையானவன் ஆகின்றான்.

கவியுலகச் சக்கரவர்த்தி கம்பனும், புரட்சிக் கவிஞன் இளங்கோவும், மகாகவி சுப்பிரமணிய பாரதியும், பாமரமக்களின் இதயங்களை எட்டிப் பிடித்தவர்கள் எனின் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே"
உச்சி மீது வானிடிந்து வீழுகின்றபோதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே"

என்று சிங்கக் குரலில் கர்ஜித்து மக்கள் மனங்களில் திகிலைப் போக்கி அமைதியை நிலைநாட்டினார் பாரதியார்.

நிறைவாகத் திருக்குறள் முதல் உலகில் தோன்றிய புகழ் பெற்ற இதிகாசப் புராண இலக்கியங்கள், நவீன இலக்கியங்கள் அனைத்தும் மக்களின் குடும்ப வாழ்விலே இன்பமும் ஒழுக்கமும் நிலைப்பதற்கே அறநெறியும் அரசியலும் வேண்டி இருப்பதை மனித சமூகத்திற்கு எடுத்துக் காட்டுகின்றன. சமுதாயத்திற்காகத் தனது பாகத்தைத் தளராது தருவது மனிதனின் இறுதிக் குறிக்கோளாக இருக்க வேண்டும் எனப் பொய்யாமொழிப்புலவர் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றார்.

ஆண், பெண் பேதங்களும், ஜாதி மத பேதங்களும் மனிதனை மனிதன் புண்படுத்தும் கருவிகளே. இத்தகைய பிரிவினைகளைக் களைய வேண்டும் எனத் தீந்தமிழ்க்கவிஞர் பூண்ட சங்கற்பம் யாவும் ஏற்றத்தாழ்வற்ற நீதியான சமூகத்தைக் கட்டியெழுப்ப வழிகோலின.

"சாதிகள் இரண்டொழிய வேறில்லை"

என்ற பழந்தமிழ் இலக்கிய வாசகத்தை வேதமாகக் கொண்டு இலக்கியங்களில் எம்மனதைப் பறிகொடுத்து எமது தமிழினத்தின் கலைகளையும், கலாசார ஒழுக்க விழுமியங்களையும் கட்டிக்காத்தது தீந்தமிழ் என்று பெருமை கொள்வோமாக.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்
எத்திசைச் செல்லினும் அத்திசைச் சோறே"

**தர்மேகா ரவீந்திரன்**
தரம் 11

*If a drop of water isolates itself from the ocean. it not only forfeits the benefit of being a part of the vast ocean but also dries up in notime, losing its very existence, Likewise, a man asserting his Separate individuality apart from Divinity becomes finite and mortal, whereas if he remains as a part of the Divine, he regains his innate nature of being iffinite and immortal. Egos are different and numerous like bubbles. This self is one like the ocean.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BEST ACHIEVEMENT



Miss. Dilani Thanaraj
1st Place - Speech
National Level



Miss. Piriya Vincent Peries
1st Place - Speech
National Level
(Tamil Day - 2008)



Miss. P. Niroshini
1st Place - Essay
Provincial Level
Com - Sci Competition - 2007



Miss. Ketheeswary Kidnan
1st Place - Quiz
Provincial Level



Grade - 05 Scholarship



Children's Drama

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோரைப் பேணுவோம்

நமக்கு என்றும் இனியவர்கள் தாய் தந்தையரே
இவர்களை விடச் சிறந்தவர் எவரும் இவ்வுலகில் எமக்கில்லை

**அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்**
**தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை**
**தந்தை சொல்மிக்க மந்திரமில்லை**

என்னும் முதுமொழிகள் பெற்றோர் தம் சிறப்பினைப் பேசுகின்றன. நம் பெற்றோர்கள் நமக்குச் செய்த உதவியும் அவர்கள் காட்டும் அன்பும் அளவிடற்கரியன.

வாழ்நாழ் முழுவதும் நமது நலனுக்காகப் பாடுபட்ட பெற்றோர்களை நன்றியுடன் போற்றக்கடமைப்பட்டுள்ளோம். ''ஏவா மக்கள் மூவா மருந்து'' என்ற பொன்மொழிப்படி பெற்றோரின் குறிப்பறிந்து செயற்படுதல் எமது கடமை அத்துடன் அவர்களின் தேவையறிந்து வேண்டியவற்றை உதவிட வேண்டும்.

இன்றைய கால கட்டத்தில் பிள்ளைகள் தமது பெற்றோரை மறந்து வாழும் சூழ்நிலைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். இவ்விதம் நடந்து கொள்வது தவிர்க்கப்படல் வேண்டும். பிள்ளைகள் தமது கடமைகளை நன்கு உணர்ந்து செயல்பட வேண்டும்.

தாய் தந்தையரை விட மேலான தெய்வம் இல்லை என்பதை பிள்ளைகள் உணர வேண்டும். அதாவது ''தாய் பிச்சைக்குத் தெருவில் அலைய மகன் கும்பகோணத்தில் கோதானம் செய்தானாம்'' என நாட்டுப் புறங்களில் கூறுவது போன்ற செயல்கள் இடம் பெறக்கூடாது.

காலகாலமாகத் தாய் தந்தையரைப் போற்றி எழுதிய வரலாறுகள் பல உண்டு. அதாவது தந்தை சொற்படி காடேகினான் இராமன், தந்தையின் கருத்திற்கு இயைய இன்ப வாழ்வையே துறந்தான் பீஷ்மன். தாயின் சொல்லைக் கேட்டு அழியாப்புகழ் பெற்றார் மகாத்மாகாந்தி.

பெற்றோரைப் பேணிக் காக்கும் கடமை பிள்ளைகளுக்கு உண்டு இவர்கள் செய்த தியாகங்களை மறப்போமானால் ஒருபோதும் உய்வுபெற முடியாது. பெற்றோரைப் பேணி அவர்கள் மனம் நோகாது மகிழ்வுடன் வாழ்வதற்கு உதவுதலே பிள்ளைகளின் பெருங்கடனாகும்.

**ஆன்மெர்லின் கிங்ஸ்லி**
**தரம் - 3**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய ஒற்றுமையும் எதிர்காலமும்

எமது எதிர்காலம் மட்டுமல்லாது நாட்டின் எதிர்காலமும் நிலைபெற்று நிற்க சமூகத்தில் தேசிய ஒற்றுமை ஏற்பட வேண்டும். நாட்டில் தேசிய ஒற்றுமை நிலைபெற்றால் நாட்டிலுள்ள வீடு, பாடசாலை, கிராமம் என்று எல்லா நிலைகளிலும் தேசிய ஒற்றுமை பேணப்படும். எனவே சமூகத்திலிருக்கும் ஒவ்வொரு மனிதனும் தேசிய ஒற்றுமை எனும் இலட்சியத்தை முன்வைத்துச் செயற்படுதல் வேண்டும். ஒரு நாட்டின் தேசிய ஒற்றுமையே நாட்டின் பொருளாதாரம் அரசியல்நிலை என்பவற்றைத் தீர்மானிக்கும். தேசிய ஒற்றுமை பேணப்பட்டால் அது உலக ஒற்றுமைக்கு வழிவகுக்கும் எனலாம்.

எனவே ஒவ்வொரு மனிதனும் தனது எதிர்காலத்தை முன்நிறுத்தி தேசிய ஒற்றுமையை வளர்க்க வேண்டும். தேசிய ஒற்றுமை நிலை பெற்று விளங்கும் போது எமது எதிர்காலச் சமுதாயம் வளமாக வாழும். அதனால் தான் அரசாங்கம் தேசிய ஒற்றுமையை முன்னிறுத்தி பல்வேறு செயற்றிட்டங்களை மேற்கொள்கிறது.

இனிவரும் சமுதாயம் மேலும் விஞ்ஞான மயமாகப் போவதால் இப்பொழுதே நாட்டில் தேசிய ஒற்றுமையை பேணப்பட வேண்டும். சமூக, சமய ஒற்றுமையே தேசிய ஒற்றுமையை உருவாக்கும். பாடசாலை மாணவர்களின் ஊடாக இனங்கள் மதங்களிடையே பிரிவு இல்லாமல் யாவரும் சமமே என்ற ஒருமைப்பாட்டை உருவாக்க வேண்டும்.

இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்கள் ஆகவே, இளைஞர்களின் ஊடாகத் தேசிய ஒற்றுமைக்கான எண்ணக்கருவினை விதைக்க வேண்டும். மக்கள் ஒருமைப்பாட்டுடன் வாழ்ந்தால் பொருளாதாரம் மேம்படும். எனவே மாணவர்களாகிய நாமும் நாட்டின் தேசிய ஒற்றுமைக்கு உதவுவோம். இளம் சிறார்களாகிய நாங்களும் பாகுபாடின்றித் தேசிய ஒற்றுமைக்குப் பாடுபடுவோம்.

சஸ்பு புஸ்பராஜா
தரம் 5 "A"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Abraham Lincoln and the American Civil War

Abraham Lincoln was the 16th President of the United States. Abraham Lincoln was born on February 12, 1809, to Thomas Lincoln and Nancy Hanks two uneducated farmers. in southeast Hardin County, Kentucky. When Lincoln was nine his mother, then 34 years old, died of milk sickness, soon afterwards, his father remarried. Lincoln was affectionate toward his stepmother, whom he would call "Mother" for the rest of his life, but he was distant from his father.

Lincoln's formal education consisted of about 18 months of schooling, but he was largely self - educated and an avid reader. He was also a talented local wrestler and skilled with an axe. Lincoln avoided hunting and Fishing because he did not like killing animals, even for food. At 6 foot 4 inches, he was unusually tall, as well as strong.

On November 4, 1842 Lincoln married Mary Todd, daughter of a prominent slave - owning family from Kentucky. The couple had four sons. They are, Robert Todd Lincoln, Edward Baker Lincoln, William wallace Lincoln and Thomas "Tad" Lincoln.

Abraham Lincoln succesfully led the country through its greatest internal crisis, the American Civil War, preserving the union and ending slavery. As the war drawing to a close, Lincoln become the first American president to be assassinated. Before his election in 1860 as the first Republican president, Lincoln had been a lawyer, an Illinois state legislator, a member of united states House of Representatives, and twice an unsuccessful candidate for election to the Senate.

As an outspoken opponent of the expansion of slavery in the United States, Lincoln won the Republican Party nomination on November 6, 1860 and was elected president later that year. He was the first Republican president, winning entirely on the



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

strength of his support in the North. Lincoln was the first U.S President elected from Illinois . His tenure in office was occupied primarily with the defeat of the secessionist confederate states of America in the American Civil War. He introduced measures that resulted in the abolition of slavery, issuing his Emancipation Prociamation in 1863 and promoting the passage of the Thirteenth Amendment to the Constitution, which passed congress before Lincoln's death and was ratified by the states later in 1865.

Lincoln closely supervised the victorious effort, especially the selection of top generals, including Ulysses S.Grant. Historians have concluded that he handled the factions of the Republican Party Well, bringing leaders of each faction into his cabinet and forcing them to co-operate. Lincoln successfully defused the Trent Affair, a war scare with Britain in 1861. Under his leadership, the union took control of the border slave states at the start of the war. Additionally, he managed his own re election in the 1864 presidential election.

Opponents of the war (also know as "copperheads") criticized Lincoln for refusing to compromise on the slavery issue. Conversely, the Radical Republicans, an abolitionist faction of the Republican Party, criticized him for moving too slowly in abolishing slavery. Even with these road blocks, Lincoln successfully rallied public opinion through his rhetoric and speeches ; his Gettysburg Address is but one example of this. At the close of the war, Lincoln held a moderate view of Reconstruction, seeking to speedily reunite the nation through a policy of generous reconciliation, a position his successor in the white House, Andrew Jhonson, also took. Lincoln has been considered a martyr for the ideal of national unity and human rights. Lincoln has been consistently ranked by scholars as one of the greatest U.S Presidents.

The American Civil War (1861-1865), also known as the war between the states and several other names, was a civil war in the United States of America Eleven Southern Slave states declared their succession from the U.S and formed the Confederate states of America (the Confederacy). Led by lefferson Davis, they fought against the U.S federal governament, which was supported by all the free states and the five border slave states.

In the presidential election of 1860, the Republican Party, led by Abraham Lincoln, had campaigned against the expansion of slavery beyond the states in which it already existed. The Republican victory in that election resulted in seven southern states



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

declaring their succession from the union even before Lincoln took office on March 4. 1861. Both the outgoing and incoming U.S Administrations rejected succession. regarding it as rebellion.

Hostilities began on April 12, 1861 when Confederate forces attacked a U.S Military installation at Fort Sumter in South Carolina. Linclon responded by calling for a volunteer army from each state, leading to declarations of succession by four more southern slave states. Both sides raised armies as the union assumed control of the border states early in the war and established a naval blockade. In September 1862. Lincoln's Emancipation. Proclamation made ending slavery in the South a war goal. and dissuaded the British from intervening. Confederate commander Robert E.Lee won battles in the east. but in 1863 his northward was turned back at Gettysburg and, in the west, the union gained control of the Mississippi River at the Battle of Vicksburg, there by splitting the confederacy . Long - term Union advantages in men and material were realized in 1864 when Ulysses S.Grant fought battles of attrition against Lee as Union general William Sherman. captured Atlants. Georgia and marched to the sea. Confederate resistance collapsed after Lee surrendered to Grant at Appomattox Court House on April 9. 1865.

The American Civil war was the deadliest in American history. causing 620,000 soldier deaths and an undetermined number of civilian casualties. ending slavery in the United states, restoring the Union. and strengthening the role of the federal government. The Social, Political, Economic and racial issues of the war decisively shaped the reconstruction era that lasted to 1877. and continued into the 21st Century.

"Lincoln was the only President of United States to hold a Patent"

*** Thank You ***

**Miss. Kamaldeen Shinas,**
2010 Arts.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Genetic Engineering - பிறப்புரிமைப் பொறியியல்

சகல அங்கிகளிலும் பிறப்புரிமைத் தகவலுக்குரிய முக்கோவைகளும் அவை குறிப்படுத்தும் அமினோ அமிலங்களும் ஒரே மாதிரியானவை. இதனால் முக்கோவைகள் அகிலத்துக்குரியவை (Universe) எனப்படும். அவ்வாறே சகல அங்கிகளிலும் புரதத் தொகுப்புக்குரிய பொறிமுறை ஒரே மாதிரியானவை. எனவே ஒரு அங்கியின் பரம்பரை அலகினை/ DNA பாகத்தை வேறு ஒரு அங்கியின் கலத்தினுள் புகுத்தினாலும் அது குறிப்படுத்தும் புரதம் ஒரே மாதிரியானதாகவே இருக்கும்.

இந்தத் தத்துவத்தின் அடிப்படையில் ஒரு கலத்திலிருந்து வேறாக்கப்படும் பரம்பரை அலகு மற்றொரு அந்நிய கலத்தினுள் வெற்றிகரமாகப் புகுத்தப்பட்டு அக்கலம் பெருகும் போது குறித்த பரம்பரை அலகும் பல்கிப் பெருகும் அதோடு குறித்த பரம்பரை அலகு குறிப்படுத்தும் புரதமும் உருவாக்கப்படும். இதனால் இச் செயற்பாடு பரம்பரை அலகுப் பெருக்கம் (Gene cloning) எனக் குறிப்பிடப்படும்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் இரு வெவ்வேறான DNA மூலக்கூற்றுப் பாகங்கள் ஒன்று கலக்கப்படுவதனால் மீளச் சேர்ந்த DNA உருவாகும் (Recombinat DNA) இவ்வாறு உருவாகும் கலப்பு DNA, Chimeral DNA எனப்படும். எனவே இப்பொறிமுறை DNA மீளச்சேர்க்கைத் தொழில்நுட்பம் எனவும் குறிப்பிடப்படும்.

பிறப்புரிமைப் பொறியியலின் வலுமிக்க கருவிகளாக (Tools) Restriction Endonuclease நொதியங்கள் கருதப்படுகின்றன. இது DNA யின் இரட்டைச் சங்கிலியை குறித்த மூலகங்களிற்கு இடையே ஒட்டும் முனைவுள்ளதாக / மட்டமான முனைவுள்ளதாக ஒட்டும். இவை கண்டுபிடிக்கப்பட்ட பின்னரேயே இத்துறையில் துரித வளர்ச்சி காணப்பட்டுள்ளது. இரு DNA மூலக்கூறுகளை ஒன்றாக இணைப்பதற்கு DNA - Lygase என்னும் நொதியம் பயன்படும்.

ஒரு அங்கியின் பரம்பரை அலகினை வேறு ஒரு இன அங்கியின் கலத்தினுள் அறிமுகஞ்செய்வதன் மூலம் உருவாக்கப்படுவது பிறப்புரிமை மாற்றம் செய்யப்பட்ட உயிரினம் (GMO ஆகும்) இவை பயிர்த்தாவரங்களாக பண்ணை விலங்குகளாகப் பயன்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DNA ஒரு இரசாயனப் பொருளாகும். அது 90°C யில் ஒடுங்குவதன் மூலம் இயல்பு மாற்றம் (Renaturation) செய்யப்படக்கூடியது. அதோடு கலப்பிழிச்சாறில் இருந்து அதித மையநீக்கல் (Ultra Centrifucation) மூலம் பிரித்து வேறாக்க முடியும். இவ்விதம் வேறாக்கிய DNA சிறுதுண்டுகளாக நறுக்கப்பட்ட பின்பு கலமின்னயம் (gel electrophoresis) மூலம் நீளத்தின் அடிப்படையில் ஒழுங்குபடுத்தப்படும்.

இயல்பு மாற்றம் என்பது தனியிழையாக்கிய DNA ஆனது Nitrocellulose தாளில் ஒட்டிக் கொள்ளும். இவ்வாறு DNA தனியிழைகளை Nitrocellulose தாளிற்கு இடம்மாற்றும் செயன்முறை Southern இன் ஒற்றுதல் எனப்படும். சமதானப் பொசுபரசுவினால் குறிப்பிடப்பட்ட குறுகிய தனியிழை கொண்ட DNA மூலக்கூறு DNA - Probe எனப்படும். இது அதன் நிரப்பும் இழையை தேடிக்கண்டு பிடிக்கப்பயன்படும். அதோடு பிறப்புரிமை ரேகைப்பதிவிலும் பயன்படும்.

நவீன மருத்துவத்துறையில் Interferons, Vaccines, Antibodies, Hormones போன்றவற்றை ஆக்குவதில் இத்துறை பயன்படும். நவீன தோட்டக் கலையில் அதிக விளைச்சல் தரக்கூடிய, பீடை எதிர்ப்புடைய களை நாசினிகளுக்கு எதிர்ப்புடைய தாவரங்களை ஆக்குவதில் பிறப்புரிமைப் பொறியியல் பயன்படும்.

தற்போது உயிரியல் பரிகாரத்தின் மூலம் சூழலை முகாமிப்புச் செய்வதில் இத்துறை பெரிதும் முக்கியத்துவம் பெறுகின்றது. குறிப்பாக பிறப்புரிமைமாற்றம் செய்யப்பட்ட நுண்ணங்கிகளை (Superbus) பயன்படுத்தி திண்மக் கழிவுகள், எண்ணைச் சிதறல்கள் (Oil Spells) பார உலோகக் கழிவுகள் என்பன நச்சற்ற பதார்த்தங்களாக மாற்றம் செய்யப்படுகின்றது.

இன்றைய அதிகரித்துச் செல்லும் சனத்தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தி அதிகரிப்பதில் தணிக்கப் புரத உணவு (Scp) பெரிதும் முக்கியத்துவம் பெறுகின்றது. குறிப்பாக Methyllophillus Methylotropas என்ற பக்ரீயா பிறப்புரிமை மாற்றத்துக்கு உட்படுத்தி SCP ஆக்கப்படுகின்றது.

**சுப்பிரமணியம் சுலக்ஷியா**
2010 விஞ்ஞானப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் சுவைத்ததும்.... உங்களுடன் பகிர்வதும்

**மனித உடல் பற்றிய அபூர்வ தகவல்கள்**

- பூரண ஆயுள் என்பது 120 வருடங்கள் ஆரோக்கியமாக வாழ்வது
- ஒரு தலைமுறை என்பது 33 ஆண்டுகளைக் குறிக்கும்
- மனித முகத்தில் 14 எலும்புகள் உண்டு
- மனித மூளையில் 6g அளவிற்கு தாமிரம் உண்டு
- மனித உடலிலுள்ள நரம்புகளின் மொத்தநீளம் சுமார் 72m
- நமது இரத்தம் ஒரு நாளில் 30கோடிkm பயணம் செய்கிறது.
- நுரையீரல் ஒரு நாளைக்கு 23,040 முறைகள் சுவாசத்தை உள்ளெடுத்து வெளிச் செலுத்துகின்றது.
- நமது இதயம் ஒரு நாளில் 1,03,689 முறை துடிக்கின்றது
- மனித நாக்கில் உள்ள சுவை அறியும் செல்கள் 3ஆயிரம்
- உடலிலுள்ள மின்சாரத்தின் அளவு 25w
- சராசரி மனிதனின் உடலில் ஓடும் இரத்தத்தின் அளவு *5l*
- கைரேகையைப் போலவே நாக்கில் உள்ள வரிகளும் ஒவ்வொருவருக்கும் வேறுபடும்
- மனித உடலில் சதை அழுத்தம் அதிகம் உள்ள பகுதி நாக்கு.
- 900 பென்சிலை தயாரிக்கும் அளவிற்கு காபன் சத்து உண்டு.
- மனித உடலில் மிகவும் பலமானது விரல் நகம்

**உயிரினங்களில் விசித்திரங்கள்**

- இறால் மீனுக்கு இதயம் அதன் தலையில் உள்ளது
- கடலில் வாழும் நட்சத்திர மீன்களின் உடலில் மூளை என்ற பகுதி கிடையாது
- ஓணான்களால் இரண்டு கண்ணில் இரண்டு வெவ்வேறு காட்சிகளைக் காணமுடியும்.
- வெட்டுக்கிளிக்கு காதுகள் காலில் உள்ளது.
- நண்டுகளுக்கு பற்கள் வயிற்றில் உள்ளன.
- நண்டு பக்கவாட்டில் நடக்ககூடியது
- பெண் பட்டாம்பூச்சிகள் முட்டையிட்டவுடனே இறந்துவிடும்
- மிகப்பெரிய விலங்கு நீலத்திமிங்கிலம்
- சீனாவில் தான் முதன் முதலில் தங்கமீன் காணப்பட்டது.
- வாத்துக்கள் நீரில் வட்டமடித்துக் கொண்டே தூங்கும்
- ராபின் இனப் பறவை பாடிக் கொண்டே தூங்கும்
- பாம்பு கண்ணைத் திறந்து கொண்டே தூங்கும்.
- டொல்பின் ஒரு கண்ணை மட்டும் திறந்து கொண்டே தூங்கும்
- வரிக்குதிரை நின்று கொண்டே தூங்கும்
- மாடு,ஒட்டகம் அசை போட்டுக் கொண்டே தூங்கும்.
- கோழிகள் நின்று கொண்டே தூங்கும்.
- குரங்குகள் மரத்தில் தொங்கிய படியே தூங்கும்.

**மதுமிகா இரவீந்திரராஜா**
பழைய மாணவி
மெதடிஸ்த மகளிர் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AWARD FOR THE UNIVERSITY ENTRANCE

2007



Miss. Dilaxshana Keerthidas
Faculty of Computation Management - 2007
University of Peratheniya
District 4th Rank



Miss. Kirishani Kannathasan
Fine Arts - 2007
University of Jaffna

2008



Miss. Dilani Thanaraj
Commerce



Miss. Nagarani Manogaralingam
Arts



Miss. Thavamalar Kalimuthu
Commerce



Miss. Fathima Nooha Haliloor Rahuman
Bio Science

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல்களினூடாக உலகைக் காண்பவன் வெற்றிகரமாக வாழ்க்கையைக் கொண்டு நடத்துபவனாவான்

"வாசிப்பு மனிதனை முழுமை அடையச் செய்கின்றது" நுண்மதியாற்றலையும் திறன்களையும் மனிதனிடையே வாசிப்பு வளர்க்கிறது. வாசிப்பின் பழக்கத்தை அதிகரிப்பதன் மூலம் வாழ்க்கையின் குறிக்கோள்களைப் பெற்றுக் கொள்ளமுடியும். வாழ்க்கைக்கும் கல்விக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. வாழ்க்கைக் குறிக்கோள்களை அடைவதற்கு வாசிப்பின் மூலம் கல்வி அறிவை வளர்த்து வாழ்க்கைக் குறிக்கோள்களை நாம் அடைய முடியும். "மனிதத் தன்மையினை மனிதன் பெறத் துணையாக விளங்குவது கல்வி" என ஆங்கிலக் கல்வியறிவாளர் வில்லியம் வேட்ஸ்வர் கல்விக்கு வரையறை தந்தார். இவ்வாறு இந்த மனிதத் தன்மையினை கல்வியறிவு மூலம் பெறுவதற்கு வாசிப்பு மிக முக்கியமாகும்.

இயற்கையுடன் இணைந்து நிகழ்ந்த மனித இனத்தின் நுண் அறிவுச் செயற்பாடுகளினூடாக தோற்றம் அளித்ததே கல்வி அறிவாகும். மனிதனின் நுண் அறிவுச் செயற்பாடுகளை அதிகரிப்பதற்கு நாம் அதிகமாக வாசித்தால் கல்வி அறிவும் அதிகரிக்கும், நுண் அறிவுச் செயற்பாடுகளும் அதிகரிக்கும். கல்வியறிவு என்பது மனிதச் செயல்களினாலும் சமுதாய அமைப்புக்களினாலும் வளர்ச்சியடைந்த தொன்றாகும். மனிதச் செயல்கள் எனும் போது அதில் முக்கியம் பெறுவது வாசிப்பே. எனவே வாசிப்பதனால் நன்மைகள் அதிகமே உள்ளன.

" மக்களுக்குரிய பெருமித வாழ்க்கையைக் கொடுக்கும் நான்கு விடயங்களுள் கல்வியும் ஒன்று" எனத் தொல்காப்பியர் கூறியுள்ளார்.

**" கல்வி தறுகண் இசைமை கொடையெனச்**
**சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே"**

என்ற தொல்காப்பியச் சூத்திரமூலம் இதனை வெளிப்படுத்தியுள்ளார். மக்களின் வாழ்க்கை பெருமிதமுடையதாக இருக்க வேண்டுமாயின் அவர்கள் தம் கல்வியறிவை விருத்தி செய்யவேண்டும். இவ்வறிவு விருத்தியை நாம் வாசிப்பின் மூலமே பெறமுடியும். வாசிப்பு எமது வாழ்க்கையைப் பெருமிதமுடைய தாக்குகின்றது.

மனித சமுதாயத்தின் மாற்றத்திற்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும், சமூக அசைவிற்கும் அறிவு வளர்ச்சி முக்கியமாகத் தேவைப்படுகிறது. இதனை மனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயத்திற்கு அளிப்பது வாசிப்பு. கிரேக்க தத்துவ ஞானி பிளேட்டோ "உண்மை, நன்மை, அழகு இவை மூன்றினையும் உணர்த்தும் கல்வியே கல்வி" என்றார். மனிதன் வாசிப்பின் மூலமே இவற்றைப் பெறுகிறான். சமுதாயத்தில் உண்மை , நன்மை அழகுடையவனாக விளங்குகிறான். "உடல், உளம், ஆன்மா போன்றவற்றின் இயற்கைத் தன்மைகளை வெளிக்கொணர்ந்து விளக்கம் பெறத்தூண்டுவதே கல்வி" எனக் காந்தி அடிகள் கூறினார். பாடப்புத்தக கல்வியுடன் மட்டும் இருக்காது மாணவர்களும் சரி ஏனையோரும் சரி வாசிக்க வேண்டும். கல்வியறிவு மக்களின் வாழ்க்கையுடன் இணைந்ததாகவும் அதனை உயர்த்துவதாகவும் அமையவேண்டும் என்ற காந்தியின் கனவு நனவாக வேண்டுமாயின் எமது சமூகத்திலிருந்து விலகிச் செல்லும் வாசிப்புப் பழக்கத்தை அதிகரித்தால் அது எமது வாழ்க்கையை உயர்த்தும்.

வாசிப்பு மனிதகுலத்தின் மேம்பாட்டிற்கான கருவியாக விளங்குகிறது. மனிதப் பண்புகள் எனும் சிறப்புப்பண்புகளை வாசிப்பு ஒவ்வொருவரையும் பெறச் செய்கிறது. வாசிப்பு மனித விழுமியங்களை மேம்பாடடையச் செய்கிறது. மனிதனது நுண்மதி ஆற்றல்களையும் திறன்களையும் விருத்தி செய்கிறது. மனிதனது உலக நோக்கை விரிவடையச் செய்கிறது. மனிதனது பணிகள் சமூகத்திற்கும் பரந்த உலகத்திற்கும் பயன்படவேண்டுமாயின் அவனது வாசிப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கவேண்டும். ஒருவனது வாழ்க்கையை ஒழுக்கமுள்ள வாழ்க்கையாகப் பர்ணமிக்கச் செய்வது அறநூல்களும் தெய்வீகநூல்களும் தரும் அறிவே இவ்வறிவினை அறநூல்கள் தெய்வீகநூல்களை வாசிப்பதன் மூலம் மனிதன் பெறுகிறான்.

"மனிதனிடம் ஏற்கனவே பொதிந்திருக்கும் முழுமைபெற்ற நிறைவினை மலரச் செய்வதே கல்வி" எனச் சுவாமி விவேகானந்தர் கூறினார். இந்தப் பூரணத்துவத்தை மனிதன் வாசிப்பின் மூலமே பெறுகிறான்.

இன்று நாம் வாழும் இச் சமுதாயத்தில் நற்பண்புகள் நலிவடைந்து வருகின்றன. இலக்கிய நூல்களைப் போல ஏனைய நூல்களை வாசிப்பதில் மக்கள் காட்டும் ஆர்வம் குறைந்து வருவதும் இதற்கு ஒரு காரணமாகும். நூல்களை வாசிப்பதன் மூலம் வாழ்விற்கான அனுபவங்களையும் ஆத்மரீதியான அனுபவங்களையும் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும். நவீன தொடர்புச் சாதனங்களின் மூலம் தகவல்களைத் தேடுவதில் மக்கள் ஆர்வம் காட்டி வருவதால் நூல்களை வாசிப்பதை மக்கள் விலக்கி வருகின்றனர். இத்தொடர்புச் சாதனங்கள் பற்றிய அறிவைப் பெறுவதற்கும் வாசிப்பு முக்கியம் பெறுகிறது. இதனால் வாசிப்புப் பழக்கத்தைப் பாடசாலைக் காலத்திலிருந்தே மாணவர்களிடையே ஏற்படுத்தி அறிவை வளர்க்க வழி செய்யவேண்டும்.

சமுதாயத்தில் பண்பாட்டு மரபினை வாசிப்பு இளம் தலைமுறையிருக்கு உணர்த்துகிறது. புதுக் கருத்துக்கள், புத்தாக்கங்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு வாசிப்புத் தூண்டுதல் அளிக்கிறது. வாசிப்பின் மூலம் பெற்ற அறிவினால் சமுதாயத்துடன் மனிதன் இலகுவாகப் பொருந்தி வாழமுடியும். மனிதன் தனது ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையில் வாசிப்பின் மூலம் கழிக்கமுடியும். "இதனை இதனால் இதன் கண் முடிக்கும் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்ந்து அதனை அவன் கண்விடல்” என்பது வள்ளுவர் குறட்பா. ஒருவன் கல்வியினால் பெற்ற அறிவை ஆய்வு செய்யாதுவிட்டால் அதனை அவன் கண்விடமுடியாது என்பது அதன் கருத்தாகும். இவ்வாய்வினை ஒரு வாசிப்பின் மூலமே பெறமுடியும். எனவே வாசிப்பு மனிதனுக்கும் பல நன்மைகளை அளிக்கிறது.

அறிவை வளர்க்கவும், ஆற்றல்களை வளர்க்கவும், உணர்ச்சிகளைப் பயன்படுத்தவும், மக்கள் வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்து கொள்ளவும், மனிதன் தனது சமூக நடத்தையை மாற்றியமைத்துக் கொள்ளவும். மக்களில் உள்ளடங்கியிருக்கும் ஆண்மைப் பண்புகளைப் படிப்படியாக முழுமையாக வெளிப்படுத்துவதற்கும் வாசிப்புப் பெரிதும் நன்மையளிக்கிறது. வாசிப்பு சமூக ஏற்றத்தாழ்வுகளை நீக்கிப் பொதுவுடமைக் கருத்துக்களைச் சமூகத்தில் விதைக்கவல்லது. சமுதாய அனுபவங்கள் பரிமாற்றம் செய்யப்படுவதற்கும் தனியாள் ஆளுமையை வளர்ப்பதற்கும் வாசிப்பு வழிவகுக்கிறது. தனியார் சிறப்புறச் சமுதாயம் சிறப்புறும். சமூக முன்னேற்றம் ஏற்படும். இவை எல்லாவற்றையும் தொகுத்து வழங்கி நன்மை அளிப்பது வாசிப்பே. ஆகவே வாழ்நாள் முழுவதும் வாசியுங்கள். வாசிப்பினால் மனித சமுதாயம் பூரணம் அடையவேண்டும்.

**எமிசர்மிலா அன்ரனி நிரஞ்சன்**
**10B**

# நானும் கிளியும்

வண்ண வண்ண கிளியாரே - ஏன்
வண்ண மரத்தில் ஏறுகிறாய்
பழத்தைக் கொத்தித் தின்னவா?
ஆம் ஆம் ஆம்

அழகு கொஞ்சும் கிளியாரே
எனக்கும் பழம் தருவாயா?
எச்சில் நாவில் ஊறுதே!
சரி சரி சரி

அன்பு மிக்க கிளியாரே
அருகில் நீயும் வருவாயா?
ஆசையுடன் இருவரும் - பேசிப்
பேசிச் சிரிக்கலாம்.

**ச. சௌமியா சசிகரன்**
**தரம் - 4B**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்கள் எம்மிடையே வேற்றுமை இல்லை

நாங்கள் அனைவரும் சிறுவர்கள் எம்மிடையே எவ்வித வேறுபாடுகளும் இல்லை. எமது நாடு 18 வயதிற்கு உட்பட்ட அனைவரையும் சிறுவர்களாகக் கருதுகின்றது. பொதுவாக எல்லா நாடுகளும் 16 அல்லது 18 வயதிற்கு உட்பட்டவர்களை சிறுவர்களாக கருதுகின்றது. அந்த வகையில் எந்நாடாகவிருந்தாலும் எந்தச்சமயத்தவராக இருந்தாலும் எந்த இனத்தவராக இருந்தாலும் 18 வயதிற்கு உட்பட்ட அனைவரும் சிறுவர்களே.

சிந்தனை, செயற்பாடு என்பவற்றால் நாங்கள் அனைவரும் ஒத்ததன்மையைக் கொண்டுள்ளோம். எந்த மொழி பேசக்கூடியவராக இருந்தாலும் நாங்கள் பேதமின்றி விளையாடுவோம். பாடசாலையில் நாங்கள் அனைவரும் ஒற்றுமையாகக் கல்வி கற்கின்றோம். சிறுவர்கள் என்ற வகையில் எமது வகுப்பாசிரியர் எங்கள் அனைவரையும் ஒரே மாதிரியாகவே வழிநடத்தி அரவணைக்கின்றார். பாடசாலை விளையாட்டுப் போட்டிகளில் கூட நாங்கள் ஒற்றுமையாகப் பங்கேற்கின்றோம்.

சிறுவர்கள் என்ற வகையில் அனைத்து சிறுவர்களினதும் உரிமைகளை நாங்களும் அனுபவிக்க உரிமையுடையவர்கள் சிறுவர்களாகிய எமக்குள்ள உரிமைகள் உலகின் அனைத்து சிறுவர்களுக்கும் உரித்தானவை ஆகும்.

போசாக்கு உணவு, கல்வி, விளையாட்டு பாதுகாப்பு, அபிவிருத்தி என்ற அனைத்து விடயங்களும் எமது முக்கிய உரிமைகளே.

எமது உரிமைகளை பாதுகாக்கவும், எம்மைப் பராமரிக்கவும் எமது நாட்டிலும் சர்வதேச நாடுகளிலும் பல சட்டங்கள் உள்ளன. நாங்கள் சுதந்திரமாக சிந்திப்பதற்கும் சுதந்திரமாக விளையாடுவதற்கும் உரிமை உடையவர்கள். எந்த நிலையிலும், எப்போதும் நாங்கள் இன, மத, மொழி பேதமின்றி ஒற்றுமையாக வாழ்வோம்.

**லீனா ஸ்ரீதரன்**
**தரம் - 5A**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூகோள வெப்பமுறல்

உலகளாவிய ரீதியில் உருவாகியுள்ள சுற்றாடல் பிரச்சனைகளாக அமிலமழை, பூகோள வெப்பமுறல், ஓசோன் படை சிதைவடைதல் போன்றவற்றைக் கூறலாம். இவற்றுள் பூகோள வெப்பமுறல் மிகப்பிரதான சுற்றாடல் பிரச்சனையாகும். பூகோள வெப்பமுறலுக்கான காரணிகளையும், பூகோள வெப்பமுறலினால் ஏற்படும் விளைவுகளையும் எடுத்து நோக்குவோம்.

வளிமண்டலத்தின் மாறன்மண்டலத்தில் உயரம் அதிகரிக்கும் போது வெப்பநிலை குறைகின்றது. இதன் காரணம் பூமியின் மேற்பரப்பில் பட்டுத் தெறிப்படையும் வெப்பத்தினாலேயே இப்படலம் வெப்பமாக்கப்படுகின்றது.

படைமண்டலத்தில் உயரம் அதிகரிக்கும் போது வெப்பநிலை அதிகரிக்கின்றது. இதன் காரணம் இப்படையில் காணப்படும் ஓசோனும் நீராவியும் சூரியனிலிருந்து வரும் UV கதிர்களை உறிஞ்சுவதனாலாகும். ஓசோன் படைப் போர்வையானது புவியில் உயிரினங்கள் தொடர்ந்து நிலைத்திருப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றது.

படை மண்டலத்திற்கு மேலான இடைப்பகுதியில் Mesosphere கதிர்களை உறிஞ்சும் கூறுகள் இல்லை. எனவே உயரம் அதிகரிக்கும் போது வெப்பநிலை குறைவடைகின்றது.

இதற்கு அடுத்தபடியான அயன்மண்டலத்தில் ஏறத்தாழ 80km இற்கு மேலாக மின்னேற்றமுடைய துணிக்கைகளினால் அதாவது அங்கு காணப்படும் அயன்களினால் UV கதிர்கள் உறிஞ்சப்படுவதால் வெப்பம் அதிகரிக்கப்படுகிறது.

எமது சூரியன் ஒரு நட்சத்திரமாகும். இது 70% ஐதரசனையும் 28% ஈலியத்தையும் கொண்டது. ஐதரசன் அணுக்கள் இணைந்து ஈலியமாக மாறுகின்ற அணுக்கருத்தாக்கத்தி னாலேயே சூரியனிலிருந்து வெளியேறுகின்றது.

அண்மைக்காலங்களிற் காடழித்தல்,நிலநெய்கள், எரிபொருட்களின் பயன்பாடு போன்றவற்றினால் வளிமண்டலத்திற் காபனீரொட்சைட்டின் செறிவு அதிகரித்து வருகின்றது. இது போலவே மீதேன், கந்தகவீரொட்சைட்டு, ஐதரசன் சல்பைற்று போன்ற வாயுக்களும் அதிகரிக்கின்றன. மீதேன் கால்நடைகளின் கழிவுகளிலிருந்தும் வயல்நிலங்களிலிருந்தும் உண்டாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளிமண்டலத்தில் உயர்செறிவில் காணப்படும் பல அணு மூலக்கூறுகளாகிய காபனீரொட்சைட்டு, மெதேன், குளோரோ புளோரோ காபன் (CFC) , நீராவி போன்ற வாயுக்கள் பச்சைவீடாகத் தொழிற்படுகின்றன. சூரியனினால் கதிர்க்கப்பட்டு பூமியை அடையும் வெப்பத்தின் பெருமளவு வீதம் பூமியிலிருந்து தெறிப்படைகின்றன. ஆனால் பச்சைவீட்டு வாயுக்களின் அதிகரிப்பினால் இக்கதிர்கள் பூமியை நோக்கி மீளவும் தெறிப்படைகின்றன. இச்செயற்பாடு பூமியை வெப்பமடையச் செய்கின்றது.

சூரியனின் ஒளிக்கற்றைகள், வெப்பக்கற்றைகள் போன்றவை பச்சைவீட்டு வாயுக்களினாற் தேக்கப்படும் ஒளிக்கதிர்கள் வெப்பமாக மாறித் தேக்கப்படும். வளி, நீர். தரை என்பவற்றின் வெப்பம் அதிகரிக்கும். சூழல் வெப்பநிலை படிப்படியாக அதிகரிக்கும். இதில் ஓசோன் படலத்திலேற்படும் பாதிப்பும் பங்களிப்புச் செய்யும். முழு உலகமும் வெப்பமுறலுக்குள்ளாகும்.

இதனால் துருவப்பகுதியிற் காணப்படுகின்ற பனிப்பாறைகள் உருகும். கடல்நீர்மட்டம் உயரும். கடற்கொந்தளிப்புக்கள் , கடற்கோள்கள், கடற்பெருக்குகள் போன்றவை ஏற்படும். தரையிலுள்ள தாழ்வான பகுதிகள் நீரினுள் அமிழும். கடல்நீரின் வெப்பநிலை உயரும். கடலில் குறித்த காலங்களில் எல்நினோ விளைவு ஏற்படும். எல்நினோ என்பது ஆண்குழந்தையைக் குறிக்கும். ஆண் குழந்தை ஒன்றின் வடிவில் பேரலைகள் பொங்கியெழும். அவுஸ்திரேலியாவிற்கு அண்மையிலான மேற்கு பசுபிக் சமுத்திரத்தில் உள்ள வெப்பமான நீர்ப்பிரவாகம் கிழக்கு பசுபிக் சமுத்திரத்தினை நோக்கி ஓடி பெருநாட்டிற்கு அணித்தான பகுதியில் மேற்படி ஜலப்பிரவாகப் பேரலைகள் உருவாகும். 3-7 ஆண்டுகளுக்கு ஒரு தடவை இது நடைபெறும். காற்றோட்டங்களும் நீரோட்டங்களும் மாறுபடும். பருவகாலங்கள் பாரியளவு மாற்றங்களுக்குள்ளாகும். கோடைகாலங்களிற் கடும் வரட்சியும் மாரிகாலங்களிற் பெருமழையும் ஏற்படும். தரைமேற் தாவர ஒழுங்கமைப்புகளிற் பாரியமாற்றங்கள் ஏற்படும். பயிர்த்தாவரங்களின் விளைச்சல் குறையும். இவ்விடங்களில் காணப்படும் உயிர்ப்பல்வகைமை பாதிப்பிற்குள்ளாகும் முருகைக் கற்பாறைகள், முருகைத் தொடர்கள் பாதிக்கப்படும்

எனவே குளோரோ புளோரோ காபன் போன்ற தீங்கான பொருட்களின் பாவனையைத் தடைசெய்வதன் மூலமும் பூகோள வெப்பமுறலுக்குதவும் வாயுக்களை திண்மச் சேர்வைகளாக மாற்றுவதன் மூலமும் பூகோள வெப்பமுறலைக் கட்டுப்படுத்தலாம்.

**(2008ம் ஆண்டு நடைபெற்ற வலயமட்ட விஞ்ஞான கட்டுரைப்போட்டியில் மூன்றாம் பரிசைப் பெற்றுக் கொண்டது)**


**ரோகிணி காந்தரூபன்**
**2011 விஞ்ஞானப்பிரிவு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மாணவர்களின் பெறுபேற்று வீதம்

## O/L GRAPH




| YEAR | PASS PERCENTAGE |
|---|---|
| 2004 | 52.72% |
| 2005 | 74% |
| 2006 | 64% |
| 2007 | 44.83% |
| 2008 | 58.82% |

## A/L GRAPH





| | COMMERCE | ARTS | SCIENCE |
|---|---|---|---|
| 2004 | 12 | 20 | 3 |
| 2005 | 10 | 15 | 2 |
| 2006 | 8 | 19 | 2 |
| 2007 | 6 | 17 | 3 |
| 2008 | 7 | 22 | 3 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் அடைவு மட்டம்-5

| வருடம் | தோற்றிய மாணவர் தொகை | புள்ளிகளின் 100க்குமேல் பெற்ற மாணவர் தொகை | மாணவர் விகிதாசாரம் | சித்தி பெற்றோர் |
|---|---|---|---|---|
| 2004 | 35 | 22 | 62.85% | 11 |
| 2005 | 26 | 5 | 19.23% | 4 |
| 2006 | 32 | 5 | 15.62% | 5 |
| 2007 | 40 | 21 | 55.17% | 7 |
| 2008 | 29 | 16 | 55.17% | 10 |






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது பரிசளிப்பு விழா மலர் சிறப்புற வெளிவருவதற்கும் இவ்விழா இனிதே நடைபெறுவதற்கும் உறுதுணையாக இருந்தவர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மலர் வெளியீட்டுக்கு வாழ்த்துச்செய்தி வழங்கிய அனைவருக்கும்

மலர் சிறப்புற ஆக்கங்கள் நல்கிய அனைத்து நெஞ்சங்களுக்கும்

சகல உதவிகளையும் வழங்கிய பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருக்கும், பழைய மாணவர் சங்கத்தினருக்கும்

மற்றும் நிதியுதவிகள் வழங்கிய பெற்றோர்கள், நிறுவனங்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும்

பல்வகை உதவிகள் புரிந்த கல்லூரியின் கல்வி சாரா ஊழியர்கள் அனைவருக்கும்

எமது கல்லூரி மலரை மிகச் சிறப்பாக அச்சிட்டு உதவிய அஸ்ரா பிரின்டர்ஸ் நிறுவனத்தாருக்கும்

எமக்கு பலவழிகளிலும் உதவி புரிந்த திருமதி L.C. திருக்குமாரநாதன் ஆசிரியர் அவர்களுக்கும்,

அச்சுப்பொறிப்பு வேலையில் சிறந்த பங்களிப்புச் செய்த செல்வி.இ.மதுமிகா அவர்களுக்கும்

இம்மலர் உவப்போடு வெளிவர சகல வழிகளிலும் முன்னின்று உழைத்த ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org